
# முடிவில்லாத ஆரம்பங்கள்



சு. சிவராசா



# என் தந்தையாருக்குக் காணிக்கை

என்னோற்று என் தந்தை எனைப் பெற்றார்
பின்போற்றி வளர்த்தார் குறைவின்றி
தன்பேற்றில் அந்தகனாய் ஆனேன் பின்னும்
தன் நெடும் பயணம்வரை ஊன்று கோலுமானார்
உளமில்லா உலகத்தில் உந்தன் பிள்ளை
உலைகின்றேன் அன்புசெய்ய ஆருமே இல்லை ஐயா
அழுகின்றேன் கதைமலர் கண்ணீரோடு
கைதொழுது காலடியில் காணிக்கை ஆக்குவனே.

# வாழ்த்து

## என்னை வழிநடத்தும் விநாயகர்

என் மனக்கோயில் இடங்கொண்ட யானைமுக
துன்ப வினை தொலைக்கும் தூமணியே - மின்புவியில்
நான் வாழ முன்நின்று நற்கருணை செய்திடுவாய்
வான் பாயும் வாய்க்கால் மருங்கு.

## எனது தோன்றாத்துணை முருகன்

கூனற் பிறைசூடும் பெம்மான் குமரகுகா
வானோர் சிறைமீட்ட வள்ளலே - ஏனோரும்
கூடுமன்பால் கூவி அழைத்தால் மயில்மீதே
தாடி நீ வாராய் நயந்து.

## எனது தமிழாசான் சு. வே.

நூலும் பொருளும் நுழைபுலத்தின் நுண்சீரும்
வாலறிவும் வண்மையும் வாக்குடன் - கோல
இலக்கண லக்கியமுங் கொண்ட ஆசான்
குலமரபிற் கும்பிடுவன் யான்.

## எனது வாழ்வும் உயிருமாம் தமிழ்

தேனும் பசும்பாலும் தெள்ளமுதும் தேங்குசுவை
வானும் நிலனுமப் பாலுமாய் - ஆனமுனை
என்னுடலும் என்னுயிரும் என்வாழ்வும் எல்லாமாய்
பின்னிய நற்றமிழைப் பேணி.

# அணிந்துரை

முடிவில்லாத ஆரம்பங்கள் என்னும் இந் நெடுங்கதை யாழ்ப்பாணத்தில் இன்று வாழும் ஒவ்வொருவருடைய அனுபவங்களையும் உள்ளடக்கியதொன்று.

"வலிகாமம் இடம்பெயர்ந்து தென்மராட்சிக்குள் வந்த போது நடந்தவை, இங்குள்ள மக்கள் ஒவ்வொருவர் மனத்திலும் நீங்காத நினைவுகள்; மறக்கமுடியாத அனுபவங்கள். அந்த அனுபவக் கடலில் மூழ்கி, முக்குளித்து வெளியே வந்த ஒருவன் குடித்த உப்புத் தண்ணீரை எல்லாம் வாந்தி எடுத்தான். அவன் வெளியே கக்கிய அந்தச் சிறிதளவு நீர்தான் இந்த முடிவில்லாத ஆரம்பம்.', என்று கதை எழுதிய ஆசிரியர் அக்கதையின் கரு என்ன என்பதை உருவகமாகக் கூறியுள்ளார்.

இராமநாதன் - யசோதா - ரமா குடும்பம் 1995இல் வலிகாம இடப்பெயர்வின்போது இடம்பெயர்ந்து தென்மராட்சி, கிளிநொச்சிப் பகுதிகளிலே பல இன்னல்களுக்குள் வாழ்ந்து இறுதியில் கடற்படையின் சூட்டினால் கிளாலிக் கூடாகச் சென்ற வள்ளங்கள் இரண்டு தண்ணீரில் மூழ்க ரமா தந்தையையும் தாயையும் இழந்த அநாதையாகிறாள். இக்கதையினூடாக வலிகாமம் இடப்பெயர்வின்போது இடம்பெற்ற பல நிகழ்வுகளை ஆசிரியர் எளிமையான, யதார்த்தமான முறையிலே விவரிக்கிறார். திரு. க. சிவராசா உண்மைச் சம்பவங்களை வைத்துக் கதையாகப் பின்னி இலக்கிய வடிவமாகத் தரும் ஆற்றலுடையவர் என்பதற்கு இந்நெடுங் கதை சான்றுகாட்டுகின்றது. 'ஒப்பரேஷன் லிபரேஷன்' இராணுவ நடவடிக்கையின்போது எல்லாவற்றையும் இழந்த மகாலிங்கத்தார், முன்பின் அறியாவிட்டாலும் இராமநாதனுக்கு உதவ முன்வந்த கந்தசாமி என்னும் பாத்திரங்கள் கதையைப் படித்து முடித்த பின்னரும் மனத்தில் நிற்கின்றன.

சாந்தி என்னும் பாத்திரத்தைக் கதாசிரியர் மிக நேர்த்தியாகப் படைத்திருக்கிறார். இராமநாதனை அவள் முதன் முதலாகக் கண்டபொழுது அவள் மனதிலேற்பட்ட 'இனம்

புரியாத மகிழ்ச்சி', அவன் திருமணமானவன் என்று அறிந்த போது ஏற்பட்ட அதிர்ச்சி, எனினும் தன்னை அவள் இசைவு படுத்திக் கொண்ட நிலை கதாசிரியராலே நன்றாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது.

திரு. சிவராசாவின் 'முடிவில்லாத ஆரம்பங்கள்' என்னும் இக்கதையில் பெயர்சூட்டாமல் வரும் பல்லாயிரம் பாத்திரங் களுள் நானும் ஒருவன் என்ற வகையில் இக்கதை என் மனத்தைத் தைக்கின்றது. ஆசிரியருக்கு என்னுடைய பாராட்டு கள். திரு. ம. சந்திரபோஸ் ஓர் அற்புதமான மனிதர்; அமைதி யாக உதவுபவர். இக்கதையை அச்சிட்டு வெளியிடும் அவருக்கு எங்கள் நன்றி. இந்நூலுக்கு இச்சிறு அணிந்துரையை எழுது வதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ்
முதுநிலைத் தமிழ்ப் பேராசிரியர்
பீடாதிபதி, பட்டப்பின் படிப்புகள் பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,

# மெள்ளத் திறந்தது கதவு

கதவு திறந்தால் காட்சி தெரியும். இங்கே உள்ளக் கதவை திறந்து பார்க்கிறேன். காட்சிகள் விரிகின்றன. ஒன்றன் பின் ஒன்றாக, தொடராக அக்காட்சிகள் தொடர்கின்றன.

இந்த உலகம் இனியது; உலகில் உள்ள எல்லாமே இனியவை என்பவை பாரதியின் வரிகள். அவனது காலத்தில், அவனது நாட்டில் ஒன்றும் இனிமை வாழ்ந்துவிடவில்லை, அடிமைத் தளையும், பஞ்சமும் பசியும், மதச்சண்டைகளும், படுகொலைகளும் நடந்துகொண்டுதான் இருந்தன. இவற்றை எல்லாம் கவனிக்காமல் பாரதி இப்படி எழுதினானே என்பது வியப்பாய் இருக்கிறது அல்லவா? அதுதான் கலை உள்ளம்; கலைஞனின் உள்ளம்; குழந்தையின் உள்ளம். அது ஒரு சமயம் அழும், பின் ஆத்திரப்படும்; சிலவேளை ஆவேசம்கூடக் கொள்ளும்; ஒரு சமயம் வாய்விட்டுச் சிரித்து மகிழும்.

இன்று நமது மண்ணிலும் ஒரு போர் நடக்கிறது. இது பல ஆண்டுகளாக தொடர்கிறது. ஒரு சமயம் எல்லாம் முடிந்து அமைதி வந்துவிட்டதுபோலத்தோன்றும். திடீரென்று மறுபடி குண்டுகள் வெடிக்கும்; மீண்டும் ஒரே கதை தொடரும். இப்படி ஒரு மாயையான அமைதியிலும் நிதர்சனமான போரிலும் சிக்குண்டு நமது மக்கள் புயற்காற்றில் சிக்கிய சருகுபோல அடியுண்டு, அலைப்புண்டு அழிந்துகொண்டிருக்கிறார்கள். பிரிவும் மரணமும் இழப்பும், இடம்பெயர்வும், ஒப்பாரியும் அழுகுரலும் அன்றாட அலுவல்கள் ஆகிவிட்டன. இந்த மண் மூலைமுடுக்குகள் எல்லாமே எழுத்தில் வராத எத்தனையோ இலக்கியங்கள் இருந்துகொண்டு இறக்கின்றன.

இங்கு மட்டுமா? உலகில் துப்பாக்கிகள் வெடிக்காத ஒரு நிலத்துண்டு இருந்தால் அதைத்தான் நான் சொர்க்கம் என்று சொல்லுவேன். சொர்க்கம் என்பது மதங்கள் கூறும் ஒரு மாயா பஜார். ஆனால் நரகம் உண்மையானது; வாஸ்தவமானது; நாம் அனுபவித்துக்கொண்டிருப்பது.

இந்த வகையில் வலிகாமம் இடம்பெயர்ந்து தென்மராட்சிக்குள் வந்தபோது நடந்தவை, இங்குள்ள மக்கள் ஒவ்வொருவர் மனதிலும் நீங்காத நினைவுகள்; மறக்கமுடியாத அனுபவங்கள்.

அந்த அனுபவக் கடலில் மூழ்கி, முக்குளித்து வெளியே வந்த ஒருவன் குடித்த உப்புத்தண்ணீரை எல்லாம் வாந்தி எடுத்தான். அவன் வெளியே கக்கிய அந்தச் சிறிதளவு நீர்தான் இந்த முடிவில்லாத ஆரம்பம். அந்த நாட்களில் நடந்த சம்பவங்களை வைத்து கதையைப் பின்னியிருக்கிறேன். ஏதோ என்னால் ஆன சிறு முயற்சி.

இதனை நூலாக உருவாக்கித் தந்தவர் போஸ்கோ பதிப்பக உரிமையாளர் திரு: ம. சந்திரபோஸ் அவர்கள். இவர் ஒரு வித்தியாசமான மனிதர்: இவரோடு பழகுவதும் புதுமையான அனுபவம் தான். எல்லாப் பொறுப்புக்களையும் தானே ஏற்று இந்நூலை என் பொருட்டு அழகுற ஆக்கித்தந்திருக்கும் இவரது இலக்கிய உள்ளத்துக்கு எப்படி நன்றி சொல்வதென்று தெரிய வில்லை. வார்த்தைகளில் சொல்வது வெறும் சம்பிரதாயம் மட்டுமே. அதற்கு மேலும் ஏதோ ஒன்று இருக்க வேண்டும் என என் இதயத்தில் தெரிகிறது. அது என்னோடு மட்டும் இருக்கட்டும். வாசகர்கள் இந்நூலை வரவேற்பார்கள் என்று நம்புகிறேன். உங்கள் ஆதரவே ஒரு எழுத்தாளனுக்கு புத்தூக்க மாத்திரை.

நன்றி.

சு. சிவராசா
நூல் ஆசிரியர்.

# முடிவில்லாத ஆரம்பங்கள்

## அத்தியாயம் 1

மார்கழி பிறந்து ஒரு கிழமை ஆகிவிட்டது. இரவெல்லாம் கொட்டிய பனிக்கு ஏற்ற வெய்யில் அந்தக் காலைப் பொழுதிலேயே சுள் என்று எறித்தது. காலை எட்டுமணிக்குள்தான் இருக்கும், குழந்தை ரமா அழும் குரல் கேட்டு கிணற்றடியில் பாத்திரம் தேய்த்துக்கொண்டிருந்த யசோதா குரல்கொடுத்தாள்.

''அம்மா அம்மா, ரமா எழும்பிவிட்டாள்போலை கிடக்குது, அவளை ஒருக்காத் தூக்கு; இதுகளை அலம்பிக் கொண்டு ஓடியாறன்'' என்று ஒரே மூச்சில் சொல்லிக்கொண்டே தனது வேலையை வேகப்படுத்தினாள்.

கூடவே, பிள்ளைக்கு முகம் துடைத்து ஏதாவது கொடுக்க வேண்டும் என்ற தாய்மையின் அவசரமும் தெரிந்தது.

பின்புறமாக முற்றம் கூட்டிக்கொண்டிருந்த தாய்க்கிழவி விளக்குமாற்றை வேலியோடு சாய்த்து வைத்துவிட்டுப் பிள்ளையைத் தூக்குவதற்காகப் படியில் ஏறினாள். அதற்குள் ரமா தளிர்நடையுடன் அழுதுகொண்டு வாசற்படிக்கு வந்துவிட்டாள்;

ரமாவிற்கு ஒருவயது முடிந்து இரண்டு மாதங்கள் ஆகிறது; அவள் பிறந்தநாளை ஒக்டோபர் 27-ம் திகதி கொண்டாடி

னாள். அந்தச் சூட்டோடு முப்பதாம் திகதி கையில் அகப்பட்டவற்றைச் சுருட்டிக்கொண்டு ஓடிவந்துவிட்டார்கள்.

இவர்கள் மட்டுமா ஓடிவந்தார்கள்?

யாழ்ப்பாணத்தில் வலிகாமம் என்ற பரந்த பிரதேசத்து மக்கள் எல்லோரும் அல்லவா இரவோடிரவாக அன்று தென்மராட்சிக்கும், வடமராட்சிக்கும் ஓடிவந்தார்கள்.

பின்புறமாக உள்ள அந்த விறாந்தையின் ஒட்டுக்கு நெருங்கி வந்த குழந்தையைக் கிழவி ஓடிவந்து தூக்கினாள்.

''உனக்கு எல்லாத்துக்கும் அவசரம்; உன்ரை அவசரத்திற்கு ஓடித்திரிய நான் என்ன குமரியே? எப்பன் பிந்தி இருந்தா இப்ப படியாலை போர்த்தேங்காய் உடைச்சிருப்பாய்'' என்று கிழவி குழந்தைக்குச் சொல்லுவதுபோல தனக்குத்தானே சொல்லிக்கொண்டாள். குழந்தை தனக்கும் ஏதோ விளங்கியவள்போல கிழவியின் முகத்தைப் பார்த்தாள்.

''பெரிய மனிசிமாதிரி... முளியைப்பார் முளியை'' என்ற கிழவி, குழந்தையின் தலையைத் தடவிக்கொடுத்து கன்னத்தில் முத்தமிட்டாள். பேத்தியாரின் அன்பு முத்தத்தில் மகிழ்ந்த குழந்தை இலேசாகச் சிரித்தது.

கிணற்றடியில் கழுவிய பாத்திரங்களைக் கையில் எடுத்துக்கொண்டு அடுப்படிக்கு வந்தாள் யசோதா. அவளது வாய் அவளையும் அறியாமல் 'ரமா ரமா' என்று அழைத்தது.

''அவள் உதாலை வெளிக்கிட்டுத் தின்னவேலிக்குப் போட்டாள்; அவளுக்கு இந்த ஊர் பிடிக்கேல்லையாம்'' என்று விறாந்தைத் திண்ணையில் ரமாவை மடியில் வைத்துக்கொண்டிருந்த கிழவி சொல்லிவிட்டுச் சிரித்தாள்.

அந்தச் சிரிப்பில் ஏதோ ஒரு அர்த்தமற்ற நகைச்சுவை மட்டும் இருக்கவில்லை. அந்த வயதான தாயின் இதயத்தின் ஒரு மூலையில் ஏக்கங்களாய் முளைத்து தளிர்விட்டு வார்த்தைகளோடு பிணைந்து வெளியேறிய அங்கலாய்ப்பும் கூடவே இருந்தது.

குழந்தை விளையாட விறாந்தையும், தனியாகக் குசினியும் உள்ள வீடு, இடம்பெயர்ந்தவர்களால் நிரம்பிவழியும் தென்ம

ராட்சியில் இவர்களுக்குக் கிடைத்துள்ளதா என்று யாரும் வாயைப் பிளக்கவேண்டாம்.

இரண்டு அறைகளைக் கொண்ட அந்த வீட்டில் நான்கு குடும்பங்கள் நெருக்கியடித்துக்கொண்டிருந்தார்கள். உயிரைக் கையிற் பிடித்துக்கொண்டு ஒரே இரவில் செம்மணிப் பாலத்தைக் கடந்து வந்தபோது, திக்குத்திசை தெரியாமல் தட்டுத்தடுமாறிய போது... ஒதுங்க ஒரு கூரை போதுமானதாக இருந்தது.

ஆனால், நாட்கள் கழிய நெருக்கடிகள் இருப்பதை அவர்கள் உணரத்தொடங்கினர். எவ்வளவோ பெறுமதியான வீடு வாசல்கள், உடமைகள் எல்லாவற்றையும் விட்டெறிந்து விட்டு உயிருக்காக ஓடிவந்தவர்கள் அவர்கள்.

ஆரம்பத்தில் இருந்த பயம் நீங்கிய பிறகு அவர்களது சொந்த உணர்வுகள் தலையெடுக்கத் தொடங்கின. வேலிக்கும் கோழிக்கும் சண்டைபோட்டுப் பழக்கப்பட்டுவந்த எமது மக்கள் எப்படிச் சும்மா இருப்பார்கள்?

ஒரு பக்கம் இவர்கள் வாழ்ந்த மண்ணைப் பிடிப்பதற்காக இராணுவம் வந்துகொண்டிருக்கிறது; அவனுக்குப் பயந்து ஓடிவந்தவர்கள் தமக்குள்ளேயே வீரம் பேசிக்கொண்டார்கள்.

நான்கு குடும்பங்களும் நான்கு கோணங்கள் ஆகின.

ரமாவை மடியில் வைத்துக்கொண்டு கிழவி குரல்கொடுத்தாள். ''புள்ள, தேத்தண்ணி கலந்துபோட்டியே?''

அடுப்படிக்குள் யசோதா பம்பரமாய்ச் சுழன்றுகொண்டிருந்தாள். அந்த மார்கழி மாதத்துக் குளிர்ந்த காலைவேளையிலும் அவளுக்கு இலேசாக வியர்ப்பதுபோல இருந்தது.

அடுப்படிக்குள் இருந்தபடியே குரல்கொடுத்தாள் அவள். ''கொஞ்சநேரம் பிள்ளையை வைச்சிரணை; இப்பான் எல்லாம் மினுக்கிக்கொண்டு வந்து கேத்தில் மூட்டி இருக்கிறன், எங்கடை அவசரத்திற்கு தண்ணி பயப்படுமே?''

பிள்ளையை மடியில் வைத்திருந்த கிழவிக்கு இந்தப் பதிலில் ஏதோ ஒரு நகைச்சுவை தெரிந்தது. தனக்குள்ளாகவே ஒரு நமட்டுச் சிரிப்புச் சிரித்தாள்.

''எங்கடை அவசரத்துக்குத்தானே இப்பிடிக் கொண்டுவந்து விட்டிருக்கு. எல்லாரும் ஒரு நிமிசம்கூட விடாமல் ஓடி ஓடித் தேடினியள்; இப்ப எல்லாத்தையும் விட்டுட்டு ஒரு ராவோட உயிரை மட்டும் பிடித்துக்கொண்டு ஓடிவந்திட்டியள்.''

இதற்குள் எத்தனை விசயங்கள் உள்ளடங்கிக் கிடக்கின்றன;

சூரியனுடைய ஒளிக்கீற்றுகள் புகமுடியாத சோலைக்குள் குயில்களும் பாட, வண்டுகள் ரீங்காரமிட, மயில்கள் நடமிட, இன்னும் எத்தனையோ இயற்கையின் அற்புதங்கள் நடப்பதாக ஒரு இலக்கியக் கவி எழுதினான்.

இந்தக் கிழவியின் வார்த்தைகளும் அப்படித்தானே இருக்கின்றன. அவளது உள்ளத்துக்குள் யாரும் ஊடுருவிப் பார்ப்பதில்லை. உள்ளே நடமிடும் உணர்வு அலைவுகளின் மோதல்கள் தான் இப்படி வார்த்தைகளாகி வெளிவருகின்றன.

ஒருவேளை அவள் கிழவி என்பதால் அந்த வார்த்தைகள் வெறும் கத்தல்களாகவே போய்விடுகின்றன போலும்.

கிழவியின் வார்த்தைகள் சரியாகக் காதில் விழவில்லை; அப்படி விழுந்தாலும்தான் ஒன்றும் ஆகிவிடப்போவதில்லை. அடுப்படிக்குள் பரக்கப் பரக்க வேலை செய்துகொண்டிருந்தவளுக்கு இது எரிச்சலூட்டும் இரைச்சலாகக் காதைக் குடைந்தது.

'மனிசிக்கு எப்பவும் வாய் ஓயாது; ஏதாவது புறுபுறுத்தபடிதான், உதாலைதான் இஞ்சை ஒண்டும் விடியீறதில்லை' என்று தனக்குத்தானே திட்டித் தீர்த்துக்கொண்டாள்.

இப்போதுதான் கேத்தலில் சூடு ஏறத்தொடங்கியது. தண்ணீர் கொதிக்க ஆரம்பிக்கவே கேத்தலில் இருந்து இரைச்சல் வெளிப்பட்டது.

இவர்களுடைய இந்தச் சங்கதிகள் எதையும் பற்றி ரமாவுக்குக் கவலையில்லை. அவள் குழந்தை; இப்போது கிழவியின் மடியில் இருந்தபடியே உடம்பை நெளித்து இலேசாகச் சிணுங்கினாள். அவளது கலைந்து கிடந்த பட்டுக் கேசத்தைக் கிழவி கோதிவிட்டு ஆதரவாகத் தட்டிக்கொடுத்தாள்.

குழந்தை அந்தச் சுகத்தில் அமைதியடைந்தது.

சிறிதுநேரம் கழித்து தேத்தண்ணியுடன் யசோதா வந்தாள். குழந்தையை வாங்கித் தனது மடியில் வைத்துக்கொண்டாள்.

குழந்தைக்குச் சொல்வதுபோலத் தாயாரிடம் சொன்னாள் யசோதா: ''அம்மம்மாவின்ர தேத்தண்ணி அடுப்படிக்கை கிடக்கு, போய்க் குடியுங்கோ; இது ரமாவிற்கு. அவள் ஒருத ருக்கும் தரமாட்டாள்'' என்று சொல்லிக்கொண்டே மகளுக்குத் தேனீரை பருக்கினாள். குழந்தை மளமளவென்று குடித்தது. கிழவி தேனீர் குடிக்க அடுப்படிக்குள் போனாள்.

யாழ்ப்பாணத்தில் இருந்தபோது ரமாவுக்கு ஏதாவது பருக்குவதென்றால் பெரியபாடு. போச்சியைத் தள்ளி மாட் டேன் என்று அடம்பிடிப்பாள். ஒருவாய் சோறு ஊட்டுவ தானால்... வீடெல்லாம் சுற்றி, நாய், காகம், கோழி, மரம் என்று ஒன்றும்விடாமல் எல்லாத்தையும் கூப்பிட்டு, எத் தனையோ கதைகள் சொல்லி... போதும் போதும் என்றாகி விடும். சிலவேளைகளில் இனியொரு குழந்தை வேண்டவே வேண்டாம் என்றுகூட நினைப்பாள். அங்கலாய்ப்புடன் பிள்ளை குடிப்பதைப் பார்க்க அவளுக்குப் பரிதாபமாக இருந்தது.

ஏதோ நாட்டு நடப்புகள் அவளுக்கும் விளங்கியிருக்கிறதோ? வீட்டில் உள்ள கஷ்டம் தெரிந்து எதையாவது போட்டு வயிற்றை நிரப்பிக்கொள்ளுவோம் என்று யோசிக்கிறாளா?

அவள் குழந்தையைக் கண்வெட்டாமல் பார்த்துக்கொண்டு இருந்தாள். அந்த நேரத்தில் ஒருவிதமான அமைதி குடிகொண் டிருந்தது. ஒருகணம் அவள் தன்வசமிழந்தாள்.

அந்த நேரத்தில் அவள் விட்டுவந்த அந்த அற்புதமான மண்ணில் அதுவரை விதைத்த இனிய அனுபவ வித்துக்கள் பயிராகி பச்சைப் பசேலென்று அவளுக்குத் தோன்றின. அந்தப் பசுமையான பயிர்களை ஒவ்வொன்றாக ஆராயவேண்டும் போல இருந்தது. அவை அவளால் எண்ணி முடியுமா?

திருநெல்வேலி என்றால் சந்தையும், சலசலப்பும்தான் எல்லோருக்கும் தெரியும். ஆனால் சந்தைக்கு அப்பால், உள்ளே குறுக்கும் நெடுக்குமாகச் செல்லும் ஒழுங்கைகளால் இறங்கினால் அமைதி நிலவும் குடியிருப்புக்கள் உண்டு என்பது பலருக்குத் தெரியாத விசயம்.

புகழ்பெற்ற இராசபாதை வீதியும், நல்லூர் முருகன் ஆலயத்தின் மேற்கு வீதி வழியாக ஓடும் கோயில் வீதியும்

சந்திக்கும் இடத்தில் தின்னவேலிக் கிராமம் ஆரம்பமாகிறது. றோட்டின் இருமருங்கும் அமைந்துள்ள தோட்டவெளி தின்ன வேலிக்கே உரிய வழமான நிலத்தைப் பறைசாற்றிக்கொண் டிருக்கும். இங்குள்ள விவசாயிகள் வருடத்தின் எந்த மாதத் திலும் ஓய்ந்துபோவதில்லை. அந்தந்தப் பருவங்களுக்கேற்ப எல்லாவிதமான பயிர்களையும் வளர்க்கும் வித்தை அவர்களின் கைகளில் உண்டு. அது மட்டுமா? கால்நடை வளர்ப்பிலும் கைதேர்ந்த மக்கள் அவர்கள். யாழ் நகர வாசிகளின்பால் தேவையின் பெரும் பகுதியைத் தின்னவேலிதான் சமாளிக்கிறது.

கல்வியங்காட்டிலிருந்து வருகின்ற ரோட்டு இந்தச் சந்தி யைக் கடந்து நீண்டு சென்று தின்னவேலிச் சந்தையை அடை கிறது. இடையில் ஒரு சிறிய அம்மன் கோயில் உள்ளது. கோயிலின் வடக்குப்புறமாகச் செல்லும் வீதியால் போனால் அது கிராமத்தை ஊடறுத்துக்கொண்டு செல்கிறது என்பதை எவரும் இலகுவாக ஊகித்துவிடலாம். இடையிடையே பனைக் கூடல்களையும் தாராளமாகக் காணலாம். இந்த இடத்தில் தான் யசோதாவின் வீடு இருக்கிறது.

அவ்வளவு பெரிய வீடு இல்லைத்தான். என்றாலும் அவளது சிறிய குடும்பத்திற்குப் போதுமானதாக இருந்தது. இரண்டு அறைகள், ஒரு கூடம், பின்புறமாக உள்ள விறாந்தை, சமையலறை, ஒரு சிறிய போர்ட்டிக்கோ என்பவற்றைக் கொண்டிருந்தது. வீட்டு முற்றத்தில் ஒரு மல்லிகைப் பந்தல் வருடம் முழுவதும் பூத்துக் குலுங்கிக்கொண்டிருக்கும்.

மலர்கள் என்றால் யசோதாவுக்கு அலாதியான பிரியம். றோசா, எக்ஸ்சோறா உட்பட சில குறோட்டன் வகைகளும் கொண்டதாக முற்றத்தில் ஒரு சிறிய நந்தவனத்தையே உரு வாக்கியிருந்தாள்.

தன்னுடைய வீட்டைப்பற்றி யோசித்ததும் இந்த நந்த வனம்தான் முதலில் அவளது மனக்கண்ணின் முன்பு தோன்றி யது. அந்த மலர்ச்செடிகளுடன் பேசிக்கொண்டுதானே ரமா வுக்கு உணவு ஊட்டுவாள். வீட்டைவிட்டு வந்து ஒரு மாதத் திற்குமேல் ஆகிறது.

ஏதாவது காரணத்தால் பூச்செடிகளுக்கு இரண்டு நாட்கள் தண்ணீர் ஊற்றாவிட்டால் யசோதா அவற்றின் வாடிய முகங் களைப் பார்க்கவே பொறுக்கமாட்டாள். வாடிய பூச்செடி களைப் பார்க்கும்போதெல்லாம் யசோதாவின் முகமும் வாடி விடும்.

ஊரைவிட்டுப் புறப்படும்போது என்னவோ இரவிரவாக மழை விட்டுவிட்டுப் பெய்துகொண்டிருந்தது உண்மைதான். ஒருவேளை தமிழ் மக்களின் அவலத்தைப் பார்த்து மேகங்களும் தேம்பித்தேம்பி அழுதனவோ? அதன் பிறகு இந்த வருடம் மழையே பெய்யவில்லை. மேகங்கள் தம்மிடமுள்ள நீரை அழுதே முடித்துவிட்டன போலும்.

யசோதாவின் வீட்டில் ஆடம்பரப்பொருட்கள் என்று பெரிதாக ஒன்றும் இல்லைத்தான். ஆனாலும் இருப்பவற்றை ஒழுங்காக வைத்து வீட்டைச் சுத்தமாக வைத்திருப்பாள். ஊதாரித்தனமாகச் செலவுசெய்யமாட்டாள். சிறுகச்சிறுகச் சேர்த்து வீட்டுக்குத் தேவையான பொருட்களை ஒவ்வொன்றாக வாங்கிக்கொள்வாள்.

அத்தனை பொருட்களையும் அம்போ என்று விட்டுவிட்டு வந்துவிட்டாள். ஏதோ இரண்டொரு உடுப்புக்களையும், தன்னிடமிருந்த நகைகளையும் மட்டும் கையில் எடுத்து வந்தாள். கையில் ஒரு ஆயிரம் ரூபாவுக்கு உள்ளாகத்தான் இருந்தது. ஆட்டு மந்தைகள்போல் அந்த இரவில் செம்மணிப் பாலத்தைக் கடந்துகொண்டிருந்த எல்லோருமே ஏறக்குறைய இப்படித்தான் புறப்பட்டிருந்தார்கள்.

இப்படி ஒரு ஆழ்ந்த தியானத்தில் அமுங்கிப்போயிருந்தவளை இராமநாதனின் அழைப்பு உசுப்பிவிட்டது. அவள் திடுக்கிட்டுப்போனாள். தன்னைச் சுதாகரித்துக்கொண்டு நிமிர்ந்தவளைப் பார்த்து இராமநாதன் கேட்டான்.

"நான் விடியக்காத்தாலை உந்தத் தேசமெல்லாம் பாணுக்கு அலைஞ்சுபோட்டு வாறன். நீ திண்ணையிலை இருந்து கனவு கண்டுகொண்டிரு" என்று பாண் கிடைக்காததால் ஏற்பட்ட எரிச்சலுடன் சொன்னான்.

கடற்கரையில் இருந்துகொண்டு மீனுக்கு ஏங்குவதும், களனிகளின் நடுவே இருந்துகொண்டு பாணுக்கு அலைவதும் நம் நாட்டில்தான் காணமுடியும். என்னவோ தற்போதைய போர்க்காலச் சூழலில்தான் இப்படியாகிவிடவில்லை; நமக்கு இது பாட்டி கதைபோலத் திரும்பத்திரும்பச் சொல்லப்படும் விசயம்தான்.

"பாண் இல்லையோ? ஒருபிடி மாக்கூட இல்லை. பிள்ளைக் கெண்டாலும் ஒரெப்பன் புட்டுக்குழைக்கலாம்; நாங்கள்

பெரியாக்கள் கிடப்பம். அவள் கிடப்பாளோ?'' என்று இராம நாதனைப் பார்த்தாள் யசோதா.

''அநியாயப்படுவாங்கள், எல்லாச் சனத்தையும் அகதியாக்கி அனுப்பிப்போட்டு அங்கையிருந்துகொண்டு சாப்பாட்டுக்குமேலை அப்பிளும் ஐஸ்கிறீமும் தின்டுகொண்டிருக்கிற அவையளிட்டத்தான் உதைப்போய்ச் சொல்லவேணும்.

''ஆரிட்டைச்சொல்லி என்ன புண்ணியம்? நாங்கள் பட்டினி இடந்து காயிறதுதான் நடப்பது'' என்றவள் ரமாவை அவனிடம் கொடுத்துவிட்டு அவனுக்குத் தேனீர் தருவதற்காக அடுப்படிக்குப் போனாள். குழந்தை தகப்பனிடம் பாய்ந்து அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டது.

## அத்தியாயம் 2

யாழ்ப்பாணத்தில் கொழும்பு வாழ்க்கையில் அடிபட்ட நகர மாந்தர்தான் பாணை அதிகமாக உபயோகிப்பார்கள். கிராமங்களைப் பொறுத்தவரையில் பாண் அதிகம் விரும்பப்படுவதாக இல்லை. கிராமவாசிகள் 'வைக்கோல்' என்றும், 'வயிறூதி' என்றும் பல்வேறு செல்லப் பெயர்கள் இட்டு பாணை நையாண்டி செய்வார்கள்.

நமது இராமநாதனும் ஒரு விவசாயிதான். காலையிலே பழஞ்சோற்றுக் குழையலும் மரவள்ளிக்கிழங்கும் சாப்பிட்டுப் பழகியவன் அவன். இங்கே வந்தபிறகு பாணுக்காக நாயாய் அலைந்து அலுத்துவிட்டான். ஒருநாள் அவன் முடிவாகவே சொல்லிவிட்டான்:

''யசோதா, உந்தப் பாணுக்கு அலையிற வேலை இனிமேல் என்னாலை ஏலாது. ஏதாவது மாப்பண்டம் செய்து ரமாவுக்கு குடப்பா. நாங்கள் ஒரேயடியாய் சோத்தைக் காச்சித் தின்னுவம்'' என்று மனைவியிடம் கூறினான். அவளுக்கும் அது சரியாகவே பட்டது.

என்ன செய்வது? வலுக்கட்டாயமாக வன்முறையாளர்களால் திணிக்கப்பட்ட புதிய சூழ்நிலையை இசைவாக்கிக் கொள்ளமுடியாதவர்கள் இப்படித்தான் சில முடிவுகளை எடுக்க வேண்டியுள்ளது. தொட்டில் பழக்கம்தானே சுடுகாடு மட்டும்

வரும். யசோதாவிற்கு இப்போது தின்னவேலிக் கிராமம் மீண்டும் காட்சிக்கு வந்தது.

தன்னுடைய வீட்டின் பின்புறமாக அவளது பார்வை போகிறது. இரண்டு யமுனாபாரி ஆடுகள், ஒரு கறவைப்பசுவும் கன்றும், கோழிக்கூடு என்பன முதலில் வந்துபோகின்றன. பின்புறமாக முட்கிளுவையால் வேலி போடப்பட்டிருந்தது. அங்கிருந்து ஒரு கால்மைல் தூரத்திற்கு அப்பால் உள்ள தோட்ட வெளி பசுமையாகத் தெரிகிறது.

அந்தத் தோட்டவெளியில்தான் இராமநாதனுக்கு இரண்டாயிரம் கண்டுத்தறை இருக்கிறது. ஐப்பசி மாதம் முற்கூறில் பெய்த மழைக்கு நிலத்தைப் பண்படுத்தி ஆயிரம்கண்டு மிளகாய் நட்டிருந்தான். மிகுதியில் இழுப்பதற்குத் தயாராக மரவள்ளி இருந்தது. மிளகாய் நட்டுள்ள தறையில் வெங்காயம் கிளறியிருந்தான். அந்த வெங்காயம் கட்டாக வீட்டிலே கிடக்கிறது.

இப்போது யசோதா தன்னை மறக்காமல் சுயஉணர்வோடுதான் இருந்தாள். ஒரு நீண்ட பெருமூச்சு உள்ளத்தின் வெம்மையை எல்லாம் வாங்கிக்கொண்டு நெருப்பாக வெளியே வந்தது.

''அநியாயப்படுவார், நாங்கள் இரத்தத்தைப் பிழிஞ்சு பயிர் விளைவிச்சிட்டு வந்திருக்கிறம். எங்கையோ இருந்து இஞ்சை வந்து எங்களைக் கலைச்சுப்போட்டாங்கள். கறையான் புத்தெடுக்கப் பாம்பு வந்து குடியேறினது மாதிரி, எங்காலையோ அள்ளுப்பட்டு வந்தாங்கள்? அங்கை கிடக்கிற எல்லாத்தையும் அவங்கள் அள்ளித் தின்னட்டும். நாங்கள் இஞ்சை சாப்பாட்டுக்கு வழியில்லாமல் சாகிறம்'' என்று வானத்தைப் பார்த்தபடி கூறினாள்.

வானம் சலனமற்று மேகங்கள் ஏதுமின்றித் தெளிவான நீலமாகக் காட்சியளித்தது. ஆனால் அவள் கண்களுக்கு அது ஒரு இருண்ட சூனியமாகவே தோன்றியது. அமைதியும் மகிழ்ச்சியுமாக இருந்த அந்த இளம்தாயின் மனத்திலும் இப்போது ஒளியில்லை.

வானத்தை விறைத்து நோக்கிக்கொண்டிருந்த மனைவியைப் பார்க்க இராமநாதனுக்கு என்னவோ போலிருந்தது.

''என்ன யசோதா, நான் என்னவோ கேக்கிறன்; நீ மேலை பாத்துக்கொண்டு வேறைஏதோ கதைக்கிறாய்? உனக்கென்ன வந்தது?'' என்று ஆதங்கமாகக் கேட்டான்.

''ஒண்டுமில்லை, பலதையும் யோசிச்சுப்பாத்தன். இப்பிடியே எத்தினை நாளைக்கு இஞ்சை இருக்கிறது? செலவுக்கு என்ன செய்யிறது? கையான், கழுத்தான் எண்டு ஒவ்வொண்டா வித்து முடியுது. இனி என்ன செய்யிறது?'' என்று சொல்லி அவனது முகத்தைப் பார்த்தாள்.

யசோதாவின் கேள்வியில் நிறையவே விசயம் இருந்தது. பொதுவாகவே வீட்டு விசயங்கள் எதைப்பற்றியும் இராமநாதன் இதுவரை கவலைப்பட்டதேயில்லை. எல்லாவற்றையும் யசோதாதான் கவனித்துக்கொள்வாள். பிரச்சனைகள் வரும்போதுதானே கேள்விகளுக்குப் பதில்சொல்லவேண்டியிருக்கும். இராமநாதனுக்குத்தான் இதுவரை எந்தப் பிரச்சினையும் இல்லையே.

இப்போது யசோதா இப்படியொரு கேள்வியைக் கேட்டதும் அவன் கொஞ்சம் தடுமாறிப்போனான் என்றுதான் சொல்ல வேண்டும். ஏதோ வாயில் வந்ததைச் சொல்லி முடித்தான்.

''வந்து... யசோதா... என்னெண்டால்... நீ சொல்லுறது சரிதான்.'' அவனுக்கும் பிரச்சனை கொஞ்சம் விளங்கித்தான் இருந்தது. யசோதா இப்படித் திடீரென்று நம்பிக்கை இழந்தவள் போல் பேசியதுதான் அவனது அந்த அதிர்ச்சிக்குக் காரணம்.

''காஞ்சுபோன பூமியெல்லாம் வற்றாத நதியைப் பார்த்து ஆறுதலடையும்; அந்த நதியே காஞ்சுபோயிட்டா அதற்கு யாரால் ஆறுதல் சொல்லமுடியும்'' என்ற பாடல் அடிகள் இவனுக்காகப் பாடப்பட்டனவோ?

யசோதாவுக்கும் இராமநாதனைப்பற்றித் தெரியும். அவள் இல்லாவிட்டால் அவனால் எதுவும் செய்யமுடியாது என்பதும் அவளுக்குத் தெரியும். அவன் இப்போது மிரண்டுபோய்விட்டான் என்பதை அவள் புரிந்துகொண்டாள்.

அவள் ஒரு கொஞ்சம் நிதானம் இழந்துபோனதிற்கே இராமநாதன் இப்படியாகிவிட்டான். நல்லவேளை யசோதா உடனடியாக நிதானத்திற்கு வந்துவிட்டாள். கொஞ்சம் தைரிய மூட்டும்படியாகக் கதைத்து அவனை வழமைக்குக் கொண்டு வந்தாள்.

இராமநாதன் இரண்டு மூன்று நாட்களாக அமைதியிழந்து காணப்பட்டான். தான் காலத்தை வீணே கழித்துக்கொண்டிருப்பதாக அவனுக்குத் தோன்றியது.

ஓயாமல் உழைத்துப்பழகிய அவனது உடல் இப்போது கொஞ்ச நாட்களாகச் சோம்பிக் கிடக்கிறது. ஆனால் திடீ ரென்று ஒரு வேகம் பெற்றுவிட்டதைப்போல் உணர்ந்தான். அவனது கையும் காலும் சோம்பிக்கிடக்க மறுத்தன.

ஏதாவது தொழில் முயற்சி செய்தாக வேண்டும். என்ன செய்யலாம்? அவர்கள் இப்போது இருக்கின்ற தென்மராட்சிப் பகுதி விவசாயம் செய்யும் வளமான மண் இல்லாத பகுதி. அதிலும் அவர்கள் வந்திருக்கும் நாவற்குழிப் பிரதேசத்தில் இப்போதே நல்ல தண்ணீருக்கு நடையாய் அலையவேண்டும். கோடைகாலம் வந்துவிட்டால் இருக்கின்ற இரண்டொரு நல்ல தண்ணீர்க் கிணறுகளும் வறண்டுபோய்விடுமாம். இங்கே வானம் பார்த்த வேளாண்மை ஒன்றுதான் செய்யமுடியும். அவனோ இடம்பெயர்ந்து வந்தவன்.

மனிதனுக்கு மண், பெண், பொன் என்பன பின்னால் ஆபத்தைத் தரக்கூடியவைகள் என்று சொல்கிறார்கள். ஆனால் அது எவ்வளவு தவறானதொரு கருத்து.

இராமநாதனைப் பொறுத்தவரையில் யசோதா என்ற பெண் இல்லாவிட்டால் அவனால் வாழமுடியாது. அவனது சீவனோபாயமாக இருந்த நிலத்தைவிட்டு வந்து அவன் படுகின்றபாடு சொல்லி முடியாது. இப்போது பணமும் தட்டுப் பாடாகிய நிலையில் அவன் இருந்தான்.

ஒருவேளை இவையெல்லாம் கையில் இருக்கும்போது மேலதிக மாக ஆசைப்படுவது தவறு என்று பாண்டித்தியமாக விளக்கம் சொல்லலாம். இராமநாதனிடம் நிலம் இருக்கிறது; அது பொன்னை வாரி வழங்கிக்கொண்டிருந்தது. ஆனால் இப்போது அந்த நிலம் யாரிடமோ பறிபோய்க்கிடக்கிறது. புறா வேட மிட்ட பொல்லாத கழுகு இந்த மண்ணில் இருந்து அத்தனை மக்களையும் விரட்டிவிட்டது.

இராமநாதன் இப்போது ஒரு கொஞ்சம் நிலம் வேண்டும் என்று ஆசைப்படுகிறான். இந்தியப் பெருங்கண்டத்தில் இருந்து கொண்டு 'காணி நிலம் வேண்டும்' என்று பாரதி பாடியது விந்தையன்றோ? தமிழர் தாயகத்தில் இருந்துகொண்டு இராம நாதன் காணி நிலத்திற்கு காலம் கடந்து ஆசைப்படுகிறான். இந்த ஆசை கொஞ்சம் முன்னால் இருந்திருக்க வேண்டும். இராமநாதனுக்கு மட்டுமல்ல அவனைப்போல் இன்று இழக்கக் கூடாததை இழந்துவிட்டு நிற்பவர்கள் எல்லோரும் யோசித் திருக்க வேண்டிய விடயம்.

இராமநாதன் உழைப்பதற்கு நிலம் இப்போது எங்கே கிடைக்கும்? திரும்பிய திசைகள் அனைத்தும் சிங்களச் சிப்பாய்கள் நிற்கிறார்கள். இடையில் ஒரு சிறிய வழி தெரிகிறது. அதுவும் கடல்வழியாகத்தான் இருக்கிறது. இந்த வழியையும் பிடித்துவிடப்போகிறார்களாம். அப்படியொரு நிலை வருமேயானால் வடமராட்சியிலும், தென்மராட்சியிலும் உள்ளவர்கள் பொறியில் அகப்பட்ட எலியைப்போல ஆகிவிடுவார்கள்.

சொந்த மண்ணில் அகதிகளாக வாழ்வது சோதனை. ஆனால் அடிமைகளாக வாழ்வது வேதனை என்று சொல்வதா? இல்லை வேடிக்கை என்று சொல்வதா?

இராமநர்தன் ஏதோ சிந்தனையின் வசப்பட்டுத் தன்னை மறந்து அநிலேயே மூழ்கிப்போய் இருந்ததைப் பார்த்தால் அவனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதோ என்று நினைக்கத் தோன்றியது.

யசோதாவின் தாய்க் கிழவி அடுப்படியில் மகளுக்கு உதவியாக வேலை செய்துகொண்டிருந்தவள், ஏதோ அலுவலாக வெளியே வந்தாள். இராமநாதன் திண்ணையில் சிலைபோல உட்கார்ந்திருப்பதைக் கண்டாள்,

இப்போது இரண்டு, மூன்று நாட்களாக இராமநர்தன் இப்படி யோசித்துக்கொண்டிருப்பதைக் கிழவி கவனிக்கத் தவறவில்லை. வீட்டில் நெருக்கடிகள்தான் அவனை இப்படி யோசிக்க வைக்கின்றது என்பதைக் கிழவி நன்றாகவே அறிவாள்.

அவனுடைய சிந்தனையைக் கலைப்பதற்காக வேண்டிச் சற்றுக் கரகரப்பாகவே கிழவி கூறினாள்: ''எதுவும் காலடியிலை கிடக்கேக்க அதுகின்ரை மதிப்பு விளங்காது; பறிபோனாப் பிறகுதான் அதுகின்ரை அருமை தெரியும். வானத்தைப் பார்த்துக்கொண்டிருந்தாப்போலை போனதெல்லாம் வானத்நாலை வந்து கொட்டவே போகுது.''

இராமநாதனின் மோனத் தவம் குழம்பிவிட்டது. குரல் வந்த திசையில் தலையைத் திருப்பினான். அங்கே கிழவி நின்றுகொண்டிருந்தாள்.

அவனது தவம் குலைந்ததால் அவனுக்கு ஒரு அலுப்புத் தோன்றியது. எதையும் ஒரு கற்பனையில் பார்க்கும்போது சுவையாகத்தானே இருக்கிறது.

இங்கே கனவாகிப்போன நனவுகளின் கற்பனையில் அல்லவா அவன் இருந்தான். கொஞ்சம் எரிச்சலாகவே சொன்னான்: "வீட்டை கொண்டுவந்து போடுறதைத் திண்டுகொண்டிருக்கிறவைக்கு ஒரு யோசினையும் வராது; தேடிக்கொண்டு வாறவன் யோசிக்கத்தானே வேணும்."

"எல்லாரும் யோசிச்சுக்கொண்டிருந்ததாலைதான் இண்டைக்கு இருந்ததெல்லாத்தையும் விட்டுட்டு வந்திருக்கினம்; வீடு வாசல் எல்லாம் அநாதையாகக் கிடக்குது; ஆக்கள் எல்லாம் அகதியாய்ப்போச்சினம்" என்றாள் கிழவி.

"அதெல்லாம் முடிஞ்சுபோச்சுதே, அதைப்பற்றி யோசிச்சு என்ன செய்யிறது?" என்று இராமநாதன் கிழவியைக் கேட்டான். "அதுக்காக இனி நடக்கவேண்டியதையும் யோசிச்சுக் கொண்டே இருக்கப்போறியள்? நல்ல மாட்டுக்கு ஒரு சூடு போதும்" என்று நறுக்காகப் பதில் கிழவியிடமிருந்து வந்தது.

ஒரு அர்த்தமற்ற கேள்விக்கு வந்த ஆழமான பதில். 'கருவியால் காலம் அறிந்து செய்த வினை' என்று வள்ளுவன் சொல்லியதைக் கிழவி எவ்வளவு நாசூக்காகச் சொல்லிவிட்டாள்.

இருக்கின்ற நிலைமைக்கு ஏற்றாற்போலச் சரியாக முடிவெடுப்பவனே விவேகி. ஒருவேளை தமிழ் மக்களின் விவேகத்தைச் சோதிப்பதற்காகத் தோன்றிய ஒரு நிலைமைதான் தற்போது வந்துவிட்டதோ?

கிழவிக்கு என்ன சொல்வதென்று இராமநாதனுக்குத் தெரியவில்லை. அவன் ஒருவிதமான குறிப்போடு கிழவியைப் பார்த்தான்.

அந்தப் பார்வையின் பொருள் நன்றாகவே கிழவிக்கு விளங்கியது. "உங்கை ஒரு கதை அடங்கலும் கதைக்கினம். கேள்விப்படேல்லையே?" என்று ஒரு கேள்வியையே பதிலாகச் சொன்னாள்.

உண்மையில் சில விசயங்களை அவன் கேள்விப்பட்டுத்தான் இருந்தான். ஆனால் அவனது மூளை இப்போது வெறுமையாக இருந்ததால் எதுவும் அவனது சிந்தனைக்கு வரவில்லை.

இப்போது யாரோ வெளியே இராமநாதனைக் கூப்பிட்டார்கள். "ஆரோ கூப்பிடுகினம்; போய்ப்பாத்துக்கொண்டு

வாறன்'' என்று இராமநாதன் எழுந்தான். அதற்கிடையில் வீட்டைச் சுற்றிக்கொண்டு வந்தவர் இந்தப்பக்கம் வந்து விட்டார்.

''ஓ, குமாரசாமியண்ணை வாருங்கோ, என்ன ஏதும் புதினம் கேள்விப்பட்டியளோ?'' என்று வந்தவரை வரவேற்றான் இராமநாதன்.

குமாரசாமியண்ணை அடுத்த வீட்டுக்காரர். அவர் இந்த ஊர்க்காரர்தான். இராமநாதன் வீட்டுக்காரரோடு இந்தக் குறுகிய காலத்தினுள் மிகவும் நெருக்கமாகிவிட்டார். அவருடைய வீட்டிலும் இடம்பெயர்ந்தவர்கள் நிறைந்திருக்கிறார்கள்.

இப்போது இராமநாதன் வீட்டில் நெரிசல் குறைவு. எனவே ஒவ்வொருநாளும் அனேகமாகச் சாப்பிட்டபின்னர் இராமநாதன் வீட்டுக்கு வந்து கொஞ்சம் ஆசுவாசப்படுத்திக் கொள்வார்.

அவருக்கு ஐம்பது வயதுக்கு முன் பின்னாக இருக்கும். கன்னத்தில் மட்டும் இரண்டொரு மயிர்கள் நரைத்திருந்தன. மற்றும்படி அவருடைய வயதைப் பத்து வருடங்கள் குறைத்துப் பாக்கலாம். மிகவும் சுவையாக எல்லோரிடமும் பேசுவார்.

குமாரசாமி அண்ணையின் வாயில் ஒரு புகையிலைத் துண்டு எந்நேரமும் இருக்கும். ஏதாவது கேட்டால் உடனடியாகப் பதில் சொல்வதற்கு வாயில் நிறைந்திருக்கும் புகையிலைச்சாறு விடுவதில்லை. ஒருமுறை நன்றாகக் காறி, வேலியோரமாகத் துப்பிவிட்டுத் தொடங்கினார்.

''மாமியும், மருமோனும் பெரிய மந்திராலோசனை நடத்திறியள்போல கிடக்குது. என்ன விசயம்?'' என்று கேட்டுக் கொண்டே வந்து இராமநாதனின் பக்கத்தில் அமர்ந்தார்.

''மந்திராலோசனைகள் நடத்தினவையெல்லாம் களைச்சுப் போச்சினம். இப்ப நாங்கள் துவங்கியிருக்கிறம்'' என்று குமாரசாமியண்ணைக்குப் பதில் சொன்னாள் கிழவி.

கிழவியின் பதிலில் எப்போதுமே ஏதாவது விசயம் இருக்குமென்பதை குமாரசாமியண்ணை அறிந்துவைத்திருக்கிறார். இதனால் அவர் மற்றவர்களைப்போல் கிழவியைத் தள்ளி வைத்துப் பேசுவதில்லை.

குமாரசாமியண்ணையையும், கிழவியையும் கதைக்கவிட்டால் தாங்கள் தப்பிக்கொள்ளலாம் என்பதால் அவர்களின் பேச்சில் இராமநாதனோ, யசோதாவோ அதிகம் குறுக்கிடுவதில்லை. சிலவேளைகளில் இவர்களின் உரையாடல் தாலாட்டுப் போல இராமநாதனுக்கு இருக்கும். அதனால் அவன் தூங்கி விடுவான்.

ஆனால் இன்றைக்கு ஏனோ குமாரசாமியண்ணையுடன் கதைக்கவேண்டும்போல இராமநாதனுக்கு இருந்தது.

அவன்தான் இப்போது இரவில்கூடத் தூக்கம் இல்லாமல் தவிப்பவனாயிற்றே. சோர்வுடன் இருந்தவனுக்கு அவரிடமிருந்து ஏதாவது உற்சாகமான விடயம் கிடைக்குமா என்ற அங்கலாய்ப்பு வந்திருக்கவேண்டும். எனவேதான் அவரைக் கேட்டான், ''இல்லையண்ணை. பலவிதமான கதையள் அடிபடுகுது, ஏதும் கேள்விப்பட்டியளே?''

வெறும் புகையிலையைக் குதப்பிக்கொண்டிருந்தவருக்கு நல்ல காரசாரமான சீவல்காம்புப் புகையிலை கிடைத்தது போலிருந்தது. ''மாமியும் மருமோனும் ஏன் மண்டையைப் போட்டு உடைச்சுக்கொண்டிருந்தனீங்களெண்டு இப்ப விளங்குது.''

''எல்லாரும் பொங்கலுக்கெண்டாலும் யாழ்ப்பாணம் போகலாம். இல்லாட்டி வரியப்பிறப்போடையெண்டாலும்... எண்டு இப்படிப் பல கதையள் கதைச்சுக்கொண்டு திரியினம்'' என்ற பீடிகையுடன் குமாரசாமியண்ணை தொடங்கினார். இவர் சொல்லுறது வெறும் புளிச்சுப்போன பண்டம்.

இவருக்கு இப்பத்தையில் விசயங்கள் எத்துப்படவில்லைப் போலும் என்று கிழவி நினைத்துக்கொண்டாள். ஆனால் அவர் இப்படித்தான், தனக்கு ஏதும் தெரியாது என்று பாவனை காட்டி மற்றவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதைப் புடுங்கிக்கொள்வதில் மகா சமத்தர் என்பதும் கிழவிக்குத் தெரியும்.

பேசாமல் இருந்துவிடலாமா என்று மனம் சொல்லிய போதும் கிழவியின் வாய் அதற்குக் கட்டுப்பட மறுத்தது. எனவே ''நீங்கள் தெரியாதமாதிரி புலுடா விடாதையுங்கோ குமாரசாமியார்'' என்று ஒரு போடுபோட்டு வைத்தாள்.

குமாரசாமியண்ணைக்குக் கொஞ்சம் சங்கடமாய் இருந்தாலும் அவர் அதனை வெளிக்காட்டிக்கொள்ள விரும்பவில்லை.

வாயில் நிறைந்திருந்த புகையிலைச் சாற்றைப் பொளிச்சென்று வெளியேற்றிவிட்டு ஒரு அசட்டுச் சிரிப்பில் மழுப்பப்பார்த்தார்.

"தம்பி இராமநாதன், உன்ரை மாமிக்கு என்னோட உரஞ் சாட்டி திண்டது சமிக்காதடா; பாத்தியே கதை எங்கை போகுதெண்டு" என்று இராமநாதனிடம் திருப்பினார் அவர்.

இந்தப் பகிடிகளையெல்லாம் வாங்கிக்கொள்ளும் வகையில் இராமநாதன் இல்லை. அவன் மௌனம் சாதித்தான். குமாரசாமியண்ணர்பாடு சங்கடமாகிவிட்டது. அவர் இராமநாதனை உசுப்பத்தொடங்கினார். "என்னடா தம்பி ஏதோ கப்பல் கவிழ்ந்தமாதிரி எப்பனும் உசாரைக் காணேல்லை" என்றார் அவர்.

"இல்லையண்ணை பேர்கிற போக்கைப் பார்த்தால் நாங்கள் இஞ்சையும் நிம்மதியாய் இருக்க ஏலாது போலைகிடக்குது" என்று நேரடியாகவே விசயத்துக்கு இறங்கினான் அவன்.

"உவர் அனுருத்த கோட்டையிலை கொடி ஏத்திப்போட்டுக் கொழும்பிலைபோய்க் கொண்டாட்டம் வைக்கிறாராம். அது முடியவிட்டுத்தானாம் இஞ்சாலுப்பக்கம் வரப்போறார் எண்டு சனமெல்லாம் பயந்துகொண்டிருக்குதுகள். என்ன நடக்கப் போகுதோ? அந்தப் பெருமானுக்குத்தான் வெளிச்சம்." இராமநாதன் சொல்லி முடித்தார்.

"சனமெல்லாத்தையும் இஞ்சாலை கலைச்சுப்போட்டுக் கட்டிடங்களோட சண்டைபிடிச்சு எல்லாத்தையும் உடைச்சுத் தள்ளுறாங்கள்."

"அரியாலேக்கை நிண்டு அடிச்ச ஷெல்லிலெ நாவக்குழிச் சனம் அரைவாசியும் கிளிநொச்சிக்கு ஓடிவிட்டுதுகள் எண்டதைப் பாத்தால் கதை சரியாத்தான் இருக்கும்போல தெரியுது."

இராணுவத்தை இடையில் வைத்துக்கொண்டு மக்கள் எப்படி அமைதியாக வாழமுடியும்? போராளிகளை ஒழிப்பதென்பது நடக்கக்கூடியதா? இந்தப் போராளிகள் என்பவர்கள் யார்?

ஒரு சிற்பி பலநாள் முயன்று அரும்பாடுபட்டு ஒரு அருமையான நாயின் சிற்பத்தைக் கல்லிலே வடித்தானாம். அந்தச் சிற்பம் அவனைப் பார்த்து உறுமியது. நன்றியுடன் வாலை ஆட்டியது. அந்த வழியால் ஒருவன் வந்தான்.

சிற்பி கல்லோடு கதைத்துக்கொண்டு நிற்பதைக் கண்டான். இந்தச் சிற்பிக்கு ஏதோ பைத்தியம் பிடித்துவிட்டதுபோலும் என நினைத்துக்கொண்டான். இந்த மனிதனது கண்களுக்கு அந்த நாய் வெறும் கல்லுத்தான். ஆனால் அந்தக் கலைஞனின் கண்ணில் அது ஒரு உயிர்க் கலைவடிவமாக இருக்கிறது. இங்கே கல்லைக்கண்டால் நாயைக் காணோம். நாயைக் கண்டால் கல்லைக் காணோம்.

எல்லாமே பார்க்கும் பார்வையில்தான் இருக்கிறது. மனிதர்கள் என்று பார்த்தால் இலங்கையின் தமிழ்க்குடிமக்கள் எதிரிகள் என்று தெரியாது. புலியாகவோ அல்லது பூதமாகவோ இருக்காது.

குமாரசாமியண்ணையிடம் உள்ள விசயம் மிகவும் சிரமப்பட்டுத்தான் வெளியே வரும் என்பது இராமநாதன் அறிந்ததே. எனவே அவரது கதையின் நீளத்தைக் குறைப்பதற்கு வேண்டி அவரது கதையை அடியெடுத்துக் கொடுத்தான்.

''மெய்யே அண்ணை, நாங்கள் யாழ்ப்பாணம் போவமோ இல்லாட்டி இஞ்சைதான் இருக்கப்போறமோ ஒண்டுமாத் தெரியுது இல்லை'' என்று ஒரு போடுபோட்டு வைத்தான்.

ஏனோ தெரியாது குமாரசாமியாருக்குச் சிரிப்பு வந்துவிட்டது. வாயில் புகையிலைச்சாறு நிறைந்து இருந்தது. வேலிக் கரையில் எட்டிப் புகையிலையுடன் சேர்த்து அதை வெளியேற்றிவிட்டு வந்தார். இப்போது அவரது வாய் விடுதலை பெற்றுவிட்டது. இதனால் அவர் கொஞ்சம் தெளிவாகவே பேசத் தொடங்கினார்;

''எட தம்பி அந்தநாளையிலை எங்கட ஊரிலை ஒரு பழங்கதை சொல்லுறவை. கெட்டவன் கிழக்கை போ எண்டு: இப்பத்தைய போக்கைப் பாத்தால் நாங்களும் இன்னும் கிழக்காலைதான் போகப்போறம்போலை கிடக்குது'' என்று சொல்லிவிட்டுக் கொஞ்சம் அர்த்தபுஷ்டியாகவே சிரித்தார்.

இப்படியொரு பதிலைத்தானே இராமநாதனும் எதிர்பார்த்துக் காத்திருந்தான். அவனுக்கும் இலேசான திருப்தி ஏற்பட்டது.

## அத்தியாயம் 3

வலிகாமத்து மக்களைத் தனது வயிற்றில் விழுங்கி வைத்துக்கொண்டு தென்மராட்சி திணறிக் கொண்டிருந்தது. இன்னும் ஒரு பகுதியினரை வடமராட்சி வாங்கி வைத்துக்கொண்டு வயிற்று வலியால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தது.

கோவில்கள், பாடசாலைகள், பெரிய மர நிழல்கள் இங்கெல்லாம் மனிதர்கள்தான் இருந்தார்கள்.

எவ்வளவுதான் நாய்களால் ஆபத்து என்று தொண்டை கிழியக் கத்தினாலும் மனிதனுக்கு நாய் மீது உள்ள பாசம் அலாதியானது; சில வேளைகளில் நாய்ப்பாசம் தாய்ப்பாசத்தையே மிஞ்சிவிடவும் கூடும். சில பணக்கார வீடுகளில் பொமினேரியன்கள் சரியாசனம் வழங்கப்பட்டுக் கௌரவிக்கப் படுவதைக்கூடக் காணலாம்.

வீட்டுக்கு வேலை செய்யவரும் பொன்னம்மா வீட்டுப் படிக்கு அப்பால் உள்ளேபோக அனுமதியில்லை; ஏனெனில் அவள் துப்பரவில்லை என்கிறார்கள்.

ஆனால் அந்த நாய் ஏழைப் பெண்ணைவிட உயர்ந்த பிறப்பாகிவிட்டது என்பதுதான் உண்மையும், யதார்த்தமும் ஆகும்.

நாய்களில் இப்படி வீட்டு ராஜாக்களும் உண்டு. தேடுவாரற்ற தெரு நாய்களும், சொறி நாய்களும் உண்டு. என்ன இருந்தாலும் நாய்களுக்கு நன்றி என்கின்ற குணவிசேஷத்திற்கு மட்டும குறைவில்லை.

யூலியஸ் சீசர் போர் முனைகளில் பல காலம் இருந்து வீட்டுக்கு வந்தானாம். அவனது மனைவியால் அவனை அடையாளம் காணமுடியவில்லையாம். அவனது நாய் அடையாளம் கண்டுகொண்டதாம். இவ்வாறு இன்னும் எத்தனையோ வரலாறுகளைத் தாங்குகின்றது நாய்க்குலம்.

எமது வரலாற்றிலும் தற்போது இடம்பிடித்துவிட்டது. நாய் குரைத்தால் இரவு நேரங்களில் திருடர்களாக இருக்கலாம் என்று தான் நினைப்பார்கள்.

யாழ்ப்பாணச் சமருக்கு முன்னைய காலம். எங்கும் இந்தியப் படைகள் பரவியிருந்தனர். அவர்கள் பட்டி தொட்டிகளெல்லாம் புலிகளைத் தேடி ரோந்து வருவார்கள். 'ஆமி வரும் பின்னே நாய் குரைத்துவரும் முன்னே' என்று ஒரு பழமொழி ஒன்று சொல்லப்பட்டது. தங்கள் வரவைக் கட்டியங்கூறும் நாய்கள் மீது இராணுவத்திற்கு மிகுந்த கோபம்.

இப்படியாக நமது பிரச்சினைகளிலெல்லாம் பங்கேற்ற இந்த நாய்கள் மீது நம்மவர்களுக்கு ஏனோ நன்றியறிதல் இல்லாமல் போய்விட்டது. இவர்கள் ஊரைவிட்டு ஓடிவரும்போது தமது உடமைகளோடு நாய்களையும் அங்கேயே விட்டுவிட்டு வந்து விட்டார்கள்.

கச்சேரியைக் கைப்பற்றியபோதும், கோட்டையிலே கொடியேற்றியபோதும் எமது நாய்கள்தான் ஊளையிட்டு அலறி இருக்கும். அவைதாம் வலிகாமத்து மக்களின் குரலாக அழுதிருக்க வேண்டும். எனவே இந்த முறையும்கூட நாய்கள் வரலாற்றில் மீண்டும் இடம்பிடித்துவிட்டன.

கோட்டையில் கொடியேற்றம் முடிந்து ஒரு மாதத்திற்கு மேலாகிவிட்டது. கொடியேறிவிட்டால் திருவிழாதானே நடக்க வேண்டும்? சந்திரிகா உபயகாரர், அனுருத்ததான் சால்வையை எடுத்து வீசிச் சனத்தை அடக்கும் நாட்டாண்மைக்காரர். தளுவத்தை இவர்களின் கீழுள்ள தொண்டாற்றும் குருக்களாக நின்று கொடியேற்றிவிட்டார்கள்.

ஆனால் சுவாமி காவ மக்கள் இல்லை. வரம் கொடுக்க மூர்த்தி இல்லை. வெறுமை, இருள், சூன்யம் எங்கும் பரவிப் பேயாட்டம் நடக்கிறது.

இந்த ஒரு மாதமாக எத்தனையோ விதங்களில் மக்களை வலிகாமத்திற்கு வரவழைத்துவிடலாமென்று அரசு பகீரதப் பிரயத்தனம் செய்து பார்த்துவிட்டது.

தமிழர்கள் புத்திக்கூர்மைக்குப் பெயர்போனவர்கள். அதிலும் யாழ்ப்பாணத் தமிழர் புத்திசாலித்தனத்தோடு கடின உழைப் புக்கும் பெயர்பெற்றவர்கள். வெறும் பிரசார வார்த்தைகளுக்கு மயங்கும் அளவிற்கு மடையர்களாக அவர்கள் இல்லை.

சூடு கண்ட பூனை அடுப்பண்டை நாடாது என்பார்கள். எல்லாவற்றையும் இழந்து வந்தவர்கள் ஏதோ மிச்சம் மீதியாக இருக்கின்ற மானத்தையும் இழந்துவிடத் தயாரில்லை.

இராணுவத்தின் அடுத்த கட்ட நடவடிக்கை தென்மராட்சி யிலோ அல்லது வடமராட்சியிலோ இடம்பெறக்கூடும் என்று பரவலாகவே ஒரு கதை அடிபடத் தொடங்கியிருந்தது.

பொதுவாகவே அடிபடுகிற கதைகள் எல்லாம் எங்கேயோ, எப்படியோ கருக்கொண்டு பூதாகாரமாக உருக்கொண்டு ஊரெல்லாம் தன் இஷ்டத்திற்கே திரிபவையாகவே இருக்கும்.

இப்படியான பல கதைகள் ஏற்கனவே பவனிவந்துகொண் டிருந்தன. வருகின்ற புத்தாண்டுடன் யாழ்ப்பாணம் திரும்ப லாமாம். இல்லாட்டிப் பொங்கலோடயெண்டாலும் எங்கடை வீடுகளிலை பொங்கலாமாம். இந்தக் கதைகள் வெற்றிகரமாக உலாவந்துகொண்டிருக்கையில்தான் இந்த மூன்றாவது கதையும் புதிதாக முளைவிட்டிருக்கிறது.

முன்னைய கதைகள் தன்னம்பிக்கையின் வெளிப்பாடு. பின்னையது தற்காப்பின் வெளிப்பாடு. எல்லாமே நடக்கக் கூடியவைதான். அடம்பன் கொடியும் திரண்டால்தானே மிடுக்கு. ஒரு கை தட்டி ஓசை பிறப்பதில்லை. தெய்வத்தால் ஆகாத தெனினும் முயற்சி தன் மெய் வருத்தங் கூலிதரும் அன்றோ!

இந்த விசயங்கள் எல்லாம் எங்களுக்குத் தெரியாதவை அல்ல. பூனைக்கு மணி கட்டப்படவேண்டும். அதை யாராவது கட்டி முடிக்கட்டுமே என்ற மனப்பான்மையில்தான் தவறு இருக்கிறது. இந்தத் தவறைத் திருத்திக்கொள்வதற்குப் பரஸ் பரம் புரிந்துணர்வு வேண்டும்.

இவ்வளவும் நடந்து முடிந்துவிட்டது. இன்னும் உணர்வு பிறக்கவில்லை, இன்னும் துணிவு வரவில்லை. ஓ! தமிழ் இனமே உன்னைப் பார்த்து அழுவதா இல்லைச் சிரிப்பதா? நீயேதான் சொல்லவேண்டும்.

எங்களது இராமநாதனும் ஒரு தமிழன்தான்.

அவன் கலதயைத் தொடராமல் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்துவிட்டான். முன்பெல்லாம் அவன் சிந்திப்பதேயில்லை. இப்போது அவனுக்குப் புதிய புதிய விசயங்களைப் பற்றிச் சிந்தனைகள் தோன்ற ஆரம்பித்தன. அவன் ஒரு அசட்டு ராமு என்றுதான் எல்லோருக்கும் தெரியும்.

ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் திருப்புமுனைகள் அமைகின்றன என்று சொல்கிறார்களே அது இராமநாதனைப் பொறுத்தமட்டில் இப்போதுதான் வந்திருக்கிறது. இதுவரை காலமும் செயலற்றுக் கிடந்த அவனது சிந்தனை நரம்புகள் புதிய வேகத்துடன் வேலைசெய்ய ஆரம்பித்தன.

''என்னடா தம்பி இராமநாதன், நான் கதை கேட்கிறன் நீ என்னமோ யோசிச்சுக் கொண்டிருக்கிறாய்'' என்று பொறுமையிழந்தவராகக் குமாரசாமியண்ணை கேட்டார்.

''நாட்டு நடப்புகளைப் பார்த்தால் யோசிக்கத்தானே வேண்டியிருக்குது'' என்று சொல்லி அவரைச் சமாளித்தான்.

''இனிமேல் யோசிக்கிறதுக்கு என்ன இருக்குது? உன்னாலையோ என்னாலையோ யோசிச்சு ஏதும் கண்டுபிடிக்க ஏலுமே? நீ ஒருபக்கமா யோசிச்சுக்கொண்டு போனால்... விசயங்கள் மற்றப்பக்கமாயெல்லே நடக்குது'' என்று ஒரே நீட்டாக அளக்கத் தொடங்கிவிட்டார் குமாரசாமியண்ணை.

அவருக்கு மூச்சுவிடுவதற்கு ஒரு இடைவெளி கொடுத்தாற் போன்று இராமநாதன் குறுக்கிட்டான்:

''பின்னை என்னதான் செய்யிறது எண்டு சொல்லுறியள்?'' என்றான் இராமநாதன். குமாரசாமியண்ணை ஒரு அசட்டுச் சிரிப்புச் சிரித்தார்.

''கடல் என்டால் அலைகள் இருக்கத்தான் செய்யும். அலைகள் ஓய்ந்துதான் நீராட்டம் என்றால் அது ஆகக்கூடிய

காரியமா என்ன? துணிஞ்சு இறங்கவேண்டியதுதான். அப்ப தான் எதிலும் ஒரு கரை காணலாம்'' என்று குமாரசாமி யண்ணை சொன்னது அவனுக்கு உறைப்பாகவே காதில் ஏறியது.

இன்னும் ஏதேதோ விசயங்களைப் பற்றிக் குமாரசாமி யண்ணை பேசிக்கொண்டிருந்துவிட்டுப் போய்விட்டார். ஆனால் அவை எதுவும் அவனுக்கு நினைவில் இல்லை. 'அலைகள் ஓய்ந்து தான் நீராட்டம் என்றால்' என்ற வசனம் மட்டும் மீண்டும் மீண்டும் அவன் காதுகளில் ஒலித்துக்கொண்டேயிருந்தது. அவன்தான் இப்போது சிந்திக்கத் தொடங்கிவிட்டானே!

எதுவும் நடக்கும் நடக்கும் எண்டு பார்த்துக்கொண்டிருந் தால் எல்லாம் கெட்டு குட்டிச்சுவராகிப் போகவேண்டியதுதான். நாங்கள்தான் ஏதாவது முயற்சி செய்யவேணும்.

குமாரசாமியண்ணைக்கு இன்றைய கதை சுவாரஸ்யம் அவ்வளவாக இல்லாவிட்டாலும் வழக்கம்போல நேரத்தைப் போக்காட்டிவிட்டார். இனி வீட்டைபோய்க் கொஞ்சநேரம் சரிந்து படுக்கவேண்டும். அதற்காக இராமநாதனிடம் விடை கேட்கும் பாவனையில் மெதுவாக எழுந்தார்.

அவர் எழுந்தாரேயானால் புறப்படப்போகிறார் என்பது இராமநாதனுக்குத் தெரியும். ''எல்லாத்துக்கும் பிறகு வாறன்'' என்று சொல்லிக்கொண்டு குமாரசாமியண்ணை போய்விட்டார்.

இராமநாதன் கிழவி இருந்த பக்கம் பார்த்தான். குமார சர்மியர் விடைபெறுவதற்கு முன்னரே கிழவி உள்ளே போய் விட்டாள். தான் இன்னமும் சாப்பிடவில்லை என்பது]இப்போது தான் அவன் நினைவுக்கு வந்தது. எதுவும் பேசாமல் மௌன மாக எழுந்து மெள்ள அடுப்படிக்கு நடந்தான்.

ஒரு கிழமை ஓடிவிட்டது. வலிகாமத்தில் இருந்து தென்ம ராட்சிக்கும் வடமராட்சிக்கும் வந்து வீடுகளில் தங்கமுடியாமல் பாடசாலைகள், கோயில்கள், மரத்தடிகள் என்று தங்கி இருந் தவர்கள் வன்னிப் பெருநிலப்பரப்பிற்குப் போகத் தொடங்கி யிருந்தனர்.

இங்கே மக்கள் குழுமியிருந்ததால் சுகாதாரப் பிரச்சனை கள், உணவுப் பற்றாக்குறை போன்ற பல பிரச்சனைகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது. இராமநாதன் போன்றவர்கள் ஏதாவது தொழில் செய்வதற்குத் தவியாய்த் தவித்தனர்.

அரச சார்பற்ற சில உதவி நிறுவனங்கள் இத்தனை மக்களுக்கும் என்ன செய்யமுடியும்? விடுதலைப் புலிகள் மக்கள் வன்னிக்குச் செல்வதில் கைகொடுத்து உதவினர். மேலும் இங்கே அவர்கள் கொட்டில்களை அமைக்கவும், விவசாய முயற்சிகளை ஆரம்பிக்கவும் ஒத்தாசை புரிந்தனர். இதனால் குடிசைவாசிகள் ஆயினர்.

தென்மராட்சி வீதிகளில் கொஞ்சம் நெரிசல் குறைந்தது. கிட்டத்தட்ட இரண்டு லட்சம் மக்கள் வன்னிக்குப் போய் விட்டனர்.

இராமநாதன் இப்போது ஒரு முடிவுக்கு வந்துவிட்டான்: கிளிநொச்சிப்பக்கம் போனால்தான் இனிமேல் பிழைக்கமுடியும் என்று முடிவு செய்தான். இதுபற்றி யசோதாவிடம் சொல்லி விட்டான். யசோதாவின் மாமனார் முறையான ஒருவர் அங்கே இருக்கிறார் ஆனால் இதுவரையில் போக்குவரத்து இல்லை. எப்படியும் அங்கேபோய் அவரைத் தேடிப்பிடித்துவிடலாம். அவர் ஏதாவது உதவிசெய்யாமலா விடப்போகிறார்?

யசோதாவும் ஒருபடியாகச் சம்மதம் தெரிவித்துவிட்டாள். இனியென்ன? மூட்டை முடிச்சுக்களைக் கட்டவேண்டியதுதான்; அதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டார்கள்.

யசோதாவின் தாய்க்கிழவிக்கு என்னவோ கடைசிக் காலத்தில் இப்படி ஊரைவிட்டுப் போவது மனதுக்குக் கஷ்டமாகவே இருந்தாலும், போகவேண்டிய தேவையை அவள் நன்கு உணர்ந்திருந்தாள். அதனால் அவள் அதுபற்றி ஏதும் அலட்டிக்கொள்ளவில்லை. எல்லாம் நடக்கிறபடிதான் நடக்கும் என்று மட்டும் சொல்லிவைத்தாள்.

குமாரசாமியண்ணை வீட்டில் ஏராளம்பேரை வைத்துக் கொண்டு அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார். அவரிடம் வீட்டை ஒப்படைக்கலாமெனத் தீர்மானிக்கப்பட்டது. அவரும் அதற்குச் சம்மதித்துவிட்டார்.

ஒருநாள் இராமநாதன் வீட்டு வாசலில் ஒரு லான்ட்மாஸ்ரர் வந்து நின்றது: குமாரசாமியண்ணையும், இராமநாதனுமாக கட்டிவைத்த பொதிகளையும், எடுத்துவைத்த பெட்டி படுக்கைகளையும் ஏற்றிக்கொண்டிருந்தனர். எடுத்து வைத்த பொருட்கள் ஏற்றியாகிவிட்டது. இராமநாதன் வீட்டுக்காரர் ஏற்றப்

பட்ட பொருட்களோடு பொருட்களாக லான்ட்மாஸ்ரரில் ஏறிக் கொண்டார்கள்.

குமாரசாமியண்ணையிடம் இராமநாதன் வீட்டுச் சாவியைக் கொடுத்து விடைபெற்றுக்கொண்டான். லான்ட்மாஸ்ரர் புறப் பட்டது. அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் படலையடியில் நின்று புதினம் பார்த்தார்கள். அதில் ஒரு சில தெரிந்த முகங்கள் இருந்தன; சில புதிய முகங்கள். அவர்களுக்கெல்லாம் முகத்தில் மகிழ்ச்சி காட்டி விடைபெற்றுக்கொண்டான்.

இப்போதெல்லாம் இப்படியான காட்சிகள் அன்றாட நிகழ்வுகளாகிவிட்டன. அநேகமாகச் சொந்த இடங்களை விட்டு வேறு இடங்களுக்குச் செல்ல விரும்பாதவர்கள் தமிழர்கள்; இப்போது இடத்துக்கிடம் அலையும் ஏதிலிகளாகிவிட்டார்கள். அவர்களாக ஆகிவிடவில்லை. அப்படி ஆக்கப்பட்டு விட்டார்கள்.

கொடுங்கோன்மை மன்னவன் நீதியானால் அடுபசியும் அல்லலும் மக்கள் சொத்தாகிவிடுகிறது. 'தமிழ் மக்களின் தலை விதியை கடவுள்தான் காப்பாற்றவேணும்' என்று தந்தை செல்வா சொன்னது எவ்வளவு தொலைநோக்கான கூற்று.

உரிமைக்கான போராட்டம் ஒருபுறமும், வாழ்க்கைக்கான போராட்டம் மறுபுறமுமாகத் தமிழன் படும்பாடு சொல்லி முடியாது. ஆனால் உலகில் உள்ள அடக்கியாள்பவர்கள் எல் லோரும் படிக்கின்ற பாடத்தைத்தான் இந்த நாட்டின் ஆளும் வர்க்கமும் படிக்கப்போகின்றது. என்றைக்கு ஆட்சியாளர் களுக்கு நல்லபுத்தி வரப்போகிறதோ?

யசோதாவின் மாமனார் கிளிநொச்சியில் உள்ள உமையாள் புரத்தில் இருக்கிறார். அவருடைய சரியான விலாசம் தெரிய வில்லை. எனவே எப்படி அவரைச் சந்திப்பது என்று யோசித் தான்.

தற்காலிகமாக ஒரு இடத்தில் தங்கவேண்டும். பின்னர் மாமனாரைத் தேடலாம் என்று யோசித்தான். கிளிநொச்சியில் உள்ள முருகன் கோயிலில் தங்கினார்கள். அங்கே ஏற்கனவே பலர் இருந்தார்கள். கொஞ்சம் நெருக்கடிதான். இருந்தாலும் கொண்டுவந்த சாமான்களை வைப்பதற்கு ஒரு இடம் கிடைத் தது. பிரயாண அலுப்புத்தீர அன்றைய பொழுதை ஓய்வாகக் கழித்தார்கள்.

நாளைக்கு விடிந்ததும் இராமநாதன் மட்டும் புறப்பட்டுப் போய் மாமனாரின் வீட்டைத் தேடிக்கண்டுபிடித்தாகவேண்டும்.

கிளிநொச்சிப் பகுதிக்கு உயிர்நாடியாக விளங்குவது இரணை மடுக் குளம். மாரிகாலத்தில் இங்கு சேமிக்கப்படுகின்ற நீர் ஒவ்வோர் வாய்க்கால் வழியாக ஒவ்வோர் கிராமத்தை அடைகிறது. அந்தக் கிராமங்களை வாடவிடாமல் இளமைப் பொலிவோடு வைத்திருப்பது இந்த வாய்க்கால் நீரேயாகும்.

பல வருடங்களாகப் பராமரிப்பற்ற வீதிகள்; மழை வேறு கொஞ்ச நாட்களுக்கு முன்னர் பெய்திருந்தது. கிராமவாசிகள் குண்டு குழிகளை நிரப்பப் போட்டிருந்த மண்ணை இந்தப் பாழாய்ப்போன மழை அள்ளிக்கொண்டுபோய்விட்டது.

புறப்படும்போது மாமாவின் வீட்டைப்பற்றி கிழவியிடம் கேட்டான் இராமநாதன். இந்த மாமா கிழவியின் ஒன்றுவிட்ட தம்பி முறையான மகாலிங்கம் என்பவர் வெகுகாலத்திற்கு முன்பு கிழவி மகாலிங்கத்தாரின் வீட்டுக்குப் போயிருக்கிறாள். அங்கே சிலகாலம் தங்கியுமிருக்கிறாள். அப்படியிருந்தும் சரியான குறிப்பை மறந்துவிட்டாள்.

அந்தக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து இங்கு வந்தவர்கள் நாலு ஏக்கர் காட்டு நிலத்தைப் பெற்றுக்கொண்டனர். இதனால் வீடுகள் ஐதாகத்தான் இருந்தன. காலப்போக்கில் ஒவ்வொரு நாலு ஏக்கருள்ளும் இரண்டு மூன்று வீடுகள் வரவே கொஞ்சம் நெருக்கமான குடியிருப்புகளுடைய கிராமங்களாக மாறின.

காலப்போக்கில் மேலும் வளர்ச்சியடைந்து இந்த இடங்களில் முன்பு காடு இருந்ததா என்று கேட்குமளவிற்கு நிலைமை மாறியிருக்கிறது. இப்போது இடம்பெயர்ந்த மக்கள்வேறு வந்து சேர்ந்துவிட்டதால் இந்தக் கிளிநொச்சிப் பகுதியில் மக்கள் நிரம்பி வழிந்தார்கள்.

எங்கு பார்த்தாலும் மனிதர்கள். வீதியோரங்கள் இருமருங்கும் திடீர்க் கடைகள், சில்லறைக்கடை, சிற்றுண்டிக்கடை, செருப்புக்கடை, சீலைக்கடைவரை எத்தனையோ வகையான கடைகள். சுருக்கமாகச் சொல்வதானால் கிளிநொச்சிப் பிரதேசம் விழாக்கோலம் பூண்டிருந்தது என்றுதான் சொல்ல வேண்டும்.

தமது உடமைகளையும், வீடு வாசல்களையும் விட்டு வந்த கவலை அந்த மக்கள் முகங்களில் காணப்படவில்லை.

ஒருவேளை பல சோதனைகளையும், வேதனைகளையும் அடுக்கடுக்காகச் சந்தித்ததனால் இப்படியானதொரு நிலை தமக்கு வருமென அவர்கள் முன்கூட்டியே எதிர்பார்த்து இருந்திருக்கலாம். அதனால் அவர்கள் நெஞ்சில் நிறைந்த உறுதியுடன் வந்திருக்கின்ற பிரச்சனையை எதிர்கொள்கிறார்கள் போலும்.

உமையாள்புரம் வந்துவிட்டான் இராமநாதன். கிழவி சொன்ன குறிப்புக்களை நினைவுபடுத்திக்கொண்டான். போகிற வழியில் பெரியதொரு மதகு முதலில் வரும். கொஞ்சத்தூரம் போனால் ஒரு புளியமரம் வரும். புளியமரத்துக்குப் பக்கத் தால் ஒரு கையொழுங்கை காணிக்குள் இறங்குகிறது. இப்படி கிழவி சொன்ன குறிப்புக்கள் எல்லாம் ஞாபகத்திற்கு வந்தன:

இராமநாதன் இங்கே காணுகின்ற காட்சிகள் எதுவும் கிழவியின் குறிப்புரைகளுடன் ஒத்துப்போவதாய் இல்லை. றோட்டுக் கரையில் மரங்கள் நின்றன. ஆனால் புளியமரம் எதையும் காணவில்லை. யாரிடமாவது விசாரிக்கவேண்டியது தான் என்ற முடிவுக்கு வந்தான்.

இராமநாதனின் மூளை வேலைசெய்யத் தொடங்கியது. கிழவியின் பழங்கதையை வைத்துக்கொண்டு இவ்வளவு நேரமும் வீணாக்கிய தனது மடமையை நினைத்து அவனுக்கு வருத்த மாக இருந்தது. இப்போது பத்து மணிக்குமேல் இருக்கும்.

யாரிடமாவது விசாரிக்கலாம் என்றால் இந்த மாமரின் பெயரையும் மறந்துவிட்டான். எவ்வளவு முயன்றும் பலன் கிட்ட வில்லை. கிழவி சொன்ன குறிப்புகளின்படி இந்தப் பகுதியில் ஓர் வீடு இருக்கிறதா என்று யாரையாவது கேட்கலாம் என்ற முடிவுடன் வீதியால் வருவோர், போவோரை ஒரு நோட்டம் விட்டான்.

யாராவது கொஞ்சம் வயதானவராய் இருந்தால் நல்லது. சிலவேளை அவருக்கு தான் சொல்லுகிற பழைய குறிப்புகள் தெரிந்திருக்கக்கூடும்: அப்படி அமைந்துவிட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்: ஒன்றன்பின் ஒன்றாக எண்ணங்கள் பின்னி வர வீதியைத் துளாவிக்கொண்டிருந்த அவனது கண்களில் ஒரு வயதான நபர் தட்டுப்பட்டார்.

வாட்டசாட்டமாகத்தான் இருந்தார். நரைத்த தலை முடியைக் கட்டையாக வெட்டியிருந்தார்: இடுப்பில் மடித்துக்

கட்டிய நாலுமுழ வேட்டி, மேலே ஒரு ஆம் பெனியனுடன் தோன்றினார்.

வருகின்றவர் இராமநாதனை நோக்கித்தான் வந்துகொண்டு இருந்தார்.

''அண்ணை இந்த ஊர்தானோ?'' என்று எதிரே வந்து கொண்டிருந்தவரை மறித்துக் கேட்டான். இப்படியான ஒரு கேள்வியை எதிர்பார்த்து வந்தவர்போல, அவர் ஒரு அசட்டுச் சிரிப்பை உதிர்த்தார்.

''வீட்டாலை வெளிக்கிட்டால் விசாரிக்கிறவைக்கு மறுமொழி சொல்லுறதிலை வாழ்நாள் சீயெண்டுபோகுது. நான் இந்த ஊரும் இல்லை, ஆமிக்குப் பயந்து இஞ்சை ஓடிவரவுமில்லை'' என்றவர் அர்த்தபுஷ்டியான சிரிப்பை மீண்டும் உதிர்த்தார்.

இராமநாதனுக்கு அவர் கதைக்கின்ற முறை பிடித்துவிட்டது. அவனது சோர்வும் அலுப்பும் அவனைவிட்டு அந்த நேரத்தில் விடைபெற்றுக் கொண்டன. தான் தேடிக்கொண்டு வந்த மாமாவையே கண்டுபிடித்துவிட்டதுபோல அவனுக்கு ஒரு உணர்வு பிறந்தது.

''என்னண்ணை நான் ஏதோ கேக்கிறன், நீங்கள் என்னவோ சொல்லுறியள்'' என்றான் அவன்.

''இப்ப எல்லாரும் இப்பிடித்தானே வந்திட்டினம். நாங்கள் ஒண்டைக் கேட்டால் அவையள் ஒண்டைச் சொல்லுகினம். ஒவ்வொருவரும் என்ன சொல்லினம், என்ன செய்யினம் எண்டு ஒண்டுமா விளங்கேல்ல'' என்று மீண்டும் சிரித்தார் அந்த மனிதர்.

''நீங்கள் சொல்லுறது உண்மைதான்; சிலபேர் ஒண்டு கேக்க ஒண்டு சொல்லுகினம்... நான் ஒருதரைத் தேடுவதற்கு உங்களைப் பிடிச்சிருக்கிறன்'' என்று அவர் சொல்வதற்கு ஆமாம் போடுவதுபோலக் கூறிவிட்டு அவரது முகத்தைப் பார்த்தான். இவனது கதை அவருக்கு நன்கு பிடித்துவிட்டதுபோல அந்த முகத்தில் ஒருவிதமான திருப்தி இழையோடுவதைக் காண முடிந்தது.

''தம்பியும் என்தரவளிபோலைதான் கிடக்குது... ஆரையோ தேடிக்கொண்டு வந்திருக்கிற மாதிரிக் கிடக்குது; ஆரோ ஒரு

பழைய ஆளைத்தான் தேடுகிறீர்போல கிடக்குது; அதுதான் என்னட்டை விசாரிக்கலாம் எண்டு பாக்கிறீர்'' என்று சொல்லி முடித்தார் அவர். அவரே நேரடியாக விசயத்திற்கு வந்தது இராமநாதனுக்கு வாய்ப்பாகிவிட்டது.

தான் தேடிவந்த குறிப்புகளையும், அந்தக் குறிப்புகளைச் சொன்ன கிழவியைப் பற்றியும் சொன்னதோடு, தான் அந்த மாமாவின் பெயரை மறந்துபோன பரிதாபத்தையும் சொன்னான். இராமநாதனின் கதையை ஆர்வத்தோடு கேட்டுக் கொண்டிருந்தவர் அவனிடம் சொன்னார்: ''தம்பி அப்ப நீர் தேடிவந்தது மகாலிங்கத்தைத்தான் எண்டு நினைக்கிறன்.''

இராமநாதனுக்கு இப்போதுதான் மூளையில் பளிச்சென்று அந்தப் பெயர் தோன்றியது. அவன் தேடிக்கொண்டிருந்தது மகாலிங்கமேதான். தன்னுடைய வியப்பை அடக்கமுடியாமல் ''மகாலிங்கம்தான்...'' என்று கத்தியேவிட்டான்.

''ஓம் — ஓம் மகாலிங்கத்தார்தான் அவர்; மகாலிங்கத்தார் தான்; அவரைத்தான் தேடுறன்'' என்று ஆவலுடன் கேட்டான் இராமநாதன். ''மகாலிங்கத்தைத் தேடவேண்டியதே இல்லை; ஆர் தேடினாலும் அங்கை நிற்பார் மகாலிங்கம்'' என்று மீண்டும் சிரித்தார். இராமநாதனுக்கு அவரது பதில் புரிந்ததுபோலவும் இருந்தது; மிகுதி புரியாததுபோலவும் இருந்தது எதுவும் பேசாமல் அவரது முகத்தையே பார்த்தான்.

''என்ன தம்பி கனக்க யோசிக்கிறீர? நீர் தேடிவந்த மகாலிங்கம் நான்தான். வள்ளிப்பிள்ளை அக்கா — அதுதான் கிழவி, அவ என்ரை குஞ்சியற்றை பெட்டைதான். இப்ப விசயம் விளங்குதே?'' என்று மகாலிங்கத்தார் விபரமாகக் கூறினார்.

தான் இவ்வளவு நாளும் பட்ட துன்பங்கள் எல்லாம் ஒரே நிமிடத்தில் நீங்கிவிட்டதாக இராமநாதனுக்குத் தோன்றியது. இந்த மாமா எப்படியும் கைகொடுப்பார் என்று அவன் முழுமையாகவே நம்பிவிட்டான். ஆனால் அவருடைய வாழ்க்கையில் சென்ற பத்து ஆண்டுகள்தான் எத்தனை திருப்பங்களைக் கண்டு விட்டன! அந்த சில ஆண்டுகளின் பின்னால் ஒரு கண்ணீர் வரலாறு ஒழித்துக்கொண்டிருப்பதை எங்கள் இராமநாதன் எவ்வாறு அறிவான்?

ஜெயவர்த்தனா அரசு 'ஒப்பரேஷன் லிபரேஷன்' என்னும் இராணுவ நடவடிக்கையை வடமராட்சியில் நடத்தியது.

இதனைத் தொடர்ந்து கரும்புலி மில்லரின் நெல்லியடித் தாக்குதலால் உலகமே கதிகலங்கிப்போய் இருந்தது.

என்ன செய்வதென்று தெரியாமல் ராஜீவ்காந்தியிடம் ஓடினார் ஜெயவர்த்தனா. இவருக்கு புலிகளை வெல்லவேண்டும்; அவருக்கு இலங்கையில் ஒரு விரலையாவது பதித்துவைத்திருக்க வேண்டும். இதன் விளைவால் பிரசவித்ததுதான் இலங்கை - இந்திய ஒப்பந்தம் என்ற ஒரு குறைப்பிரசவக் குழந்தை.

இதனைத் தொடர்ந்து அமைதிப்படை வந்ததும் தமிழர் பிரதேசம் அமைதி அழிந்து தத்தளித்துத் தடுமாறியதும் நமக்கெல்லாம் மறக்கமுடியாத அனுபவங்கள்.

'இந்த நாசமாய்ப் போனவங்கள் எப்பதான் துலையப் போறாங்கள்' என்று எல்லோரும் அங்கலாய்த்துக்கொண்டிருந்தனர். ஆனால், ஒருநாள் மாயமோ மந்திரமோ என்று எல்லோரும் மூக்கில் விரல்வைத்து வியப்போடு பார்த்திருக்க இந்தியப்படை மூட்டையைக் கட்டிக்கொண்டு புறப்பட்டுப் போய்க்கொண்டிருந்தார்கள்.

இவர்கள் போய்க்கொண்டிருக்க அந்த இடங்களுக்கெல்லாம் புலிகள் வந்துகொண்டிருந்தார்கள். புலிகளை ஒழித்துவிட்டதாகச் சொன்னதெல்லாம் என்னவாயிற்று? இவர்கள் வளர்த்தல்லவா விட்டிருக்கிறார்கள்!

புலிகளோடு ஒட்டிக்கொள்ள இலங்கை இராணுவமும் முயன்றது. புலிகள் அதற்கு இடம்கொடுக்கவில்லை. இதனால் சிங்கள இராணுவம் கொதித்தெழுந்தது. இரண்டாவது முறையாகப் போர் வெடித்தது!

சிங்கள இராணுவம் மீண்டும் முகாம்களுக்குள் முடக்கப்பட்டது. ஆனால் கிழக்கில் இராணுவத்தின் கை ஓங்கியது.

மக்கள் பெரும் இன்னல்களுக்கு ஆளானார்கள். கிழக்கிலே இராணுவக் கெடுபிடிகளுக்குப் பயந்து ஏராளமான தமிழர்கள் வடக்கிற்கு வந்துசேர்ந்தார்கள்.

இதனைத் தொடர்ந்து கோட்டைக்குள் இருந்த இராணுவம் சுற்றிவளைக்கப்பட்டது. பல மாதங்கள் நடந்த கடுமையான போராட்டத்தின் பின்னர் கோட்டை வீழ்ந்தது. தொடர்ச்சியாகப் பல முகாம்கள் இவ்வாறு தாக்கப்பட்டன.

ஆனையிறவுக்குள் புகுந்து புலிகள் தாக்குதலைத் தொடுத்தார்கள். பல நூற்றுக்கணக்கான போராளிகள் மரணமடைந்தனர். விமானங்கள் அயலிலுள்ள கிராமங்களில் கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடத்தின.

இராமநாதனைக் கொண்டுவந்து நடுத்தெருவில் நிறுத்திவிட்டு பழங்கதை சொல்லிக்கொண்டிருக்கிறாரே என்று அலுத்துக்கொள்ள வேண்டாம்.

விமானங்கள் பறந்து பறந்து தாக்குதலை நடத்தின; போராளிகள் பாய்ந்து பாய்ந்து தாக்கினார்கள்.

கப்பலில் மேலும் படையினர் வந்து குவிந்தனர். இந்தப் போர் நடந்துகொண்டிருந்த காலகட்டம்தான் மகாலிங்கத்தாரின் வாழ்க்கையில் ஒரு திருப்புமுனை என்று சொல்லலாம்.

குறிதப்பிக் குண்டெறிவதில் பெயர்பெற்ற வான்படை விமானமொன்று வீசிய குண்டு மகாலிங்கத்தாரின் வீட்டைப் பதம்பார்த்தது. அந்த நேரத்தில் மகாலிங்கத்தார் வீட்டில் இருக்கவில்லை.

'மற்றவங்கள் மாதிரி எட்டுக்கொண்டு ஒன்பதுகொண்டிலையோ நான் கட்டினனான்? ஆறுக்கு ஒண்டுக் கலவையிலயெல்லோ கட்டினனான்' என்று மகாலிங்கத்தார் வீரம்பேசிய அந்த வீட்டின் பலமெல்லாம் பலவீனமாகிப் பலதுண்டங்களாகிவிட்டது.

அவரது மனைவி செல்லாச்சியும், ஒரேபிள்ளை பூமணியும் கூடவே அந்த வீட்டின் இடிபாடுகளோடு இடிபாடாகிவிட்டார்கள்.

மகாலிங்கத்தார் கத்தினார், கதறினார்... அவரது வாழ்க்கையே திடீரென்று சூனியமாகிவிட்டது. அந்தச் சூனியத்தில் எங்கும் இருள் கப்பியிருந்தது. கண்ணிருந்தும் குருடாக, காலிருந்தும் நடக்கமுடியாமல் தறிகெட்டுத் தடுமாறினார்; திக்குத்தெரியாமல் தடுமாறினார். நடுக்கடலில் புயலில் சிக்கிய சிறிய கப்பலாகி நின்றார் மகாலிங்கத்தார்.

'மலையே வந்தாலும் தலையே சும' என்று இருந்தவர் இப்போது பெரியதொரு பாதாளத்துள் விழுந்துவிட்டதாக உணர்ந்தார். யானைக்கு அடி சறுக்கினால் அதனால் எழுந்

திருக்கவே முடியாது. மகாலிங்கத்தார் தெளிந்து தேறுவதற்குச் சிலகாலம் சென்றது.

தான் ஆனந்தமாய்க் குடியிருந்த அந்த இடம் அலங்கோலமாய் ஆகிவிட்டதை அவரால் பொறுக்கமுடியவில்லை. வீட்டைக் கட்டிப்பார், கல்யாணத்தைப் பண்ணிப்பார் என்பது ஊர்வம்பு என்று சொல்லமுடியுமா? இரண்டையுமே செய்துபார்த்தவர்களுக்குத்தான் அதன் அருமை தெரியும்.

மகாலிங்கத்தாருக்கு வயது ஐம்பதுக்குமேல் இருக்கும். அவருடைய இத்தனை வருடகால உழைப்பு, வாழ்க்கை எல்லாமே இவ்வளவுதான். மகாலிங்கத்தாருக்கு மட்டுமல்ல நம்மில் அநேகருக்கும் இது பொருத்தமானது.

இப்படி எத்தனை பேருடைய வாழ்க்கையையும், உழைப்பையும் விழுங்கிவிட்டு, இன்னும் ஓயாத அசுரப் பசியுடன் இந்த யுத்த அரக்கன் வாயைப் பிளந்துகொண்டு இருக்கிறான். இதுவரையில் யுத்த அரக்கனின் பசியும் தீரவில்லை, யுத்தமும் முடிகிறபாடாய் இல்லை. தமிழர்களின் தலைவிதியை யார், எப்படி நிச்சயிக்கப்போகிறார்கள் என்பது அந்தக் காலதேவனுக்கும்கூடத் தெரியாது.

மகாலிங்கத்தார் அந்தக் கிராமத்தில் வாழப்பிடிக்காமல் அடுத்த கிராமத்தில் போய் ஒதுங்கிக்கொண்டார். அவருக்கு மிகவும் இஷ்டமான ஒரு நண்பரின் காணியில் ஒரு மூலையில் ஒரு சிறிய குடிசையை அமைத்துக்கொண்டார்.

இப்போது அவருக்குத் தேவையானதெல்லாம் தனிமை... தனிமை ஒன்றுதான். உணவைப் பற்றியோ; உறக்கத்தைப் பற்றியோ அவருக்கு சிந்திக்கமுடியவில்லை. அவரது கண்கள் சிந்தனையோடு தொடர்பின்றி அழுதுகொண்டிருந்தன; ஏதும் புரியாமல் அழுதுகொண்டிருந்தார்.

ஆதரவற்ற நேரத்தில் வடியும் கண்ணீரைத் துடைக்க நீளுவதுதானே நட்புக்கரம். நீண்டகால நட்பின் உரிமையோடு மகாலிங்கத்தாரைக் கவனித்துக்கொண்டார் அவரது நண்பர். தனது நண்பனின் கவலையைத் தனது கவலையாக எடுத்துக்கொண்டு, மகாலிங்கம் என்கின்ற அந்தப் பாறிப்போன மரத்தை முழுவதும் சரிந்து விழுந்துவிடாமல் முயன்று முட்டுக்கொடுத்து தமது தோளில் தாங்கிக்கொண்டார்.

நண்பரின் தோளில் சாய்ந்திருந்த அந்த மரம் மெள்ள மெள்ள உரம்பெற்று இரண்டொரு தளிர்கள்விட்டது. கவலைகளைத் தீர்க்கும் மருந்து காலம்தான் என்பது எவ்வளவு சரியான, அனுபவபூர்வமான கூற்று. நண்பனின் ஆதரவுமட்டும் இல்லாதிருந்தால் எப்படியோ போயிருக்கவேண்டியவர் படிப்படியாக வழமைக்குத் திரும்பிக்கொண்டிருந்தார்.

இப்போதெல்லாம் இடை இடையே மகாலிங்கத்தார் தம்முடைய வீட்டுக்கும் அங்கேதான் வீடே இல்லையே.. காணிக்கும் போய்வரத் தொடங்கினார். இடிந்துபோன அந்த வீட்டின் இடிபாடுகளை அகற்றினார். அந்த இடத்தில் ஓர் அழகிய பூந்தோட்டம் அமைத்தார். அங்கே வேப்பமரத்தின்கீழ் ஒரு சிறிய கொட்டில் அமைத்துக்கொண்டார். என்ன செய்வது? எங்களது நாட்டு சாஜகானால் இந்த அளவுக்குத்தான் தன்னுடைய தாஜ்மகாலைக் கட்டமுடிந்தது.

காலப்போக்கில் பழைய மனிதராகிவிட்டார். அனேகமாக ஒவ்வொரு நாளும் காலையில் இங்கே வந்துவிடுவார். ஏதோ சிறிய அளவில் தமது விவசாய முயற்சிகளையும் ஆரம்பித்தார். இப்போதெல்லாம் வாழ்க்கை அமைதியாகப் போய்க்கொண்டிருந்தது.

வழக்கம்போல இன்றைக்கும் தமது தாஜ்மகாலுக்குத்தான் போகிறார். ஆனால் கொஞ்சம் காலதாமதமாகப் போகிறார். அவரது இந்தக் காலதாமதம்தான் எங்களது இராமநாதனின் இந்த அலைச்சலுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்தது. ஏதோ ஒருபடியாக இருவரும் சந்தித்துவிட்டார்கள்; அறிமுகமும் ஆகிவிட்டார்கள்.

இராமநாதனின் நிலைமையைப் புரிந்துகொண்டார் மகாலிங்கத்தார். அவனைத் தனது தாஜ்மகாலுக்கேகூட்டிக்கொண்டு போவது எனத் தீர்மானித்தார். இராமநாதனையும் கூட்டிக்கொண்டு தாஜ்மகாலை நோக்கி நடந்தார். வழியில் இருவரும் அதிகம் பேசவில்லை; மௌனமாகவே நடந்து போனார்கள்.

# அத்தியாயம் 4

இராமநாதனும், மாமாவும் தாஜ்மகாலை அடைந்தார்கள். தம்முடைய கதையையோ, அல்லது தான் இராமநாதனை எங்கே கூட்டிக்கொண்டு போகிறேன் என்பதைப்பற்றியோ அவர் இராமநாதனிடம் இது வரை ஒன்றுமே சொல்லவில்லை. அவர் தம்முடைய வீட்டுக்குத்தான் கூட்டிக்கொண்டுபோகிறார் என்றுதான் நினைத்துக் கொண்டான். இப்படியொரு நந்தவனத்திற்கு அழைத்துக் கொண்டு வருவார் என்று அவன் நினைக்கவேயில்லை.

படலையைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தார் மாமா. அவனும் பின்னால் போனான். ஒரு நேரான கால் தடம் மட்டும் உச்சியில் வகிடு எடுத்தாற்போல் அழகாக ட்ரிம் செய்யப்பட்ட புல்தரையின் நடுவே நீண்டு ஓடியது.

நடைபாதையின் இருமருங்கும் பலவிதமான குறோட்டன் செடிகள் பல வர்ண இலைகளைத் தாங்கியவையாக நின்றன. அவற்றின் இடையே பத்தலாகக் கத்தரிக்கப்பட்ட சவுக்கு மரங்கள் தலையை நீட்டிக்கொண்டு நின்றன. அவர்கள் நடந்து போய்க்கொண்டிருந்த திசையில் இடதுபுறமாக ஒரு துரவு காணப்பட்டது. இத்தனை பூச்செடிகளையும் உயிர்வாழ வைக்கும் அமுதசுரபி.

மாமா அந்தச் சிறிய குடிசையின் வாசலில் போய்நின்றார். பின்னால் திரும்பி இராமநாதனைப் பார்த்தார். வெய்யிலில் நடந்துவந்த களைப்பு ஒரு புறம், புதிரான ஒரு இடத்திற்கு வந்துவிட்ட ஒருவகைக் குழப்பம் ஒருபுறமுமாக அவனது முகத்தில் பலவிதமான பாவங்களும் தோன்றி மறைந்துகொண்டிருந்தன.

வேறு மனிதர்கள் யாரும் இல்லாத அந்த இடத்தில், தனியானதொரு குடிசையின் முன்பாக, தான் கூட்டிவந்து நிறுத்தியிருப்பவன் ஒன்றும் புரியாமல் பேந்தப்பேந்த முழிப்பதைப் பார்க்க அவருக்குச் சிரிப்பாக இருந்தது. ஏதோ ஒரு மர்மக் கதையின் நாயகனை கூட்டிவந்து நிறுத்தி வைத்திருக்கும் வில்லனைப்போல் அவர் சிரித்தார்.

மேலும் அவனைக் குழப்புவதற்கு அவர் விரும்பவில்லை. அவனது முதுகைத் தட்டிக்கொடுப்பவர்போல சில வார்த்தைகளைக் கூறினார். ''தம்பி கனக்க ஒண்டும் யோசியாதையும். இதுதான் என்னுடைய வீடு; உள்ளுக்கை வாரும். கன விசயங்கள் சொல்லவேணும்'' என்று சொல்லிக்கொண்டே தட்டியைத் தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்தார்.

மாமா உள்ளே நுழைந்ததும் அவரைத் தொடர்ந்து உள்ளே நுழைவதற்குச் சிறிது தயக்கம் காட்டியவனாகத் தலையை மட்டும் உள்ளே நீட்டிக் கண்களைச் சுழலவிட்டுத் துளாவினான். வாசலுக்குச் சற்றுத் தள்ளி ஒரு பாய் தரையில் விரிக்கப்பட்டுக்கிடந்தது. பாய் கிடந்த திசைக்கு எதிராக மூன்று கல் அடுப்பு ஒன்று இருந்தது. அதற்கு அருகில் சில சமையல் பாத்திரங்கள், போத்தல்கள் என்பன பரப்பப்பட்டுக் கிடந்தன. அதை அடுத்துள்ள மூலையில் ஒரு மண்வெட்டி, கூடை, இரண்டு வாளிகள் மற்றும் சில பொருட்கள் கிடந்தன.

கண்களை ஓடவிட்டுக்கொண்டு தயங்கி நின்றவனை உள்ளே நின்றுகொண்டிருந்த மாமா பார்த்தார். அவனது தயக்கம் அவருக்குப் புரிந்தது. தன்னைச் சந்தித்ததில் இருந்து இராமநாதனுக்கு எல்லாமே குழப்பமாக இருப்பதை அவனது கண்களும், செயலும் அவருக்கு எடுத்துச்சொல்லிக்கொண்டிருந்தன. மேலும் குழப்பமடைய வைக்க அவர் விரும்பவில்லை. எனவே ஆறுதலாக, அமைதியாக அவனிடம் கூறினார்: ''தம்பி உள்ளை வாரும். ஒண்டுக்கும் யோசியாதையும்''.

'இந்தப் பாயிலை வந்து இரும் தம்பி' என்று அவனது கையைப் பற்றி உள்ளே இழுத்து பாயில் உட்காரவைத்தார். அவனை அதில் இருக்கவிட்டு மளமளவென்று அடுப்பை மூட்டினார். நல்ல வீர விறகு பொசுபொசுவென்று எரிந்தது. மேலும் இரண்டு கட்டைகளை அடுப்புக்குள் வைத்துவிட்டு இராமநாதனுக்குப் பக்கத்தில் வந்து அமர்ந்தார்.

இதுவரையில் ஏதும் பேசாமல் இருந்த இராமநாதன் இப்போது மெதுவாகப் பேசத்தொடங்கினான். தான் வந்திருக்

கிற இடம் ஏதோ தோட்டம் செய்யிற இடமாக இருக்க வேண்டும் என்றுதான் அவன் நினைத்தான். அந்த நினைப் போடுதான் பேசினான். ''இதுதான் உங்கடை கமமோ?'' என்று கேட்டான்.

மாமா சொன்னார் ''நீர் உப்பிடிக் கேட்பீரெண்டு எனக்குத் தெரியும். இதைப்பற்றித்தான் உமக்குச் சொல்லப்போறன்'' என்று பீடிகைபோட்டு கதையை ஆரம்பித்தார் மாமா.

ஆனந்தமாக அவர் வாழ்ந்த வாழ்க்கையைச் சொன்னார். தான் மகிழ்ச்சியாக வாழ்வது ஆண்டவனுக்கே பொறுக்க வில்லைப்போலும்! என்று சொல்லுமபோது அவர் குரல் தள தளத்தது; அடுப்பில் வைக்கப்பட்ட தண்ணீர் கொதிக்கின்ற சத்தம் கேட்டது. மாமாவினுடைய மனமும் அந்தத் தண்ணீ ரைப்போலத்தான் கொதித்துக்கொண்டிருந்தது.

அவனை இருக்கச்சொல்லிவிட்டு தேனீர் கலப்பதற்காக அவர் எழுந்தார். ஏதோ நினைத்துக்கொண்டவராக மூலையில் கிடந்த ஒரு வாளியை எடுத்தார். அதை இராமநாதனிடம் கொடுத்து அங்கேயுள்ள துரவில் தண்ணீர் நிரப்பிக்கொண்டு வரும்படி கேட்டார். அவன் தண்ணீரைக் கொண்டுவந்தான். தேனீர் தயாராக இருந்தது.

தேனீர்க்கோப்பைகளுடன் இருவரும் அருகருகே மீண்டும் அமர்ந்தனர். அவர்கள் உரையாடல் தொடர்ந்தது. தமது வரலாற்றை ஓரளவுக்குச் சுருக்கமாகச் சொல்லிமுடித்தார்.

மகாலிங்கத்தாரின் கதையைக் கேட்ட இராமநாதனுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. அல்லல்பட்டு, அவதிப் பட்டு அவரிடம் ஆறுதல் தேட வந்தவன் அவன். இப்போது மாமாவே ஆறுதல் தேடிக்கொண்டிருக்கிறார். இருவரும் பாதிக் கப்பட்டவர்கள் தான்.

இராமநாதன் சொத்து சுகங்களைத்தான் பறிகொடுத்தான். ஆனால் மாமாவோ சொத்து சுகங்களோடு தனது அன்பிற் குரியவர்களையும் சேர்த்து இழந்துவிட்டார். இருவருமே யுத்தத்தின் கொடுமைக்கு இலக்கானவர்கள். ஆனால் முன் பின்னாக பாதிப்புக்கு ஆளானவர்கள்; அவ்வளவுதான்.

மழைமேகங்கள் மோதிக்கொள்கிறபோது இடியும் மின்ன லும் ஒரே நேரத்தில்தானே தோன்றுகின்றன. மின்னல் முந்தி

வருகிறது; இடி பிந்தி வருகிறது. இதில் விளங்கவேண்டியது என்னவென்றால் இவை இரண்டினதும் தோற்றுவாய் ஒன்றே என்பதுதான்.

இந்த யுத்த ஆபத்து இத்துடன் முடிவடைந்துவிடப்போவதில்லை. நோயைக் குணப்படுத்துவதற்கு நோய் முதலை ஆராய்ந்து அதற்கு மருந்து செய்யவேண்டும். ஆனால் இங்கே நோயால் வருந்துபவனை அழித்துவிடு என்கிறார்கள். இவர்கள் எவ்வளவு கெட்டிக்காரர்கள்!

மாமா தனது சோகக்கதையைச் சொல்லிவிட்டார். இப்போது இராமநாதன் தனது பங்கிற்குத் தான்பட்ட வேதனைகளைச் சொல்லிக்கொண்டிருக்கிறான். இப்போதெல்லாம் நமது மக்கள் நன்றாக மாறிவிட்டார்கள். முன்பெல்லாம் இருவர் சந்தித்துக் கொள்ளும்போது தங்களது பிரச்சனைகளையும், பிரதாபங்களையும் பற்றிப் பேசுவார்கள். ஆனால் இப்போது தமது சோகக்கதையைக் கொட்டிக்கொள்கிறார்கள்.

இதில் வேடிக்கை என்னவென்றால், இன்னும் இவர்கள் உருப்படியாக ஏதாவது செய்யவேண்டுமே என்று சிந்திக்காதது தான். நாம் எல்லோரும் எப்போது தெளிவடையப்போகிறோம்? எப்போது காரியம் ஆற்றப்போகிறோம்?

ஒவ்வொருவருடைய கதையையும் மற்றவர் கேட்டுத் தெரிந்துகொண்டார். தங்களது கரங்கள் இப்போதைக்குத் தங்கள் கண்ணீரைத் துடைப்பதற்காகத்தான் என்பதை இருவருமே உணர்ந்தார்கள். இப்போது யார் முதலில் ஆறுதல் கூறுவது என்பதில் போட்டி ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

மாமா தரன் முந்திக்கொண்டார் இராமநாதனைத் தம்மோடு வந்து இருக்குமாறு அழைத்தார் அவர். அதற்காகத் தானே அவன் கிளிநொச்சிக்கு வந்திருக்கிறான். இத்தனை சிரமப்பட்டு மாமாவைத் தேடிப்பிடித்தான். ஆனால் இங்கே இருக்கின்ற இந்தச் சிறிய குடிசை அவனது குடும்பத்திற்குப் போதாததாய் இருந்தது.

மாமாவின் அழைப்பிற்கு இராமநாதன் உடனடியாக ஒன்றும் சொல்லாமல் தயக்கம் காட்டினான். அவன் எதையோ யோசிக்கிறான் என்பதை அவர் புரிந்துகொண்டார். அதற்கான காரணத்தை அறிய விரும்பினார்; எனவே அதுபற்றிக் கேட்டார்.

ஆச்சிரமத்தைப்போல இருக்கின்ற அந்தக் குடிசையிலே அவன் தனது குடும்பத்தைக் கொண்டுவருவது உடனடியாக முடியாது. தனது இந்த ஐயப்பாட்டை மாமாவிடம் கூறினான். இராமநாதனின் இந்தக் கருத்தைக்கேட்டு மாமா சிரித்தார். இதுவரையில் சீரியசான மனிதர்போலத் தோன்றியவர் சிரித்துப் பேசத் தொடங்கிவிட்டார்.

வீடு கட்டுவதென்பது வேண்டுமானால் யாழ்ப்பாணத்தில் பெரிய விசயமாக இருக்கலாம். வளமான முல்லை நிலமான வன்னியில் காட்டுக் கம்பும், களிமண்ணும் இருக்கும்போது கண்மூடி முழிப்பதற்குள் குடிசை ஒன்றை அமைத்துவிடலாம். கொஞ்சம் உழைப்புத்தான் வேண்டும். இருவருமாக உடனடியாக குடிசையை விஸ்தரிக்கவேண்டும் என்று முடிவுசெய்தனர்.

வீட்டு விஸ்தரிப்புத் திட்டங்கள் தயாராகிக்கொண்டிருந்தன. நேரம் மத்தியானத்தைத் தாண்டிப் போய்க்கொண்டிருந்தது. இராமநாதனுக்குப் பசி எடுக்கத் தொடங்கியது. சிறிது தண்ணீர் வாங்கிப் பருகினான்.

மாமா பசியைப்பற்றிக் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. அவர்தான் பசியை மறந்து வெகுநாளாயிற்றே. எந்தவிதமான ஆதரவுமின்றி, ஒரு யோகிபோலப் பற்றற்ற வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருந்தவருக்கு இந்த இராமநாதனின் வருகை ஒரு புத்துணர்ச்சி அளிப்பதாகவே இருந்தது.

அந்த உற்சாகத்தில் இப்போது சில ஆண்டுகளாகப் பாரிசவாதம் பிடித்து முடங்கிப்போய்க் கிடந்த அவரது நரம்புகளுக்கு ரொனிக் ஏற்பட்டது போலிருந்தது; எனவே அவருக்குப் பசி எடுக்காததில் பலவித நியாயங்கள் இருந்தன.

இராமநாதன் மீண்டும் கதையைத் திசைதிருப்புவதற்கு யோசித்தான். காலையில் இருந்து காய்ந்த வயிறு வேறு எதைப் பற்றியும் பேசவிடுவதாயில்லை. மெதுவாக, ''நேரம் நல்லாய்ப் போட்டுதுபோலை கிடக்கு'' என்று ஒரு புதிய சுருதியில் ஆரம்பித்து, அவரது பேச்சுக்கு நடுவே ''அப்ப இனிச் சாப்பாட்டுப் பிரச்சினையைப் பாப்பம்'' என்று சொல்லி ஒரு கொட்டாவியும் விட்டான். அது அவருக்குப் புரிவதுபோலவும் தோன்றியது; புரியாததுபோலவும் இருந்தது.

மொத்தத்தில் அவன் சொல்வதை ஆமோதிப்பவர்போலப் பதில் சொன்னார் அவர்: ''நேரம் போட்டுது, வெய்யிலும்

நல்லாய் ஏறிட்டுது'' என்றார். வந்திருக்கும் இராமநாதனுக்கு சாப்பாடு போடவேண்டும் என்பது அவரது மூளைக்கு இப்போதுதான் தாமதித்துத் தோன்றியவராக ''கதைப்பிராக்கில சரப்பாட்டை மறந்திட்டன் '' என்று இழுத்தார்.

தன்னிடம் வந்துள்ளவனுக்குப் பசியாற ஏதாவது கொடுக்க வேண்டுமே. அவர் அப்படியொன்றும் பெரிதாகச் சமையல் செய்வதில்லை; ஏதாவது கஞ்சி வைத்துக் குடிப்பார் அல்லது எதுவுமே சாப்பிடாமல்கூட இருந்துவிடுவார். இன்றைக்கு அப்படி இருந்துவிட முடியாது. இராமநாதனை இருக்கச் சொல்லிவிட்டு விறுவிறுவென்று செயற்படத் தொடங்கினார். அவர் வேலைசெய்வதைப் பார்ப்பது இராமநாதனுக்கு மன துக்குக் கஷ்டமாயிருந்தது.

தானும் கையுதவியாக ஏதாவது செய்யவேண்டும்போல் இருந்தது. மாமா தேங்காய் ஒன்றை எடுத்து பக்கத்தில் கிடந்த ஒரு கல்லில் ஓங்கி அடித்தார்; அது இரண்டு பாதியாகியது. தேங்காயைத் தன்னிடம் தரும்படி இராமநாதன் கேட்டு வாங்கி னான். இப்போது இருவருமாக இணைந்துகொண்டனர்.

அருமையான பாற்கஞ்சி தயாராகியது. இராமநாதனுக்கு இருந்த பசிக்கு அது தேவாமிர்தமாய் இருந்தது. இவ்வளவு நாளும் பசியைப் பற்றிய சிந்தனையே இல்லாமல் இருந்த மகா லிங்கத்தார் இன்று ஆவலோடு அந்தக் கஞ்சியைப் பருகினார் வாழ்க்கையில் ஒரு வெறுப்புடன் இவ்வளவு காலத்தையும் கடத்திவிட்டவருக்கு இன்று இராமநாதனின் வருகையால் ஒரு பிடிப்பு ஏற்பட ஆரம்பித்துவிட்டது. கஞ்சிப் பானையை இரு வரும் காலிசெய்துவிட்டனர்.

நமது செயல்கள் எல்லாவற்றிற்கும் மனம்தானே காரண கர்த்தா. மனசு நிறைஞ்சிருந்தா மற்றதெல்லாம் நிறைஞ்சிருக் கும் என்றது எவ்வளவு உண்மையான கூற்று!

சாப்பிட்டு முடிந்தது. இருவரும் மீண்டும் பழைய கதையைத் தொடர்ந்தனர். கதைத்துக்கொண்டே இராமநாதன் பாயில் சரிந்தான். சற்றுநேரத்தில் அயர்ந்து தூங்கிவிட்டான். அங்கே இருந்த ஒரு சாக்கை எடுத்துப் போட்டுக்கொண்டு மாமாவும் மடங்கிவிட்டார்.

இராமநாதன்தான் முதலில் விழித்துக்கொண்டான். சூரியன் மறைய ஆரம்பித்திருந்தான்; இலேசாகப் பொழுது மங்கத்

தொடங்கியிருந்தது: அவன் மாமாவைத் தட்டி எழுப்பினான். பொழுதுபட்டுவிட்டது; அவர் இப்போது தமது வசிப்பிடத்திற்குச் செல்லவேண்டும். அது அவ்வளவு தூரம் இல்லைத்தான், இருந்தாலும் நேரத்தோடு போவது நல்லது என்று புறப்பட்டார்கள்.

அவர்கள் மகாலிங்கத்தாரின் இரவு வாசஸ்தலத்திற்கு வந்து சேரும்போது நல்ல இருட்டாகிவிட்டது. மாமா இரவுச் சாப்பாடு தனது நண்பருடனேதான் சாப்பிடுவார் இராமநாதன் வருவது பற்றி அவருக்குத் தெரிந்திருக்க முடியாது. எனவே வருகிற வழியிலேயே பாணும் வாழைப்பழமும் வாங்கிக்கொண்டு வந்தார்கள்.

மகாலிங்கத்தாரின் இந்த வாசஸ்தலம் கொஞ்சம் பரவாயில்லை.

மாமாவின் நண்பர் கொஞ்சம் வசதியாகவே தமது நண்பரை வைத்திருக்கிறார். உள்ளே முதலில் நுழைந்த மாமா, கை விளக்கைத் தேடிப்பிடித்து ஏற்றினார். இங்கே எல்லாம் ஒழுங்காக வைக்கப்பட்டிருந்தது. இது இராமநாதனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

போதாக்குறைக்கு அவர் ஒரு சுடுதண்ணிப் போத்தலில் இருந்த பால் சேர்ந்த தேனீரை இரண்டு கோப்பைகளில் ஊற்றினார்.

''இதெல்லாம் உவன் கனகலிங்கத்தின்ரை வேலை. அவன்ரை பெடிச்சியொண்டு இருக்கிறாள், சாந்தி எண்டு பேர் இஞ்சை எல்லாத்தையும் கவனிக்கிறது அவள்தான். பொழுதுபட தேத்தண்ணியும் கொண்டுவந்து வைச்சிடுவாள் எனக்குப் பிறக்காத என்ரை புள்ளை.''

கல்லினுள் இருக்கின்ற தேரைக்கும், கருப்பையினுள் இருக்கின்ற உயிருக்கும் உணவளிப்பான் இறைவன். ஆதரவற்றவர்களுக்கும், அநாதைகளுக்கும், ஏதிலிகளுக்கும்கூட அவனேதான் துணையாக இருக்கிறான்.

வாசற்பக்கமாக மண்ணினால் உயர்த்தி ஒரு குந்து போடப்பட்டிருந்தது. அதில் இருவருமாக அமர்ந்து தேனீரைக் குடித்துக் கொண்டிருந்தாகள்.

''என்ன மகாலிங்கம் வந்திட்டாய்போலை வேறையும் ஆரோ கதைச்சுக் கேட்டுது அதுதான் பாப்பம் எண்டிட்டு வாறன்'' என்றபடியே கனகலிங்கண்ணை உள்ளே வந்தார்.

## அத்தியாயம் 5

"கனகலிங்கம் வாடாப்பா வா, வா... உனக்கு இண்டைக்குச் சொல்லுறதுக்குக் கனகதை இருக்குது'' என்ற ஒரு பீடிகையுடன் ஆரம்பித்தார் மாமா. கனகலிங்கண்ணை உள்ளே வந்து அமர்ந்தார்.

அவருக்கு இராமநாதனை அறிமுகம் செய்துவைத்தார் மாமா. கனகலிங்கம் எல்லோரிடமும் சரளமாகப் பழகும் குணமுடையவர். சுவாரஸ்யமாகக் கதைக்கத்தொடங்கிவிட்டாரேயானால் அவரைப் பிடித்து நிறுத்துவது இலகுவான காரியம் அல்ல.

அன்று பரபரப்பான ஒரு விசயம் கொழும்பில் நடந்திருந்தது. கொழும்பில் கொலன்னாவையிலுள்ள பெற்றோல் சுத்திகரிப்பு நிலையத்தில் குண்டு வெடித்தது இதனால் அங்குள்ள எண்ணெய் சேகரிப்புத் தாங்கிகளில் பெரும் தீ மூண்டிருந்தது. பெரிய அளவில் மூண்டிருந்த அந்தத் தீயை அணைக்க முடியவில்லை.

அன்றைய பத்திரிகைகள் முழுவதும் இதே செய்தியாகவே நிரம்பியிருந்தது. கனகலிங்கண்ணை அந்தச் செய்தியை அவர்களுக்குச் சொல்லிக்கொண்டிருந்தார். ''உந்தளவு பாதுகாப்புள்ள இடத்துக்குள்ளை என்னண்டு துணிஞ்சு உள்ளட்டாங்கள்?'' என்று தம்முடைய வியப்பை வெளியிட்டார்.

''இஞ்சை சனங்களின்ரை மனமும் வயிறும் பத்தி எரியுது. அதுதான் அங்கையும் நெருப்பும் பத்தி எரியுது. இஞ்சை எங்கடை ஆக்களைக் குடியெழுப்பினால் அங்கை குண்டு

வெடிக்காமல் என்ன செய்யும்?'' கனகலிங்கத்தாருக்கு உள்ள வயிற்றெரிச்சல் வார்த்தைகளில் தெரிந்தது.

இராமநாதனுக்கு இந்தச் செய்தி பெரிய அளவில் எந்த விதமான தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. நாட்டுநடப்புக் களைப்பற்றிக் கதைப்பதற்கு ஏற்ற மனநிலையில் அவன் இல்லை.

அனுமான் மீண்டுமொருமுறை இலங்கைக்கு வந்து நாட்டையே எரியூட்டினாலும் அதைப்பற்றிக்கூட அவன் கவலையடையும் மனோநிலையில் இல்லை.

இருந்தது எல்லாவற்றையும் இழந்துவிட்டான். இருக்கக் கூட இடமில்லாமல் இங்கே வந்திருக்கிறான். அவன் தனி யொருவன் அல்லவே. அவனை நம்பி இன்னும் மூன்று ஜீவன் கள் உண்டு. மனைவி, ஒரு குழந்தை, வயதான மாமியார் இருக்கிறார்கள்.

முதலில் அவர்களை ஒரு இடத்தில் குடியமர்த்தவேண்டும். பின்னர் தொழிலை ஆரம்பிக்கவேண்டும். இரண்டுக்குமே அத்திவாரம் போட்டாயிற்று. இனி அந்த இரண்டு விடயங் களும்தான் அவனது நினைவை ஆக்கிரமித்துக்கொண்டு நிற்கின்றன.

இராமநாதன் அதிகம் பேசாமல் அமைதியாய் இருந்தான். கனகலிங்கண்ணைக்கு தம்முடைய செய்தி விமர்சனம் எடுபட வில்லை என்று கவலையாகிவிட்டது. இல்லாவிட்டால் இவன் ஒரு பேசாமடந்தையோ என்றும் சந்தேகம் உண்டானது. எனவே சமாளித்துக்கொண்டு தமது அதிருப்தியை மகாலிங்கத் தாரிடம் வெளியிட்டார்.

''பெடியன் நல்லா அலைக்கழிஞ்சுபோனான். யாழ்ப் பாணத்தைவிட்டு வெளிக்கிட்டு ரண்டு மாதமாகுது தெரியாதே... அதான் ...'' என்று சமாளித்தார். கனகலிங்கண்ணைக்கு இது தெரியாத விசயமல்ல. அவரது வீட்டிலும் இரண்டு குடும்பங் கள் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்து தங்கியிருக்கிறார்கள். 'ஓமோம் மெய்யான கதைதான்'' என்று ஆமோதித்தார்.

இவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது சாந்தி மகாலிங்கத் தாருக்குச் சாப்பாடு கொண்டுவந்தாள். வழக்கம்போல உள்ளே நுழைந்தவள் ஒரு இளைஞன் இருப்பதைக்கண்டு கொஞ்சம் மிரண்டுபோனாள். அவள் இதைக் கொஞ்சங்கூட எதிர்பார்க்க வில்லை. மகளின் தயக்கத்தைக் கண்ட கனகலிங்கண்ணை மகளுக்கு,

"அது மகாலிங்கத்தின்ரை மருமோன்: யாழ்ப்பாணத்திலை இருந்து பெடியன் வந்திருக்கு. உதைக்கொண்டுபோய் இரண்டு பேருக்கு அளவாய்ப் போட்டுக்கொண்டுவா" என்று சொன்னார். அதற்குள் அவள் இராமநாதனை ஒரு நோட்டம் விட்டு விட்டாள்: தகப்பன் சொன்னதும் ஒன்றும் பேசாமல் வந்த வேகத்திலேயே திரும்பிவிட்டாள்.

இடையில் மகாலிங்கத்தார் தாங்கள் பாண் வாங்கி வந்ததை மறந்து பேசாமலே இருந்துவிட்டார். சாந்தி, அது தான் அவளது பெயர், மீண்டும் வந்தாள். உள்ளே போய்ச் சாப்பாட்டை வைத்தாள். பெரியவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்தார்கள். வெளியே வரும்போது ஓரவிழிகளால் இராமநாதனை நோட்டமிட்டபடியே வெளியேறினாள்

இராமநாதன் எதைப்பற்றியும் சிந்தையில்லாமல் எங்கேயோ பார்த்துக்கொண்டிருந்தான்.

சிறிது நேரம் கதைத்துக்கொண்டிருந்துவிட்டு கனக லிங்கண்ணையும் போய்விட்டார். அதன் பிறகு இருவரும் சாப்பிட்டுவிட்டுப் படுத்துக்கொண்டார்கள். சற்றுநேரத்திற் கெல்லாம் இருவரும் அயர்ந்து தூங்கிவிட்டார்கள்.

மறுநாள் விடிகாலையுடன் புறப்படத் தயாரானான் இராம நாதன். முதலில்போய் வீட்டுக்காரரை அழைத்துக்கொண்டு வரவேண்டும். மகாலிங்கத்தாரின் தாஜ்மகாலில் இப்போதைக் குச் சமாளித்துக்கொள்ளவேண்டும்.

விரைவில் அதை விஸ்தரிக்கவேண்டும். பின்னர் மகாலிங்கத் தாரின் கைவிடப்பட்ட விவசாயத்தை ஆரம்பிக்கவேண்டும். இவ்வளவையும் எப்படியோ அவன் சமாளித்தாகவேண்டும். சிந்திப்பதற்கு அவனுக்கு நேரமில்லை. மாமாவிடம் சொல்லிக் கொண்டு புறப்பட்டுவிட்டான். அவரும் அவனை அனுப்பி வைத்தார்.

மகாலிங்கத்தார் அவன் போனபின்னர்தான் எழுந்து உட் கார்ந்திருந்தார். அவருக்கு அவசரப்படுவதற்கு ஏதுமில்லை. முகத்தைக் கழுவிவிட்டுத் திண்ணையில் வந்து அமர்ந்தார். வழக்கமாக அவர் இப்படித்தான் வந்து உட்கார்ந்திருப்பார். அதன் பிறகு சாந்தி தேனீர் கொண்டுவந்து கொடுப்பாள்.

இரண்டு தேனீர்களுடன் வந்தவளின் கண்கள் வீட்டுக் குள்ளே துளாவின. கிணற்றடி, பின்புறம் எல்லாம் உருண்டன. மகாலிங்கத்தார் இதைக் கவனித்தார்.

''நீ அவன் பெடியனைத் தேடுகிறாய்போலகிடக்கு. அவன் வேளையோடை போட்டான்.''

அவளுக்கு ஏமாற்றமாகிவிட்டது. அவன் யார்? இனிமேல் திரும்பிவரமாட்டானா? அவனை மீண்டும் சந்திக்க முடியுமா? இப்படியெல்லாம் ஒரே நேரத்தில் பல கேள்விகள் அவள் உள்ளத்தில் எழும்பி விடைகாணப்படாமல் இருந்துகொண்டிருந்தன;

கொண்டுவந்த இரண்டு தேனீர்களையும் குந்திலே வைத்தாள். தேனீர்க் கோப்பையைக் கையிலே எடுத்தபடி ''இராமநாதன் நாளைக்கு இல்லாட்டி நாளையின்டைக்கு வந்திடுவான். விடிய தேத்தண்ணிகூடக் குடிக்காமல் போட்டான்'' என்றார்.

சாந்திக்கு அவனது பெயரைத் தெரிந்துகொண்டது ஒரு விதமான இனம்புரியாத மகிழ்ச்சியைக் கொடுத்தது. அவள் எத்தனையோபேரைச் சந்தித்திருக்கிறாள்; ஆனால் இப்படியான ஒரு அங்கலாய்ப்பு ஏற்படவில்லை.

தன்னுடைய எந்தவிதமான சலனத்தையும் வெளியே காட்டாமல் ''அதுக்கென்ன நீங்கள் தேத்தண்ணியைக் குடியுங்கோ. நான் போறன்'' என்றவள் வேகமாகத் திரும்பிப் போய்விட்டாள். இராமநாதனுடைய தேனீர் அப்படியே கிடந்தது.

## அத்தியாயம் 6

காலை ஏழு மணிக்கு முன்பாக இராமநாதன் கோவிலுக்குத் திரும்பிவிட்டான். அங்கே ஒரு பத்துப் பன்னிரண்டு குடும்பங்கள் தங்கியிருந்தன. பெரும்பாலும் ஒரு வசதியான இடம் தேடும்வரை அங்கே தங்கியிருக்கின்ற குடும்பங்கள்தான் அதிகமானவை. தொடர்ந்து வசிப்பதற் கேற்ப இடவசதியில்லை.

காலையில் ஆறு மணிக்கு முன்பாகவே எல்லோரும் எழுந்து விடுவார்கள். தற்காலிகக் கழிப்பறைகள் இரண்டு அமைத்துக் கொடுத்திருந்தார்கள். காலையில் இங்கு ஒரு முற்றுகையே நடந்து முடியும்; கிணற்றடியிலும் இதே கதைதான்.

எல்லாவற்றையும்விட இப்படியான இடங்களில் பெண்களை அனுசரித்துப்போவது மிகவும் கடினம். ஏதோ வந்தாயிற்று; வந்த இடத்தில் வருகின்ற பிரச்சனைகளுக்கு முகம்கொடுத்துத் தான் தீரவேண்டும்.

முருகனும்கூட ஒருசமயம் கைகலையில் உள்ள அப்பா வோடு சண்டை போட்டுக்கொண்டு பழனிக்கு இடம்பெயர்ந் தவன்தானே! பழனியில் அவன் ஆண்டியாகத்தானே நின்றான். எனவே இடப்பெயர்ச்சியில் உள்ள கஷ்டநஷ்டங்கள் அவனுக் குத் தெரியும். அதனால் இங்கே நடக்கும் எல்லாவற்றையும் அமைதியாகப் பார்த்துக்கொண்டிருந்தான்.

இராமநாதன் வந்தபோது கிழவி தேனீர் கலந்துகொண் டிருந்தாள். யசோதா மகளைக் கழுவித் துடைத்துக்கொண் டிருந்தாள்.

அவனைக் கண்டதும் ரமா, 'அப்பா...' என்று மகிழ்வோடு கத்தினாள். இராமநாதன் மறக்காமல் வரும்போது அவளுக்காக பிஸ்கட் வாங்கி வந்தான். அவன் வெளியே போய்வந்தால் ரமாவிற்கு ஏதாவது வாங்கிவர வேண்டும். இல்லாவிட்டால் நிலத்தில் விழுந்து கத்துவாள்.

பிஸ்கட்டைப் பிள்ளையிடம் கொடுத்தான்.

''போன விசயம் என்னப்பா? மாமாவைக் கண்டியளோ?'' எனக் கேட்டாள் யசோதா.

''அதெல்லாம் கண்டுகொண்டுதான் வாறன். காலமை களையாய்க் கிடக்குது; தேத்தண்ணியைத் தா'' என்றான் அவன்.

கிழவி எல்லோருக்கும் தேனீர் கொடுத்தாள். அதைக் குடித்துக்கொண்டே கதையைச் சொல்லத் தொடங்கினான் அவன்.

மாமாவைத் தான் சந்தித்த விதத்தை அவன் விபரித்த போது எல்லோரும் சிரித்தேவிட்டார்கள்.

''எல்லாமே நாளுக்குநாள் மாறிக்கொண்டுதானே இருக்கிறது.''

''நான் பழைய காலத்தைச் சொன்னன்'' என்று கிழவி தனது பக்கத்தைச் சரிசெய்துகொள்ள முயன்றாள்.

சிரிப்பு ஓய்ந்ததும் ''மாமா எப்படி இருக்கிறார்?'' என்று கேட்டாள் கிழவி. இராமநாதன் மாமாவின் கதையைச் சொல்லத் தொடங்கினான்.

கிழவி இராமநாதனின் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தாள். யசோதா பிள்ளைக்குத் தேனீரைப் பருக்கிக்கொண்டே கதையைக் கேட்டாள்.

குண்டுவீச்சில் வீடு உடைந்தது வரை சொல்லியாயிற்று. அடுத்த விபரம் சொன்னபோது கிழவி இலேசாக விம்பத் தொடங்கினாள். இராமநாதன் சொல்லிக்கொண்டே போனான். கிழவி மெல்ல மெல்ல அழத்தொடங்கினாள். ஆனால் அவள் தனது அண்ணனுக்காக அழுகிறாள். ஒருபடியாக கிழவி சமாதானம் அடைவதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது.

எல்லோரும் மறுநாள் காலையிலேயே புறப்பட்டுப் போவ தாகத் தீர்மானித்துக்கொண்டார்கள்.

இரவு முழுவதும் கிழவிக்குத் தூக்கமே இல்லை. படுக்கையில் புரண்டு புரண்டு படுத்தாள். இடையிடையே முனகிக்கொண் டும் இருந்தாள். இராமநாதன் அலுத்துப்போய் இருந்தானாகை யால் நன்றாகத் தூங்கிவிட்டான்.

குழந்தை புரண்டு படுக்கும்போது யசோதாவைக் காலால் உதைத்துவிட்டது. கண்ணை முளித்துக்கொண்டவள் பிள்ளை யின் படுக்கையைச் சரிசெய்தாள். பக்கத்தில் புசத்திக்கொண்டு கிடந்தாள் கிழவி.

"உனக்கு நித்திரை வராட்டி பேசாமல் கிடவன்; அங்காலை படுத்திருக்கிறதுகள் பேசப்போகுதுகள்'' என்று கிழவியை அதட்டிவிட்டுப் படுத்துக்கொண்டாள்.

பக்கத்தில் கொளுத்தி வைக்கப்பட்ட நுளம்புத்திரியையும் சட்டைசெய்யாது நுளம்பும் வந்து முகாரி பாடியது.

கிழவிக்குத் தமையன்மீது ஏற்பட்ட அனுதாப அலை அவளது இதயத்தைப் போட்டு உருட்டிக்கொண்டிருந்தது. அதனால் அவள் படுக்கையில் உருண்டுகொண்டிருந்தாள். இடை யிடையே தூக்கக் கலக்கத்தில் எதை எதையோவெல்லாம் புசத்திக்கொண்டிருந்தாள்.

நுளம்புப்படை கட்டுக்கடங்காமல் இடையிடையே தமது சோககீதத்தை இசைத்தபடி தலையை நீட்டவே, ரமா நித்திரை குழம்பி அடிக்கடி எழும்பிக்கொண்டிருந்தாள்.

ஒவ்வொரு முறையும் கூடவே யசோதாவும் விழிக்கவேண்டிய தாயிற்று. இப்படியே இவர்கள் மூவரும் நித்திரையுடன் போராட் டம் நடத்திக்கொண்டிருக்கும்போது நேரம் மட்டும் இவர்களுக் குத் தெரியாமல் ஓடிக்கொண்டிருந்தது.

கோழிகள் கூவி, விடியப்போகிறது என எல்லோருக்கும் அறிவித்தன.

மனதிலே சுமை இருக்கும்போது இரவுப்பொழுது மெள்ளத் தான் ஊர்ந்து செல்லும். நீண்டுகொண்டிருந்த இந்த இரவுப் பொழுதில் தவித்துக்கொண்டிருந்தவர்களுக்கு கோழி கூவியது ஏதோ ஒரு பெரிய மலை உச்சியை ஏறி முடித்ததுபோல இருந்தது.

படுக்கையில் இருந்து முதலில் எழும்பியது கிழவிதான். கிழவியைத் தொடர்ந்து யசோதாவும் எழும்பிவிட்டாள். ஆனால் இராமநாதன் மட்டும் அசையவே இல்லை. இரண்டு மூன்று நாட்களாகச் சரியான தூக்கமில்லாமல் இருந்தவன் தன்னை மறந்து தூங்கிக்கொண்டிருந்தான்.

கிழவியும் யசோதாவும் ஆறு மணிக்கெல்லாம் தயாராகி விட்டார்கள். யசோதா இராமநாதனை எழுப்பினாள். அவனுக்கும் வெய்யில் ஏறுவதற்கு முன்னர் மாமாவின் வீட்டுக்குப் போய்விடவேண்டும் என்பதில் ஆர்வம் இருந்தது. மளமள வென்று காலைக் கடன்களை முடித்துக்கொண்டு தயாரானான். அவர்கள் ஏழு மணிக்கெல்லாம் கிளம்பிவிட்டார்கள்.

பாரமான பெட்டிகள் சைக்கிளில் ஏறிக்கொண்டன. கூடவே ஒரு தலையணையைப் போட்டு அதன்மேல் ரமாவையும் உட்கார வைத்துக்கொண்டு சைக்கிளைத் தள்ளினான் இராமநாதன். மற்றவர்கள் இருவரும் அமைதியாக அவனைப் பின்தொடர்ந் தார்கள். இந்த அலைச்சல் இன்றோடு தொலையப்போகிறது என்பதால் அவர்களுடைய நடையில் ஒரு வேகம் தெரிந்தது.

பத்துமணியளவில் மாமாவின் தாஜ்மகாலுக்கு வந்து சேர்ந் தார்கள் அவர் இவர்களின் வருகையை எதிர்பார்த்திருந்தவர் தான். ஆனால் இவ்வளவு விரைவில் இராமநாதன் குடும்பத் துடன் வந்து சேருவான் என்று அவர் நினைக்கவில்லை.

கண்டுகாலிகளுக்குத் தண்ணீர் ஊற்றிக்கொண்டு நின்றார் அவர். கிழவி அவரைக் கண்டுவிட்டாள். 'என்ரை அண்ணை' என்று தொடங்கிப் பெரிதாக ஒப்பாரிவைக்கத் தொடங்கி விட்டாள். மகாலிங்கத்தார் எல்லாவற்றையும் போட்டுவிட்டுச் செய்வதறியாமல் சிலைபோல நின்றார்.

கிழவிக்கு எங்கிருந்து இத்தனை சக்தி கிடைத்ததோ தெரிய வில்லை. ஓடிச்சென்று தமையனைக் கட்டிக்கொண்டு கதறி னாள். மகாலிங்கத்தாரின் கண்களில் இருந்து நீர் ஆறாகப் பெருகியது.

தாயார் கதறுவதைக்காண யசோதாவிற்குப் பொறுக்க முடியவில்லை. அவள் தாயிடம் ஓடினாள். 'அம்மா... அம்மா' என்று அவளும் கத்தினாள். இவர்கள் ஏன் இப்படிக் கத்து கிறார்கள் என்பதைக் குழந்தை ரமாவால் எப்படிப் புரிந்து கொள்ள முடியும்? அவள் ஏதும் புரியாமல் பயந்துபோய் எல்லோருடனும் சேர்ந்து கத்தினாள்.

இராமநாதன் சைக்கிளை ஒரு மர நிழலில் நிறுத்திவிட்டுப் பிள்ளையை இறக்கி அவளைத் தேற்ற முயன்றான். பிள்ளை அடங்காமல் அவனிடமிருந்து விலகி தாயிடம் அழுதுகொண்டே ஓடியது. இராமநாதன் பேசாமல் அவர்களையே பார்த்துக் கொண்டுநின்றான். அவன் 'தானாடாவிட்டாலும் தசையாடுது' என்றதன் அர்த்தத்தைப் படித்துக்கொண்டிருந்தான்.

அழுகை என்பது ஒரு நல்ல அவுசதம். அழுது தீர்த்து விட்டால் நெஞ்சில் உள்ள சுமை இறங்கிவிடும் என்பார்கள். இது இராமநாதனுக்கும் தெரியும்போலும். அவன் அந்த மர நிழலில் அப்படியே அமர்ந்துகொண்டான்.

ஒன்றும் பேசாமல் வானத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். வானம் நிர்மலமாக-நீலநிறமாக இருந்தது. முகிற்கூட்டங்கள் எதுவுமில்லை. பிரகாசமாக எறித்த சூரியன் அவனது கண்களைக் கூசச்செய்தது. இப்போது அவன் கண் களை மூடிக்கொண்டான்.

ஏதோ தியானத்தில் ஆழ்ந்திருப்பவனைப்போல அவனது தோற்றம் இப்போது இருந்தது. ஆம், அவன் தியானத்தில் தான் இருக்கிறான் மூடியிருந்த அவனது கண்களுக்குள் எத்தனையோ காட்சிகள் சலனப்படம்போல ஓடிக்கொண் டிருந்தன.

இதுவரையில் நடந்து முடிந்த விடயங்களும் தெரிந்தன. இனிமேல் நடக்க இருக்கின்ற அல்லது இதுவரையில் நடக்காத விடயங்களும் இருந்தன.

சினிமாப்படத்தைப்பற்றிப் பலவிதமான அபிப்பிராயங்கள் உண்டு. இரண்டு அல்லது இரண்டரை மணிநேரம் நம்மை ஒரு பிரமையில் வைத்திருக்கக்கூடிய ஒரு போதைமருந்து என்பது பொதுவான அபிப்பிராயம். அதனால்தான் மக்கள் அதிலிருந்து விடுபடமுடியாமல் படம் பார்க்க ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.

நித்திரையும், விழிப்பும் இல்லாத இப்படியொரு யோக நிலையில் இருந்தவனுக்கு திடீரென்று சுயநினைவு வருகிறது. உஷாராகிவிட்ட அவனது கண்கள் அந்த இடத்தைச் சுழன்று வந்தன. அவனது காதுகளில் சில பேச்சுக்குரல்கள் கேட்டன. அங்கே சுழன்று வந்த கண்கள் பேச்சு வந்த இடத்தில் குத்திட்டு நின்றன.

நெடுநாட்கள் கழித்துக் கூடியவர்களின் குமுறல்கள் முடிந்து பரஸ்பரம் ஏதோ கதைத்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்கும் இப்போதுதான் இராமநாதனின் நினைவு வந்திருக்க வேண்டும். எல்லோரும் இராமநாதன் நின்றிருந்த பக்கமாக வந்துகொண்டிருந்தார்கள்.

இராமநாதனும் அவர்களோடு சேர்ந்துகொண்டான். எல்லோருமாக மாமாவின் அந்தச் சிறிய குடிசையை அடைந்தார்கள்.

வந்தவர்கள் முதல் வேலையாகத் தேனீர் குடித்து இளைப்பாறிக்கொண்டார்கள். யசோதா இயங்கத்தொடங்கினாள். இடத்தைத் துப்புரவாக்கினாள். இயத்துக்களைக் கழுவி ஒழுங்காக அடுக்கினாள். சமையலைத் தொடங்கினாள்.

மகாலிங்கத்தாருக்கு புதிய உற்சாகம் பிறந்திருக்கவேண்டும். இராமநாதனின் சைக்கிளை வாங்கிக்கொண்டார். கடைத்தெருப் பக்கம்போய் மீனும் மரக்கறிகளும் கொண்டுவந்தார்.

ஒருபடியாகச் சமையல் ஆயிற்று. இத்தனை வருடங்களுக்குப் பிறகு உறைப்புப் புளிப்பாக ஒரு சாப்பாடு சாப்பிட்டிருக்கிறார் மகாலிங்கத்தார். சாப்பாடு முடிந்ததும் எல்லோரும் படுத்து நன்றாகத் தூங்கிவிட்டார்கள். தொண்டருக்கு மட்டுமன்றி தொடர்ந்து இடம்பெயர்பவர்களுக்கும் உண்ட களை இருக்கிறதுபோலும்!

இராமநாதன் கிளிநொச்சியில் வாழ்க்கையைத் தொடங்கிவிட்டான். மகாலிங்கத்தாரின் சிறிய குடிசை பெரிதாகிவிட்டது. மாமாவின் கைவிடப்பட்ட தோட்டக்காணியில் பச்சை தெரிய ஆரம்பித்துவிட்டது. இராமநாதனும் மகாலிங்கத்தாரும் முழுநேரமும் உழைத்தார்கள். சமையல் நேரம்போக மற்ற நேரங்களில் யசோதாவும் கிழவியும் அவர்களோடு சேர்ந்துகொண்டார்கள். யாழ்ப்பாணத்துச் சங்கதிகளை அவர்கள் மறந்துவிட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

மகாலிங்கத்தார் தமது நண்பரை மறந்துவிடவில்லை. அவருக்காக அவரது நண்பர் அமைத்துக்கொடுத்த கொட்டில் அப்படியேதான் இருக்கிறது. எப்போதும்போலவே சாந்தி அதனைப் பராமரித்து வந்தாள். இடையிடையே மகாலிங்கத்தார் அங்கே போய்வருவார். சிலவேளைகளில் இராமநாதனும் கூடவே போய்வருவான்.

இராமநாதன் குடும்பஸ்தன் என்பதை அறிந்தவுடன் சாந்தி அதிர்ந்துபோனாள்; ஆனாலும் அவள் தனது உணர்வுகளை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. அப்படியே தனக்குள் போட்டு அமுக்கிக்கொண்டாள்.

ஆனாலும் அவளுக்கு இராமநாதனிடம் ஏற்பட்ட ஈடுபாடு அப்படியே இருந்தது. அவள் அவனைக் காணும் ஒவ்வொரு தடவையும் அது வளரவே செய்தது. இது என்ன இப்படித் திருமணமாகி குடியும் குடித்தனமுமாய் இருக்கும் ஒருவனை மனத்தில் இருத்திக் கொண்டோமே என்று அவளது உள்ளத்தில் தோன்றவில்லைப் போலும். இது யதார்த்தத்திற்குப் புறம் பானது என்பதையும் அவள் அறிந்தும் அறியாதவள் போல இருந்து விட்டாள்.

இராமநாதனோடு பழகுவதற்குத் தனியாகச் சாந்திக்கு சந்தர்ப்பம் கிடையாது. ஆனாலும் அவளுடைய மனதில் இராம நாதனைப் பற்றி எழுந்த நினைவுகளைச் சிதைத்துவிட அவள் தயாராகவில்லை. மாறாக விதையாகத் தோன்றிய நினைவுகள் முளைவிட்டு இரண்டொரு குருத்துக்களும் தோன்ற ஆரம்பித் திருந்தது. இந்தப் பயிர் அவளது இதயத்தின் ஆழத்தில் பாது காப்பாக வளருகிறது. ஆனால் இராமநாதனுக்கு மனதார இதுபற்றி எதுவுமே தெரியாது.

## அத்தியாயம் 7

இந்த முறை வன்னி பெருநிலப் பரப்பிலும் மழை பெய்யவில்லை. இதனால் விளைச்சல் பெரிய அளவில் பாதிக்கப்பட்டிருந்தது. விதைக்கின்றபோதே யாழ்ப்பாணத்துச் சமர் தொடங்கிவிட்டது. இதனால் கனகலிங்கந் தார் ஐந்து ஏக்கர் மட்டும்தான் விதைத்தார். ஏதோ முளைத்த பயிர் அரைக்கரைவாசி தேறியிருந்தது. விளைந்த வெள்ளாமையை வயலில் விடமுடியுமா?

கனகலிங்கத்தார் இராமநாதனிடம் இதுபற்றி ஒருநாள் கதைத்தார்.

"உதுக்கு ஏன் ஐயா யோசிக்கிறியள்? ஒரு பத்துக்கூலிமட்டும் புடிச்சுத்தாருங்கோ. இரண்டு நாளையிலை நெல்லு வீட்டை வருகுதோ இல்லையோ பாருங்கோ" என்றான் இராமநாதன்.

"எனக்கு உன்னைப்பற்றித் தெரியாதே? நீ மனமறிஞ்ச பிள்ளை. ஆருக்கேன் குடுக்கிற கூலியை உனக்குத்தந்தால் என்ன? அதுதான் சொன்னனான்." பதிலில் கொஞ்சம் ஆதரவு தெரிந்தது.

"ஓமப்பா இவரிட்டைக்குடுத்திட்டால் நீங்கள் அந்தப்பக்கமே போகத் தேவையில்லை" என்று சாந்தியும் "சிபாரிசு" செய்தாள். எனவே இராமநாதன் வேலையைப் பொருந்திக் கொண்டான். அறுவடைக்காக ஆட்கள் வயலில் இறங்கிவிட்டார்கள். இராமநாதன் சுறுசுறுப்பாக இயங்கினான். மகாலிங்கத்தாரும் உதவிக்கு வந்திருந்தார்.

வேலைகாரருக்குச் சாப்பாடு கொடுக்க வேணும், சாந்தி தனியாக என்ன செய்வாள்? எனவே யசோதாவை சாந்திக்கு

உதவிக்கு அனுப்பினான் இராமநாதன். இன்றைக்குத்தான் இருவரும் சந்தித்துக் கொள்கிறார்கள்.

சாந்திக்குத் தாய் இல்லை. இருந்தாலும் வீட்டை நல்ல படியாகவே வைத்திருந்தாள். அவள் ஓடியோடி அலுவல் செய்வதைப் பார்க்க யசோதாவிற்கு ஒரு பக்கம் பாவமாகவும் இருந்தது. மறுபக்கம் அவளை நன்றாகப் பிடித்தும் விட்டது. இருவரும் நண்பிகளாகி விட்டார்கள் என்றுகூடச் சொல்லலாம். யசோதாவுக்கு இரண்டு மூன்று வயது அதிகமாக இருக்கலாம். இது ஒன்றும் பெரிய வித்தியாசமில்லையே. இருவருக்கும் நன்றாகவே ஒத்துப்போனது.

பதினொரு மணியளவில் மகாலிங்கத்தார் தேனீர் எடுப்பதற்காக வந்தார். கனகலிங்கத்தார் அன்றைய பத்திரிகையொன்றை வைத்து வாசித்துக் கொண்டிருந்தார். அவர் வழக்கமாகவே, கொஞ்சம் சுத்தமாக, ஒரு ராகத்தோடுதான் எதையும் வாசிப்பார். அவர் ஏதோ முக்கியமான செய்தியைப் படித்துக் கொண்டிருந்திருக்க வேண்டும். மகாலிங்கத்தார் வந்து நின்றது கூடத் தெரியாமல் பத்திரிகையில் மூழ்கியிருந்தார் அவர். இலேசாகச் செருமி தனது வரவை அறிவிக்க முயன்றார். அவரது முயற்சிக்குப் பலன் கிட்டியது.

பத்திரிகையிலிருந்து தனது தலையை மேலே உயர்த்தி "மகாலிங்கம் பேப்பர் படிச்சதிலை நீ வந்ததைக்கூடக் கவனிக்கேல்லை" என்றார்.

"அப்படி என்ன முக்கியமான விசயம் போட்டிருக்கிறாங்கள்? எப்ப பாத்தாலும் சண்டையும் சாவும்தானே பேப்பர் முட்டக் கிடக்குது. பேப்பரை எடுத்துப் படிக்கவே பயமாய்க் கிடக்குது." இது கனகலிங்கத்தாரின் பதில்.

மகாலிங்கத்தார் சிரித்தார். "இந்த நியூசைப் படிச்சியே எண்டால் பழம் பேப்பரைக் கூடத் தொடமாட்டாய், அவ்வளவு பயங்கரமான நியூஸ்" என்று சொன்னார் அவர்.

"மெய்தானே, பின்னைச் சொல்லன் கேப்பம்" என்றபடியே திண்ணையில் உட்கார்ந்தார் கனகலிங்கத்தார். விசயத்தை அவிட்டு விட்டார் மகாலிங்கத்தார். கொழும்பிலையுள்ள மத்திய வங்கிக் கட்டிடத்திற்கு குண்டு வைத்து தகர்த்து விட்டார்கள் என்ற செய்தியைச் சொன்னார். மத்திய வங்கியின் பொறுப்புக்கள் பற்றி பெரிதாகத் தெரியாவிட்டாலும் அரசாங்கம்

நடத்துவதற்கு அது முக்கியமானது என்பதை கனகலிங்கத்தார் அறிந்திருந்தார். எனவே இது ஒரு மோசமான தாக்குதல் என்பது தெரிந்தது.

நமது உடலின் எந்தப் பகுதியில் நோய் இருந்தாலும் வருத்தம் உடல்முழுவதற்கும்தான். தனியாக நோயுற்ற பகுதிமட்டும் வருந்துவதில்லை. வடக்கிலும் கிழக்கிலும் உள்ள பிரச்சனை முழுநாட்டுக்கும் உள்ள பிரச்சனைதான். கொழும்பில் வெடிக்கின்ற குண்டுகள் இதைத்தான் எமக்குச் சொல்லுகின்றன.

இருவரும் குண்டு வெடிப்புப்பற்றி ஒரு ஆய்வு செய்யத் தொடங்கினார்கள். மகாலிங்கத்தார் தாம் வந்த விசயத்தையே மறந்து விட்டார். தேனீர் கொண்டு போவதற்கு மகாலிங்கத்தார் வரவில்லையே என்று யசோதா யோசித்தாள். வெளியே பேச்சுக்குரல்களும் கேட்டன. மாமாதான் வந்திருக்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டு வந்து பார்த்தாள். இரண்டு பெரியவர்களும் திண்ணையில் சமா வைத்துக் கொண்டிருப்பதைப் பார்க்க அவளுக்கு எரிச்சலாக இருந்தது.

வயல்காரருக்கும் அக்கறையில்லை, வயல் வேலையைப் பொறுப்பெடுத்தவருக்கும் கவலையில்லை. வயது போய் விட்டால் மனிதர்கள் இப்படி மாறிவிடுகிறார்களா? அல்லது இன்றைய சூழ்நிலை இப்படி இவர்களை மாற்றி விட்டதா? எது எப்படியானாலும் வயலில் நின்று வெய்யில் குளிப்பது அவளது கணவன் அல்லவா? எனவே மாமாவை உடனே அனுப்பவேண்டியது அவளது தேவையாக இருந்தது.

''ரெண்டு பேரும் கதையிலே இருங்கோ; அங்கை அதுகள் வெய்யிலுக்கை நிண்டு காயுதுகள். தேத்தண்ணி குடுக்கிறேல் லையே?'' என்று தனது எரிச்சலை வெளியே காட்டாமல் அமைதியாகவே சொன்னாள் யசோதா.

மகாலிங்கத்தாருக்குத் தமது தவறு புரிந்தது. இன்னும் கொஞ்சம் போயிருந்தால் இங்கேயும் ஒரு குண்டு வெடிக்கும் போல் இருந்தது. எனவே அவர் உசாரராகி விட்டார். தேத்தண்ணிச் சருவத்தை எடுத்துச் சயிக்கிளில் வைத்துக்கட்டினார். வெள்ளாமை ஒரு மைல் தூரத்திற்குள்தான் இருக்கிறது. மெதுவாகவே சயிக்கிளைத்தள்ளிக்கொண்டு புறப்பட்டார். "இவர் போய்ச்சேர தண்ணி பச்சைத் தண்ணியாய்ப் போய் விடும்'' என்று சொல்லிக்கொண்டே அடுப்படிக்குத் திரும்பினாள் யசோதா.

அவளது பேச்சையும் செய்கைகளையும் பார்த்துக்கொண் டிருந்த கனகலிங்கத்தாருக்கு அவருடைய மனைவியின் நினைப்புத்தட்டியது. இதனால் இலேசான கவலை ரேகைகள் அவரது முகத்திற்படர்ந்தன. அவள் போன திசையிலேயே அவரது கண்கள் நிலைத்து நின்றன. அவரது மனைவியைப் பற்றிய சிந்தனையில் மூழ்கிவிட்டார் அவர். அவரது கையில் இருந்த அப்பத்திரிகை நிலத்தில் விழுந்தது. காற்றினால் அள்ளுண்ட பத்திரிகைத் தாள்கள் திண்ணைக்கு வெளியே போய்விட்டன. ஆனால் கனகலிங்கத்தார் அப்படியே உறைந்து போய் உட்கார்ந்திருந்தார்.

அடுத்த நாளும் வயல் வேலை தொடர்ந்தது. நெல் மூட்டை கள் வீடு வந்துசேர மாலை நான்கு மணிக்கு மேலாகிவிட்டது. இந்த இரண்டு நாட்களிலும் சாந்தியும் யசோதாவும் மிகவும் நெருக்கமாகிவிட்டார்கள்.

பொதுவாகவே பெண்கள் தாங்கள் விரும்புகிற பொருள் கிடைக்காவிட்டால் அதனால் ஏற்படும் ஏமாற்றத்தைத் தாங்க மாட்டார்கள். வேறு ஒருவர் அந்தப் பொருளை அடைந்து விட்டால் சொல்லவே தேவையில்லை.

இந்த வகையிலே சாந்தி வித்தியாசமான ஒரு பெண்ணாகக் காட்சி தருகிறாள். உண்மையிலேயே சாந்தி வித்தியாசமானவள் தான். யசோதாவை சாந்தி எவ்வளவு விரும்பினாளோ அதை விடக் கொஞ்சம் அதிகமாகவே கனகலிங்கத்தார் அவளை விரும்பினார். இவர்கள் எல்லோரும் மிகவும் நெருக்கமாகி விட்டார்கள்.

இந்த இறுக்கத்தில் மிகவும் மகிழ்ந்துபோனவர் மகாலிங்கத் தார் தான். இராமநாதனின் வருகை அவருக்கும் நிறைவைக் கொடுத்தது; அவரது நண்பருக்கும் மகிழ்வைக் கொடுத்தது மொத்தத்தில் இரண்டு பெரியவர்களுக்குமே யசோதா ஒரு ஒளி விளக்காக இருக்கிறாள் என்று சொல்லவேண்டும்.

# அத்தியாயம் 8

மிகவும் குறுகிய காலத்துக்குள் கனகலிங்கத்தார் வீட்டுக்காரரும், இராமநாதன் வீட்டுக்காரரும் நெருக்கமாகிவிட்டார்கள். அடிக்கடி யசோதா சாந்தியிடம் வந்துபோனாள். இந்த முறை சிறுபோகத்தை இராமநாதனிடமே கொடுத்துவிடுவதென்று கனகலிங்கத்தார் முடிவுசெய்துவிட்டார். இராமநாதனும் மிகவும் மகிழ்வுடன் ஒத்துக்கொண்டான்.

இப்போதெல்லாம் தின்னவேலியை இராமநாதன் வீட்டுக்காரர் மறந்தேவிட்டார்கள். குடாநாட்டிலிருந்து மக்கள் வன்னிக்கு வந்துகொண்டிருந்தார்கள். ஆனால் அதிக எண்ணிக்கையில் இப்போது வருவதில்லை.

கச்சேரி, வங்கிகள், கூட்டுறவுக் கடைகள் முதலிய நிர்வாக அலகுகளும் மெள்ளமெள்ள தென்மராட்சியிலும், வடமராட்சியிலும் இயங்கத்தொடங்கிவிட்டன. இங்குள்ள பாடசாலைகளிலேயே வலிகாமத்துப் பாடசாலைகள் மாலையில் இயங்கத் தொடங்கின. தனியார் கல்வி நிறுவனங்களும் தலைகாட்டத் தொடங்கின. பல்கலைக்கழகம் தொடங்குவது பற்றியும் வாதப் பிரதிவாதங்கள் நடந்துகொண்டிருந்தன. ஆஸ்பத்திரிகள் பரவாயில்லை. போதனா வைத்தியசாலை மந்திகையில் இயங்கியது. உதவி நிறுவனங்களும் தம்மால் முடிந்தவரை உதவிகள் வழங்கின. இனிமேல் எமது வாழ்க்கை இப்படித்தான் என்பதால் முடிந்தவரை தம்மை நிலைப்படுத்திக்கொள்ள மக்கள் முயன்றனர்.

இராமநாதனும் இப்போது ஓரளவுக்குத் தன்னை நிலைப் படுத்திக்கொண்டான். ஆனால் எம்மையெல்லாம் ஆட்டுவிக்கும்

ஒரு சக்தி இருக்கிறது என்பதை நாம் அடிக்கடி மறந்து விடு கிறோம். எனவே ஆண்டவன் தனது நிதர்சனத்தை வெளிப் படுத்துவதற்காக சில விளையாடல்களைச் செய்கிறான். அவ னுடைய இந்த விளையாட்டு சிலருக்குப் பெரிய சோதனையாகி விடுகிறது. இப்படியான ஒரு சோதனையில் எங்களது இராம நாதனும் மாட்டிக்கொண்டான்.

எவ்வளவுதான் முன்னெச்சரிக்கையாக இருந்தாலும் கிளி நொச்சியில் நுளம்புகளிடம் தப்பவேமுடியாது. பெரியவர்கள் ஓரளவு தாக்குப்பிடித்தார்கள். குழந்தை ரமாவால் முடிய வில்லை. அவளுக்கு மலேரியா வந்துவிட்டது. ஆரம்பத்திலேயே கவனித்திருந்தால் இலகுவாக மாற்றியிருக்கலாம். வெறும் காய்ச்சல்தான் என்று நினைத்து ஏதோ கைமருந்துகள் செய் தார்கள் ஒரு கிழமைக்குமேல் ஆகிவிட்டது. எதுவித பலனும் இல்லை.

ஒருநாள் ஆஸ்பத்திரியில் கொண்டுபோய்க் காட்டினார்கள். அப்போதுதான் தமது தவறை உணர்ந்தார்கள். துன்பம் வரு வதற்கு முன்னால் மதிகெட்டுவிடும். வெள்ளம் வந்தபின்னர் தான் கடகத்துக்கும் மண்வெட்டிக்கும் ஓடுவார்கள். காலம்கடந்து விட்டதால் நோய் முற்றிவிட்டது. மந்திகைக்குத்தான் கொண்டு போகவேண்டும் என்று ஆஸ்பத்திரியில் சொல்லிவிட்டார்கள். யசோதா கலங்கிப்போனாள். ரமாவிற்கு ஏதாவது நடந்து விட்டால் அவள் என்ன ஆவாள் என்று சொல்லமுடியாது.

யசோதா இப்போது வயிரவரை நினைத்துக்கொண்டாள். தின்னவேலியில் அவர்களது வீட்டுக்கு அருகில்தான் அந்த வயிரவர் இருக்கிறார். அவருக்கு வடைமாலை சாத்துவதாக வேண்டுதல் வைத்தாள். அவளைப் பொறுத்தவரையில் வயிர வரால் முடியாதது எதுவும் இல்லை. அப்படிப்பட்ட அந்த மூர்த்தியைக் கூப்பிட்டாள்.

எந்தப் பிரதேசத்தைவிட்டு உயிர்வாழ்வதற்காக வெளி யேறினானோ அந்தப் பிரதேசத்திற்கே தனது பிள்ளையின் உயிரைக் காப்பாற்றுவதற்காகப் போகவேண்டியவனானான் இராமநாதன். இப்போது சில தினங்கள் தங்குவதற்கான பொருட்களைக் கையில் எடுத்துக்கொண்டான். பணத்தைப் பற்றிப் பிரச்சனையில்லை. அவன் ஆர்வமுடன் செய்துவந்த பயிர்களைத்தான் யார் கவனித்துக்கொள்ளப்போகிறார்கள்?

தங்களால் முடிந்தவரை செய்வதாக மகாலிங்கத்தாரும், கனகலிங்கத்தாரும் உறுதியளித்தார்கள். கிழவி வழக்கம்போல

பொருட்செறிவுடன் பேசினாள். "இந்தப் பயிர் பச்சையைப் பாத்தியேயென்டால் உன்ரை வாழ்க்கை காஞ்சுபோகும். கெதியாய்ப் புள்ளையைக்கொண்டு ஓடுங்கோ. இஞ்சத்தையில்பாடுகளை நாங்கள் பாத்துக்கொள்ளுவம்" என்று அவசரப்படுத்தினாள்.

யசோதாவுக்கு எதுவுமே ஓடவில்லை. அவளுடைய எண்ணமெல்லாம் வயிரவசுவாமிதான் நிறைந்து நின்றார். "பெருமானே உனக்கு ஒவ்வொருநாளும் பூப்போட்டன். இப்ப உன்னை விட்டிட்டு ஓடிவந்திட்டன். அதுக்காக இந்தப்பூவைக் கேக்காதை. எப்பாவது ஒருநாள் உன்னட்டை வருவன்தானே. அப்ப உனக்கு ஒவ்வொரு வெள்ளியும் பூமாலை சாத்திறன். என்ரை புள்ளையைக் காப்பாற்று" என்று அழுதாள்.

பிறந்த ஊரைவிட்டு பிறதேசம் போனாலும் எமது மக்கள் தாம் கும்பிட்ட தெய்வங்களை மறப்பதேயில்லை. ஒருவேளை இவர்களுடைய இந்தக் கடவுள் நம்பிக்கைதான் இன்னும் இவர்களை வாழவைக்கிறதுபோலும்!

போரிலே வெற்றிகொண்டு நெஞ்சை நிமிர்த்துபவர்கள் இந்த மனித அவலங்களைக்கண்டு தலைசாய்க்கத்தான்போகிறார்கள். போரிலே மாண்ட உயிர்கள் மட்டுமல்ல, போரின் கொடுமையால் மாண்ட உயிர்களுக்கும் இவர்கள் உயர்த்தப்போகும் வெற்றிக்கொடிகூடத் தலைகுனிந்துவிடப்போகிறது.

இராமநாதன் யசோதாவையும் பிள்ளையையும் கூட்டிக்கொண்டு மந்திகைக்கு வந்து சேர்ந்தான். ரமாவை ஆஸ்பத்திரியில் காட்டுகிறவரை யசோதாவின் உயிர் அவள் உடலில் இல்லை.

பிள்ளையின் உயிருக்கு ஆபத்து இல்லை. இரண்டு வாரங்களாவது ஆஸ்பத்திரியில் குழந்தையை வைத்திருக்க வேண்டும். தின்னவேலியில் தனிமையில் இருக்கின்ற வயிரவருக்கு வேண்டுதல் வைப்பவர்கள் இப்போது குறைவு என்பதால் யசோதாவின் மனுவை உடனே கவனத்தில் எடுத்துக்கொண்டார் போலும்!

வடமராட்சியில் இராமநாதனுக்குத் தெரிந்தவர்கள் யாரும் இல்லை. இரண்டு வாரங்களுக்கு நிற்கவேண்டும். எங்கே தங்குவது என்று யோசித்தான். இப்போதுதான் பள்ளிக்கூடங்கள், கோயில்கள் எங்கும் மக்கள் தங்கியிருக்கிறார்களே. இப்படி

எங்கேயாவது ஓரிடத்தில் தங்கவேண்டியதுதான். யசோதா பிள்ளையை வைத்துக்கொண்டு ஆஸ்பத்திரியில் தங்கலாம்; எதற்கும் வெளியேபோய்ப் பார்த்துக்கொண்டு வரலாம் என்று புறப்பட்டான். கால்போன திக்கில் நடந்தான்.

பங்குனிமாத வெய்யில் மண்டையைப் பிளந்தது. வீதியோரம் நின்ற ஒரு மரத்தடியில் ஒதுங்கினான். காலை மண்டியிட்டுக் குந்தி உட்கார்ந்தான். வானம் பளிச்சென்று இருந்தது. மரத்தின்மீது சில குக்குறுப்பான் குருவிகள் தமது மொழியில் பேசிக்கொண்டிருந்தன.

சயிக்கிளில் சிலர் இரண்டு திசைகளுக்கும் போய் வந்தனர்; அந்த மரத்தின் கீழேயிருக்கும் மனிதனைப் பற்றி யார் கவனிப்பார்கள்? அவரவர் பிரச்சனை அவரவர்களுக்குத்தான். இதைப் பற்றித்தான் அந்தக் குக்குறுப்பான்கள் பேசிக் கொள்கின்றன போலும்.

இராமநாதனது இடத்தில் பாரதி இருந்திருப்பானாயின் இந்நேரம் ஒரு குக்குறுப்பான் பாட்டுப் பிறந்திருக்கும். மரத்தின்கீழ் இருப்பது சுகமாக இருக்கவே இன்னும் சிறிது நேரம் அங்கேயே இருப்போம் எனத் தீர்மானித்தான்.

இப்போது இன்னும் ஒருவர் அந்த நிழலுக்கு ஓடி வந்தார். வரும்போதே வெய்யிலைப் பற்றி வெகுவாகப் பாராட்டிக் கொண்டே வந்தார். இராமநாதன் அவரைப் பற்றி பரவாய் பண்ணவில்லை. அவனது கண்கள் பாதி மூடிய நிலையில் இருந்தன.

அவன் மோனத் தவநிலையிலேயே இருந்தான். வந்தவர் அவனை ஏற இறங்கப் பார்த்தார். உலகமே தலைகீழாகிப் போனாலும் கவலையில்லை அல்லது பிரளயகாலம் வந்து பூமி சமுத்திரத்தில் மூழ்கிப் போனாலும் கவலையில்லை என்பது போல் இவன் இருந்தான்.

வந்தவர் இலேசாக அவனை அருட்டி விட்டார். "வெய்யில் வெக்கை நல்லா வாட்டுது" என்றார் அவர். இராமநாதன் அவருடைய சத்தத்தில் விளித்துக்கொண்டான். "ஓம்ஓம், கடும் வெயில" என்று சொல்லிச் சமாளித்தான். வந்தவர் கொஞ்சம் வளவளா பேர் வழியாக இருந்தார். இராமநாதனுக்குக் கொஞ்சம் எரிச்சலாகத்தான் இருந்தது. இருந்தாலும் பொறுத்துக் கொண்டான்.

இரண்டு கிழமைகள் தங்குவதற்கு ஒரு இடம் அவரிடம் கேட்கலாமா என்று யோசித்தான். ஆனால் அவர் விடவில்லை, தமது பாட்டில் தொடர்ந்தார்.

''உம்மைப் பாத்தால் இந்த ஊர் மாதிரித் தெரியேல்லை. இடம் பெயர்ந்து வந்திருக்கிறீர்போலை கிடக்குது.''

''ஓம் வந்து நான் பிள்ளையைச் சுகமில்லாமல் ஆசுப்பத்திரியிலைவைச்சிருக்கிறன்' என்று தடுமாறினான் இராமநாதன்.

தொடர்ந்தும் அவர் கேள்விகளை அடுக்கிக் கொண்டிருந்தார். இராமநாதனும் பதில் சொல்லிக்கொண்டே போனான்.

இப்போது அவர் கொஞ்சம் ஓய்வு எடுப்பது போலத் தோன்றவே இராமநாதன் அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக்கொண்டான்.

தனக்கு இரண்டு கிழமைகள் தங்குவதற்கு ஒரு இடம் வேண்டும் என்றான். அவர் கொஞ்சம் யோசித்தார். பிறகு கொஞ்சம் தயக்கத்துடன் சொன்னார்:

''இரண்டு கிழமைதானே. உம்மாலை சமாளிக்க முடியும் எண்டால் என்னோடை வாரும்'' என்று சொல்லி கொஞ்சம் நிறுத்தினார்.

எத்தனையோ பிரச்சனைகளை இதுவரையில் சமாளித்து விட்டான். இந்த இரண்டு வாரங்களில் அப்படி என்னதான் அவனால் சமாளிக்க முடியாத பெரிய சோதனை வந்துவிடப் போகிறது! எனவேதான் எதையும் சமாளித்துக் கொள்வதாக அவரிடம் உறுதி கூறினான். அவரும் அவனைக் கூட்டிக்கொண்டு போகச் சம்மதித்தார். அவரோடு புறப்பட்டான் இராமநாதன்.

இதுவரையில் அவருடைய பெயரைக்கூடக் கேட்காமல் இவ்வளவு விசயத்தையும் பேசி முடித்து விட்டான். இப்போது தான் அவருடைய பெயரைக் கேட்டுத் தெரிந்துகொண்டான். அவர் உடுப்பிட்டியில் இருக்கும் கந்தசாமி என்று தெரிந்து கொண்டான்.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் பாடசாலைக்கு அண்மையில் அவரது வீடு இருக்கிறது. இருவருமாக கந்தசாமியின் வீடு நோக்கி நடந்தார்கள், வெய்யில் சுட்டெரித்தது. துன்பத்தின்

வெம்மையை அனுபவித்துப் பழகியவர்கள் என்பதால் வெய்யிலின் வெம்மையிலும் அமைதியாக நடந்துகொண்டிருந்தார்கள். அரைமணி நேரத்திற்கு நடந்து கந்தசாமியின் வீட்டை அடைந்தார்கள்.

கந்தசாமிக்கு மூன்று பிள்ளைகள். மூத்த பையனுக்கு பத்து வயதிருக்கும். மற்றைய இரண்டும் பெண் குழந்தைகள். வீடு அவ்வளவு வசதியானதல்ல. அவனுடைய மனைவியின் அக்காளின் குடும்பம் ஒன்றும், வேறு ஒரு குடும்பமும் அந்த வீட்டில் நெருக்கியடித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சமைப்பதற்காக தனியாக ஒரு கொட்டில் போட்டிருந்தார்கள்.

இருவரும் வந்து சேர்ந்த நேரம் அங்கே திரிபுரசம்காரம் நடப்பது போல் ஒரே அட்டகாசமாயிருந்தது. கந்தசாமியின் முகத்தைப் பார்த்தான் இராமநாதன். கந்தசாமி அமைதியாகக் கூறினார்: ''அக்காவும், தங்கையும் பாசத்தைக் கொட்டிக் கொள்கிறார்கள். கொஞ்ச நேரம் போனால் சரியாகிவிடும்.'' இராமநாதனைச் சமாதானப்படுத்தினார் அவர்.

அப்போது ''நெடுகலும் போறன் போறன் எண்ணுறாய், எப்பாவது வெளிக்கிட்டனியே? உங்கை சனமெல்லாம் தனிக் கொட்டில்கள் போட்டுக் கொண்டு இருக்குதுகள்; உங்களுக்கு உல்லாசமாய் இருக்கவும் வேணும்; அதுக்குள்ளை சண்டித்தனமும் காட்ட வேண்டும்'' என்று ஒரு பெண்மணி காரசாரமாக முழக்கினாள். அது தன்னுடைய மனைவி செல்லம்மா என்று கந்தசாமி சொன்னபோது இராமநாதனின் இதயம் நின்று விடும் போல இருந்தது.

ஒழிக்கத்தெரியாத கள்ளன் வந்து தலையாரி வீட்டில் ஒழித்த கதையாகி விட்டதோ என்று பயந்தான் அவன்.

செல்லம்மாவின் சீற்றத்தைத் தொடர்ந்து விக்கலும் விம்மலுமாக ஒரு குரல் வெடித்தது; ''எல்லாம் என்ரை தலைவிதி, போயும் போயும் உன்னட்டை வந்தன் பார். என்ரை புத்தியைச் செருப்பாலை அடிக்வேணும்.'' இது அழுகையோடு வந்து விழுந்த வார்த்தைகளின் தொகுப்பு.

இராமநாதனுக்கு தலை சுற்றியது. எங்கேயாவது கோயில், குளத்தடியில் போய் தங்கி விடலாமா என்று எண்ணினான். ஒருவேளை இங்கே தனக்குப் பாதுகாப்புக்காகத்தான் என்னைக் கந்தசாமி கூட்டி வந்திருக்கிறாரா என்று கூட அவனுக்குத் தோன்றியது.

இராமநாதன் குழம்பிப்போய் நிற்பதைக் கந்தசாமி கவனித்தார். "இது இப்ப கொஞ்சநேரத்திலை சரியாய்ப்போம். பொம்பிளையள் இரண்டு பேருமே சணம் பித்தம் சணம் வாதம் என்கிறமாதிரியான ஆக்கள். நான் வேளைக்கே சொல்லியிருக்கிறன். இரண்டு நாளைக்கு தங்கிப்பாரும். அப்பிடிப் புடிக்கேல்லை எண்டால் வேறை இடம் பாப்பம்" என்றார் கந்தசாமி.

இராமநாதனுக்கும் இது நியாயமாகவே பட்டது. சண்டையும் ஓய்ந்து விட்டது. இருவரும் உள்ளே போனார்கள். விறாந்தையில் இராமநாதனை இருத்திவிட்டு உள்ளே போனார் கந்தசாமி.

நான்கு சிறுமிகள் விறாந்தையில் இருந்து கொக்கான் வெட்டிக் கொண்டிருந்தார்கள். பெரியவர்கள் வாயால் வெட்டிச் சண்டை போடும்போது சிறுவர்கள் கொக்கான் வெட்டிக் கொண்டிருக்கிறார்கள். மனிதன் குழந்தையாகவே இருந்து விடக்கூடாதா?

ஆளும் வளர்ந்து அறிவும் வளர்ந்த பிறகுதானே பிரச்சனைகளை வளர்த்துக்கொண்டு சண்டைபோடத் தொடங்குகிறான். இராமநாதனின் வருகை அவர்களது விளையாட்டைக் குழப்பி விடவில்லை.

உள்ளே போன கந்தசாமி திரும்பி வந்தான். அவனது முகத்தில் இருந்த நிறைவு அவனது மனைவியிடம் அனுமதி வாங்கி விட்டான் என்பதைக்காட்டியது.

இராமநாதனோடு ஒரு சொப்பிங்பாக் இவ்வளவு நேரம் ஒட்டிக் கொண்டிருந்திருக்கிறது. கந்தசாமி இப்போதுதான் அதைக் கவனித்தான். "பிள்ளையள் உள்ள இடம்; பையை வெளியிலை வைச்சால் எடுத்துச் சிதறிப் போடுங்கள்" என்று இராமநாதனை எச்சரித்திருந்தான் கந்தசாமி.

அந்த நெருக்கடியான வீட்டிலும் ஒரு அறையில் கந்தசாமியின் அதிகாரம் இருந்தது. எல்லோரும் பாவிக்கக் கூடிய பொதுவான பொருட்கள் அங்கே வைக்கப்பட்டிருந்தன. முகம் பார்க்கும் கண்ணாடி, ரூத்பிறஷ், சீப்பு வகைகள் என்பவற்றோடு விலை குறைவான ஒரு முகப்பவுடர் டப்பாவும் இருந்தது. இந்தக் கொமன் ரூமில் ஒரு மூலையில் ஒரு கள்ளிப்பெட்டி பிளஸ் பூட்டுடன் இருந்தது. இதுதான் கந்தசாமியின் பெட்டகமாக இருந்தது.

இந்த விபரங்களைக் கந்தசாமி இராமநாதனிடம் கூறினான். இராமநாதனது சொப்பிங்பாக் அந்தப் பெட்டகத்தினுள் போய் அமர்ந்து கொண்டது.

எலிவளை என்டாலும் தனிவளை வேணும் என்பது எவ்வளவு அனுபவபூர்வமான கூற்று. ஒரே குடும்பத்தில் உள்ளவர்களே தம்முள் அடித்துக் கொள்ளுகிற காலத்தில் இரண்டு மூன்று குடும்பங்கள் எப்படி ஒற்றுமையாக இருப்பார்கள்? எந்த ஒரு தொழிலும் செய்ய முடியாத நிலைமை, அத்தோடு விலைவாசிகள் பற்றிச் சொல்லவே வேண்டாம்.

இடம் பெயர்ந்து வந்தவர்கள் எல்லோருமே மனநிலை மிகவும் பாதிக்கப்பட்டுத்தான் இருக்கிறார்கள். இவர்களைக் கூட்டி வைத்துக் கொண்டவர்களும் காலப்போக்கில் குழப்பமடைந்து விட்டார்கள். இதனால் எல்லா இடங்களிலுமே பிரச்சனைகள், சண்டைகள், இழுபறிகள் எழுவது தவிர்க்க முடியாதது தான். கிட்ட இருந்தால் முட்டப்பகை வரும். அதைத் தவிர்க்க முடியாது.

நாட்டிலேயுள்ள பிரச்சனையை விட இப்போது வீடுகளில் உள்ள பிரச்சனைகள் சிக்கலாகி விட்டன. மொத்தத்தில் தமிழ் மக்கள் சபிக்கப்பட்டவர்களோ எனத்தான் எண்ணத் தோன்றுகிறது.

அந்த வீட்டுக்கு வந்த முதல் நாளிலேயே அங்கேயுள்ளவர்கள் தமது உள்ளக் குமுறல்களை கஷ்டப்பட்டு அடக்கிக் கொள்கிறார்கள் என்பதை உணர்ந்து கொண்டான்.

அநேகமாகக் காலையில் புறப்பட்டு ஆசுப்பத்திரிக்குப் போய் விடுவான். இப்போது தேனீர்க்கடைகள் எல்லா மூலைகளிலும் இருந்தன. இவனிடம் கையில் காசும் இருந்தது. பசிக்கின்ற போது கடைகளில் சாப்பிட்டுக் கொண்டான். நன்றாக இருட்டிய பின்னர் தான் வீட்டுக்கு வருவான்.

கந்தசாமியோடு நீண்ட நேரம் கதைத்துக் கொண்டிருப்பான். அடுத்த ஓரிரு நாட்களில் மற்றவர்களும் அறிமுகமாகி விட்டார்கள். சில வேளைகளில் இரவில் கந்தசாமியின் வற்புறுத்தலால் அவனுடனேயே சாப்பிட வேண்டியிருந்தது. ஒரு வாரத்துக்குள்ளாகவே கந்தசாமியின் குடும்பத்தவருள் ஒருவனாகி விட்டான்.

கந்தசாமிக்குப் பெரிதாகச் சொல்லும்படி வருமானம் ஏது மில்லை. முன்பு போக்குவரத்துச் சபையில் பஸ் சாரதியாக இருந்தான். வடபகுதியில் அந்தச் சபையின் நிர்வாகம் இல்லா மல் போனபின்பு ஒரு தனியார் வான் சாரதியாக இருந்தான். இப்போது அந்தப் பிழைப்பிலும் மண் விழுந்துவிட்டது.

வலிகாமப்போர் தொடங்கிய பின்னர் வான் ஓடுவதும் நின்று விட்டது. ஏதோ அவனுக்கு ஒரு நல்ல மனைவி வாய்த் திருந்தாள். அவளது கெட்டித்தனத்தால் கந்தசாமியின் குடும்பம் ஓடிக்கொண்டிருந்தது.

இந்தச்சாமிக்கும் வேலையில்லாமல் காலம் தள்ளுவது சங்கடமாகவே இருந்தது. இந்தச் சங்கதிகளையெல்லாம் இராம நாதனிடம் மனம்விட்டுப் பேசினான். கிளிநொச்சிப் பக்கம் வந்தால் ஏதாவது தொழில் செய்யலாம் என்று அவனுக்கு நம்பிக்கை ஊட்டினான். இராமநாதன் ஊருக்குப் போகும்போது அவனோடு போவதென்று தீர்மானித்துக்கொண்டார்கள்.

இராமநாதன் மந்திகைக்கு வந்து இன்றோடு பத்து நாட்கள் ஆகின்றன. ரமாவினுடைய வருத்தம் குணமாகிவிட்டது. இன்னும் நான்கு நாட்களுக்குப் பார்த்துவிட்டுச் செல்லும்படி டாக்டர் சொல்லிவிட்டார். எனவே இராமநாதனும் புறப்படு வதற்கு ஆயத்தங்கள் செய்தான்.

மறுநாள் வழக்கம்போல இராமநாதன் ஆஸ்பத்திரிக்குப் போனான். அங்கே எல்லோரும் பரபரப்பாக எதையோ பேசிக் கொண்டிருந்தார்கள். அவனுக்கு எதிராக நான்கு ஐந்து பேர் கூடிநின்று கதைத்துக் கொண்டிருந்தார்கள். காதைத் தீட்டிக் கொண்டு என்ன விசயம் என்று கூர்ந்து கேட்டான்.

''இந்த வரியம் பிறந்ததோட எங்கடை பக்கம் சண்டை ஓய்ஞ்சு போட்டுது. கிழக்கிலும், தெற்கிலும்தான் கூடியிருக்குது. போன கிழமையும் மட்டக்களப்பிலை இராணுவத்திற்குச் சேதமாம்'' என்று ஒருவர் அபிப்பிராயம் தெரிவித்தார்.

''இவங்கள் கூட இராணுவம் என்ன வெள்ளியே பாத்தவங் கள்? இயக்கத்திலையும் செத்திருப்பாங்கள். இப்ப உதுகளை வெளிவிடாயினம். தாங்கள் துறைமுகத்திலை தாக்கிப்போட் டினம் எண்டதைமட்டும் வெளிவிட்டிட்டினம். இப்ப எந்தக் கதையையும் நம்ப ஏலாமல் கிடக்குது'' என்று மற்றொருவர் சொன்னார்.

இராமநாதன் அவர்களுடைய உரையாடலைத் தொடர்ந்து கேட்டுப் பல புதினங்களை அறிந்து கொண்டான். பொது வாகவே உலக விசயங்களில் அக்கறை காட்ட அவனுக்கு நேர மில்லை. ஆர்வமும் இல்லை என்று தான் சொல்லவேண்டும். தான் உண்டு தன் குடும்பம் உண்டு என்று இருப்பவன் அவன். இப்போது அவன் விரும்பினாலும் சரி, விரும்பாது போனாலும் சரி, நாட்டு நடப்புக்கள் அவன் காதுகளில் வந்து விழுந்த வண்ணமே இருக்கின்றன. இப்போதெல்லாம் இங்குள்ள சிறு வர்கள் கூட 'நைன்ரிகலிபர்' என்றும் 'ஒலிகன் பீரங்கி' என்றும் தான் சொல்லி விளையாடுகிறார்கள்.

முன்னைய தலைமுறையினரின் கள்ளன் பொலிசு விளை யாட்டெல்லாம் இப்போது மறந்துவிட்டது, அல்லது மறைந்து விட்டது. இந்த அளவுக்கு இந்தப் பதினைந்து வருடகாலப் போர் நமது சமூகத்தைப் பாதித்திருக்கின்றது. ஒரு காலத்தில் அமைதியான வாழ்க்கை வாழ்ந்த தமிழ் மக்களின் வருங்காலம் எப்படி அமையப்போகிறது என்பதை இது துலாம்பரமாகக் காட்டுகிறது.

அங்கே நின்றவர்களின் கதையைக் கேட்கக்கேட்க இராம நாதனுக்கு வயிற்றைக் கலக்கியது. இனி ் மல் அரசாங்கம் சும்மா இருக்கமாட்டார்கள். வடமராட்சியையோ அல்லது தென்மராட்சியையோ பிடிக்கத்தான்போறாங்கள். இந்தக் கிழமையுக்கையே நடக்கும்போலவும் தெரிகிறது. எப்படியாவது துண்டை வெட்டிக்கொண்டு யசோதாவையும் பிள்ளையையும் கூட்டிக்கொண்டு கிளிநொச்சிக்குப் போய்விடவேணும் என்று யோசித்தான்.

அவனையும் அறியாமல் அவனிடம் பயம் குடிகொண்டது. உடம்பெல்லாம் வியர்த்துக்கொட்டியது. உடனே யசோதாவைப் பார்க்கவேண்டும்போல் இருந்தது. உள்ளே போவதற்கு மணி அடிக்கவேண்டுமே. அதற்குள் அவனுக்குப் பைத்தியமே பிடித்து விடும்போல் இருந்தது. ஒரு இடத்தில் நிலைகொள்ளாமல் அங்குமிங்குமாக நடந்தான். இடையிடையே சுற்றி நிற்பவர்கள் என்ன கதைக்கிறார்கள் எனக் கேட்க முயன்றான். அவன் குழப்பமடைந்திருந்ததால் எதுவும் அவனது மூளையில் செல்ல வில்லை. ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு வருடமாகக் கழிந்தது. ஒருபடியாக மணியடித்தது. எல்லோரையும் முண்டியடித்துக் கொண்டு யசோதா இருக்கின்ற வார்ட்டுக்கு ஓடினான்.

அவன் கலவரத்துடன் வருவதைக்கண்டு யசோதா பயந்து விட்டாள். என்ன விசயம் என்று கேட்டாள் அவள். ''இங்கே சண்டை தொடங்கப்போகிறதாம். அதற்குள் நாம் கிளாலிக்கு அப்பால் போய்விடவேண்டும்'' என்று படபடப்புக் கொஞ்சமும் குறையாமல் கூறினான் இராமநாதன்.

''இந்த வருசம் பிறந்தது எங்களுக்கு ஒரே அலைச்சலும் கஸ்டமுமாய்த்தான் கிடக்குது; வருசம் ஆசுப்பத்திரி வாட்டிலையெல்லே பிறந்திருக்கு. பிறகு எப்பிடி நல்ல வருசமாய் இருக்கும்? நடக்கிறது நடக்கட்டும்'' என்று யசோதா சொன்னாள். இதைக்கேட்ட இராமநாதனுக்கு எரிச்சலாய் இருந்தது.

இவளுக்கு என்ன மூளை மங்கிப்போய்விட்டதா? எப்படியாவது தப்பிறவழியைப்பாக்காமல் விசரிபோலக் கதைக்கிறாள். தனக்கு வந்த ஆத்திரத்தைக் கஷ்டப்பட்டு அடக்கிக்கொண்டான் ''எப்படியாவது இன்றைக்குத் துண்டு வெட்டிக்கொண்டு புறப்படத் தயாராக இரு. நான் பின்னேரம் வந்து கூட்டிக் கொண்டுபோறன்'' என்று கடுமையாகச் சொல்லிவிட்டு வெளியேறினான். அவனுக்கிருந்த ஆத்திரத்திலும், அவசரத்திலும் பிள்ளையோடுகூடக் கதைக்காமல் வெளியே வந்துவிட்டான்.

பிள்ளை குணமடைந்துவிட்டாள். எனவே ஆஸ்பத்திரியில் துண்டுவெட்டுவதொன்றும் சிரமமாக இல்லை. அன்று மாலையே யசோதாவையும் கூட்டிக்கொண்டு கந்தசாமியின் வீட்டுக்கு வந்து சேர்ந்தான் இராமநாதன். மறுநாள் ஊருக்குப் புறப்படுவதாக முடிவுசெய்திருந்தார்கள். இவர்களோடு கந்தசாமியும் புறப்படுவதற்குத் தயாரானான்.

கந்தசாமியைத் தனியாக அனுப்புவதில் அவனது மனைவிக்கு விருப்பமில்லை. இருந்தாலும் ஒரு ஆம்பிளை வேலை வெட்டி இல்லாமல் இருந்து என்ன செய்யிறது? உள்ளதை வைச்சுக்கொண்டு எத்தனை நாளைக்குத்தான் தின்னமுடியும்? அதிலும் அவன் தனி மனிதன் அல்லவே. மூன்று பிள்ளைகளையும் மனைவியையும் வைத்துக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அவனுக்கு உண்டு.

இரவு தூக்கம் வரவில்லை: இராமநாதனும் யசோதாவும் வெகுநேரமாகக் கதைத்துக்கொண்டிருந்தார்கள். ரமா நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்தாள். இடையில் யசோதா சொன்னாள், ''வந்தனாங்கள் ஒருக்கால் நாவற்குழிக்குப் போய் வீட்டைப் பார்த்துக்கொண்டு போவம்.''

பத்துப் பன்னிரண்டு நாட்கள் இங்கே வீண் பொழுது போக்காட்டியிருந்த இராமநாதனுக்கு இதுவரையில் நாவற்குழியைப் பற்றிய சிந்தனை எழவேயில்லை. யசோதா சொல்வது நியாயமாகவே அவனுக்குப் பட்டது.

ஆனால் கந்தசாமியும் அல்லவா அவர்களோடு புறப்படுகிறான். ''என்ன செய்வது?'' அவளைக் கேட்டான். ''கந்தசாமியையும் கூட்டிக்கொண்டு நாவற்குழிக்குப் போய் வீட்டைப் பார்த்துக்கொண்டு அங்கிருந்து நேராகக் கிளாலிக்குப் போகலாம்'' என்று யசோதா யோசனை கூறினாள். அது சரியான யோசனையாகவே இராமநாதனுக்குப் பட்டது. அப்படியே செய்வதென்று முடிவுசெய்த பின்னர் இருவரும் படுக்கைக்குப் போனார்கள்.

பொழுது விடிந்தது புறப்படத் தயாராகிக்கொண்டிருந்த கந்தசாமியிடம் நாவற்குழிக்குப் போகிற விசயத்தைச் சொன்னான் இராமநாதன். அதைப்பற்றிப் பரவாயில்லை; நாவற்குழிக்குப் போய் அங்கிருந்து நேராகக் கிளாலிக்குப் போகலாம் எனக் கந்தசாமியும் ஒப்புக்கொண்டான்.

முடிந்தவரை எல்லோரும் சுறுசுறுப்பாகவே செயற்பட்டார்கள். இராமநாதனுக்கும் யசோதாவிற்கும் ஊருக்குப் போகிறோமே என்ற உற்சாகம். கந்தசாமிக்கு ஏதோ தொழில் செய்யப்போகிறோம என்ற ஆர்வம். ஏழு மணிக்கெல்லாம் புறப்பட்டு கொடிகாமம் போகிற வானில் ஏறிக்கொண்டார்கள். கந்தசாமியின் மனைவியும் பிள்ளைகளும் அவர்களை வழியனுப்பி வைத்தார்கள். கொடிகாமத்தில் இறங்கி நாவற்குழிக்குப் போவதற்கு வேறு வானில் மாறிப் போகவேண்டும். இப்போது அவர்கள் ஏறிய வான் கொடிகாமத்தை நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறது.

# அத்தியாயம் 9

ஒரு படியாக ஒன்பது மணியளவில் நாவற்குழியை வந்து சேர்ந்தார்கள். முதலில் குமாரசாமி அண்ணரின் வீட்டுக்குப் போனார்கள். நல்ல வேளையாக அவர் அங்கே நின்றார்.

எதிர்பாராவிதமாக இவர்களைக் கண்டதும் குமாரசாமியண்ணர் ஒரு கணம் தடுமாறிப்போனார். கிளிநொச்சியில் தொற்று நோய்களாலும், தண்ணீர்த் தட்டுப்பாட்டாலும் மக்கள் கஷ்டப்படுவதாகக் கேள்விப்பட்டிருந்தார். சிலர் அங்கிருந்து மீண்டும் இங்கே திரும்புகிறார்கள் எனவும் கதைகள் பரவியிருந்தன. ஒரு வேளை அங்கே இருக்க முடியாமல் திரும்பி வந்து விட்டார்களோ என நினைத்தார்.

''என்னடாப்பா, கோடை மழை மாதிரிச் சொல்லாமல் கொள்ளாமல் திடீரென்று வந்திருக்கிறாய், அங்கை ஊர் ஒத்துக் கொள்ளேல்லையோ?'' என்று கேட்டார். நடந்த விசயங்களை விபரமாகக் கூறினான் இராமநாதன். அத்தோடு கந்தசாமியையும் அறிமுகம் செய்து வைத்தான்.

எல்லாவற்றையும் ஆர்வத்துடன் கேட்டார் குமாரசாமியண்ணை. ''இங்கே இருப்பவர்கள் வன்னிக்கு ஓடவேண்டி வரப் போவதாக எல்லோரும் பரபரப்பாகப் பேசிக்கொள்கிறார்கள்; சிலர் இங்கிருந்து வெளியேறியும் விட்டார்கள். எதற்கும் கிளாலிக்கு அப்பால் இருப்பதுதான் நல்லது'' என்று தமது அபிப்பிராயத்தைக் கூறினார்.

''பொதுவாகவே நிலவுக்கு ஒளித்துப் பரதேசம் போகிற நிலமைதான் இங்கே இருந்தது. எந்தப் பக்கம் போனாலும் பிரச்சனைகள் தீரப்போவதில்லை. போர் நடந்துகொண்டிருக்கும்வரை நாட்டில் சமாதானம் நிலவாதவரை இந்த நாடு நரகமாகத்தான் இருக்கப் போகிறது. நாளொரு வீடும் பொழுதொரு ஊருமாக எப்பிடி வாழமுடியும்?''

வந்தவர்கள் தங்களது வீட்டைப் பார்த்து வரலாம் என்று கிளம்பினார்கள். குமாரசாமியண்ணையும் கூடவே வந்தார். இரண்டு குடும்பங்கள் அங்கே இருந்தன, வீட்டை நல்லபடியாகவே வைத்திருந்தார்கள். வீட்டைப் பார்க்க வேண்டும் என்ற அவர்களது ஆசை நிறைவேறி விட்டது. உடனே புறப்பட்டால் மத்தியானத்திற்கு முன்னரே சாவகச்சேரிக்குப் போய் விடலாம். எப்படியும் இன்றைக்கு இரவு என்றாலும் கிளிநொச்சிக்குப் போய்விட வேண்டும் என்பதில் எல்லோரும் ஒரு முகமாக இருந்தார்கள்.

குமாரசாமியண்ணை கொடுத்த தேத்தண்ணியை மடமட வென்று குடித்துவிட்டுப் புறப்பட்டார்கள். கைதடிக்கு நடந்து போய் வான் பிடிக்க வேண்டும்.

பத்து மணிதான் ஆகிறது. வெய்யில் மத்தியானத்தைவிட மோசமாகவே சுட்டெரித்தது. வயல் வெளிக்குள் இறங்கிக் குறுக்காக நடந்தால் கெதியாகப் போய் விடலாம். அவர்கள் நடைவரம்பில் இறங்கினார்கள். மாரியில் பச்சைப் பசேல் என்றிருக்கும் அந்த வயல் வெளியில் மருந்துக்கும் பச்சையைக் காணோம்.

பயிர் இல்லாத வயல் வெளிகளில் மாடுகள் கட்டாக் காலியாக அலைந்தன. வரம்புக் கரைகளில் காய்ந்து போய்க் கிடந்த அறுகம்புல்லைக் கடித்துக் கொண்டிருந்தன. ''காய்ஞ்ச மாடு கம்பிலை விழுகிறது என்பார்களே, அது இதுதான்'' என்று கந்தசாமி அந்த மாடுகளைக் காட்டினான். அதைப் பார்த்து அவர்கள் சிரித்தே விட்டார்கள்.

நீண்டுகொண்டே போன அந்த நடை வரம்பில் தடக்கி விழாமல் நடந்துசென்று மெயின் றோட்டில் ஏறினார்கள். அவர்களுடைய அதிர்ஷ்டம் வானைக் காண்பதே அரிதாக உள்ள அந்த றோட்டில் ஒரு வான் வந்துகொண்டிருந்தது. வானை மறித்து ஏறிக் கொண்டார்கள். வான் சாவகச்சேரியில் போய் நின்றது.

''ஒரு கடையில் ஏதாவது சாப்பிட்டுக்கொண்டு போகலாம். அங்காலை போய்ச் சேர எத்தனை மணி ஆகுமோ தெரியாது '' இராமநாதன் சொன்ன இந்த யோசனை எல்லோருக்கும் சரியாகவே பட்டது. அருகில் உள்ள ஒரு சாப்பாட்டுக் கடைக்குள் போய் அமர்ந்தார்கள்.

மத்தியான நேரம்தான்; இருந்தாலும் பெரிதாகக் கூட்டம் இல்லை. ''என்னய்யா சாப்பிடுவம்?'' என்று கேட்டுக்கொண்டு வந்து நின்ற சப்பிளையரிடம் இடியப்பம் கொண்டு வரச் சொன்னார்கள். மூன்று தாமரை இலைகளில் எடுத்து வந்த இடியப்பத்தை வைத்துக் கொண்டே சப்பிளையர் கேட்டார், ''எங்கை வன்னிக்கே போறியள்?'' ஓம் என்று தலையசைத்தான் கந்தசாமி.

''உன்ரை கதையைப் பார்த்தா கிளாலிக்குப் போறதுக்கு நீதான் பாஸ் குடுக்கிறது மாதிரி எல்லே கிடக்குது'' என்று வழக்கம் போலத் தன்னுடைய அறுவைப் பகிடியை விட்டான் கந்தசாமி. சப்பிளையருக்குச் சிரிப்பு வந்தது. சிரித்துக் கொண்டே சொன்னான். ''அண்ணையின்ரை பகிடி நல்லாய்த் தான் இருக்குது. அரசாங்கம் இண்டையிலை இருந்து குடா நாடு முழுவதும் ஊரடங்கு போட்டிருக்குது''. அவன் இடியப் பத்தின் மேலே சாம்பாரை ஓடவிட்டான். சாம்பாரை வெளியே ஓடவிடாமல் மூவரும் இடியப்பத்துடன் சேர்த்துப் பிசைந் தார்கள்.

இராணுவ நடவடிக்கைகள் தொடங்கும்போது இப்படி ஊரடங்கு என்று அறிவிப்பது வழக்கமான கதைதான். பெரிதாக யாரும் அதைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. ஆனால் இப்போதுள்ள நிலமையில் இது யோசிக்கவேண்டிய விசயமாகவே இருக்கிறது.

வலிகாமத்தில் இருந்து தென்மராட்சிக்கோ அல்லது வடமராட்சிக்கோ இராணுவம் முன்னேறக் கூடும். அப்படி நடந்து விட்டால் சிலவேளை கிளாலியால் போக முடியாமலும் போய் விடலாம். யசோதாவிற்கும் பயம் பிடித்துக் கொண்டது. இராமநாதன் இடியப்பத்தைப் பிசைந்துகொண்டேயிருந்தான். ஆனால் கந்தசாமி மட்டும் நிதானமாகச் சாப்பிட்டான்.

''பிளேன்ரீ கொண்டு வரவா?'' என்று கேட்டான் சப்பிளையர். இராமநாதன் ''கொண்டு வா'' என்று சொன்னான்.

''மூன்று பிளேன்ரீ'' என்று ஒரு பாட்டு இழுத்துக்கொண்டே அடுத்த மேசையைக் கவனிக்கப் போய் விட்டான் சப்பிளையர்.

யசோதா பிள்ளைக்கும் ஊட்டித் தானும் சாப்பிட்டுக் கை அலம்பிக் கொண்டாள். மற்றவர்களும் சாப்பிட்டு முடித்தனர். பிளேன்ரீயைக் குடித்துவிட்டு பில்லைக் கொடுத்தான் இராமநாதன். மூவரும் வீதியில் இறங்கி பஸ் நிலையத்திற்குப் போய்ச் சேருவதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது.

மக்கள் கூட்டம் முண்டியடித்தது? தெருவெங்கும் வான் மாஸ்ரர்களிலும், கால் நடையாகவும் மக்கள் போய்க்கொண்டிருந்தனர், எங்கு பார்த்தாலும் ஆமி வந்திட்டான் என்பதே பேச்சாக இருந்தது: நாவற்குளியிலை நிக்கிறானாம் என்று பேசிக்கொண்டார்கள்.

இராமநாதனுக்கு இந்தக் கதையை நம்புவதா அல்லது நம்பாமல் விடுவதா என்று எதுவுமே விளங்கவில்லை. அவன் இப்போது நாவற்குளியில் இருந்துதானே வருகிறான். அங்கே ஒரு வேட்டுச் சத்தத்தைக்கூட அவன் கேட்கவில்லை.

இரவோடிரவாக இரு இராணுவ அணிகள் முன்னேறி வந்து விட்டன. நாவற்குளிப் பக்கமாக ஒரு அணி வந்தது. புத்தூர் பகுதி வழியாக ஒரு அணி நகர்ந்தது. அவர்கள் அமைதியாக வந்த இடங்களில் தரித்து நின்றார்கள். போராளிகள் அவ்விடத்தை விட்டுப் பின்வாங்கி விட்டார்கள். இராணுவம் முன்னேறிய பகுதிகளில் மக்கள் தமது இடங்களிலேயே இருக்க வேண்டியதாயிற்று. மற்றவர்கள் தான் பீதியுடன் ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.

எல்லோரும் ஓடுகிறார்கள் என்று சொல்லிவிட முடியாது. எது நடந்தாலும் நடக்கட்டும் இனியொரு முறை இடம்பெயர நாங்கள் தயாரில்லை என்று பலர் உறுதியாக இருந்தார்கள். யுத்தம் நடக்கும் இடங்களில் இருந்து ஓடுவதற்கு முதலில் ஆரம்பித்தார்கள். பின்னர் வீடுகளுக்குத் திரும்பவே முடியாமல் வந்த இடங்களிலேயே குந்திக் கொண்டார்கள். இப்போது குந்தியிருந்த இடங்களையும் விட்டு ஓடுகிறார்கள்.

உலகில் எத்தனையோ நாடுகளில் இப்படியான துயரங்களைப் பார்க்கின்றோம். றுவாண்டாவை விட்டு ஓடியவர்கள் இன்னும் ஓடிக்கொண்டுதான் இருக்கிறார்கள். முன்பு வியட்நாமை விட்டு ஓடியவர்களின் பிரச்சனை இன்னும் தீர்ந்த

பாடாய் இல்லை. ஆப்கானிஸ்தானைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். நாட்டுக்குள்ளேயே இடம்பெயர்பவர்கள் தான் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள். நாட்டை விட்டுப் புலம் பெயர்ந்தவர்கள் பலர் வெறும் பொருளாதார அகதிகளாகவே இருப்பதால் அவர்கள் பாடு பரவாயில்லை என்று தான் சொல்ல வேண்டும்.

ஓடிக்கொண்டிருக்கும் கூட்டத்தோடு இவர்களும் சேர்ந்து கொண்டார்கள். வேலிக்கரையில் மேய்ந்துகொண்டிருந்த ஒரு கோழியின் தலையில் ஒரு பழுத்தல் இலை விழுந்து விட்டது. வானமே தன்மீது இடிந்து விழுந்து விட்டதாகக் கத்திக் கொண்டே அந்தக் கோழி ஓடியது. அக்கம் பக்கத்து வீட்டுக் கோழிகள் அத்தனையும் அதனோடு சேர்ந்து ஓடத் தொடங்கி விட்டனவாம்.

ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் உடமைகளை விட மேலாக தமது உயிரை மதிக்கிறார்கள் என்பது நன்கே தெரிந்தது. ஆனால் மேலான மானம் எனின் உயிரையும் கொடுப்பர் என்று பாடிய புறநானூற்றுப் புலவர் இப்படியான காட்சிகளைக் கண்டிருக்க வில்லைப் போலும். மொத்தத்தில் நம்மவர்கள் மந்தைகளாகி விட்டார்கள். அதுவும் நல்ல மேய்ப்பன் இல்லாத மந்தை களாகி விட்டார்கள்.

இப்போது கந்தசாமிக்கு ஒரே குழப்பமாகிவிட்டது. இந்த இக்கட்டில் அவனது மனைவியும் பிள்ளைகளும் என்ன செய்யப் போகிறார்களோ? அவனது மூளை சிந்திக்க மறுத்தது. ஓடி வருவதானால் அவர்களும் வரத்தானே வேண்டும். மற்றவர் களோடு அவனும் சேர்ந்து ஓடினான்.

கிளாலிக்குச் செல்லும் கச்சாய் வீதி, கொடிகாமத்துக்குச் செல்லும் கண்டி வீதி முழுவதும் மக்கள் தான் நிறைந்து காணப்பட்டார்கள். இவர்களின் இடையே ஆட்களையும் சில உடமைகளையும் ஏற்றிய வாகனங்கள் திணறிக்கொண்டிருந்தன. எங்கும் ஒரே இரைச்சல்... எங்கும் பேரிரைச்சலாகக் கேட்டது. தொடுவானத்தை முட்டுமளவிற்குப் பரந்த ஆழமான மகா சமுத்திரத்திலே பேரிரைச்சலுடன் புயல் வீசுவது போல் அந்த இரைச்சல் இருந்தது. அந்த மக்கள் சென்ற மகா சமுத்திரத்தில் வீசிய பயம் என்னும் புயலில் அகப்பட்ட சிறு படகுகளாய் அந்த வாகனங்கள் திணறிக்கொண்டிருந்தன.

என்ன நடக்கப் போகின்றதோ என்ற அச்சம் எங்கும் பரவி யிருந்தது. ஆனால் என்ன நடந்தாலும் நடக்கட்டும் என்று ஒரு பகுதி மக்கள் ஓடுகின்றவர்களை வேடிக்கை பார்த்துக் கொண்டும் நின்றார்கள். இவர்களும்கூட நாளைக்கே மனம் மாறிப் புறப்பட்டு விடலாம். இராமநாதனும் யசோதாவும் பிள்ளையோடு ஒட்டிக்கொண்டுதான் இருந்தார்கள். இவர்களின் பின்னால் கந்தசாமியும் ஓடுகிறான்;

## அத்தியாயம் 10

கிளாலித்துறையை நெருங்கிய போது பொழுதுபட்டுவிட்டது. மாலையும் இரவும் மயங்கிய அந்தப் பொழுதில் இவர்களுக்கும் மயக்கம் வந்துவிடும்போல் இருந்தது. நடந்த களைப்பும் சன நெரிசலும் சேர்ந்து தொண்டை வறண்டு தாகம் எடுத்தது. ஒரு இடத்தில் யசோதாவையும் பிள்ளையையும் இருத்திவிட்டு இராமநாதனும் கந்தசாமியும் தண்ணீர் தேடிப் போனார்கள்.

மிகுந்த சிரமத்துக்குப் பின்னர் கொஞ்சம் தண்ணீர் கிடைத்தது. கையில் கொண்டுவந்த சிறிய பைவரில் தண்ணீர் நிரப்பிக் கொண்டு திரும்பினார்கள். வரும்போது அங்கே ஒரு பாண் வண்டியில் மக்கள் முண்டியடித்துக்கொண்டு வாங்குவதைக் கண்டார்கள். மூன்று பணிசுகள் மட்டும் கிடைத்தன. தண்ணீரையும் பணிசுகளையும் யசோதாவிடம் கொடுத்தான்.

பிளாஸ்கில் தேனீர் வாங்கி வைத்திருந்தாள் யசோதா. எப்படியும் இராப்பொழுதைச் சமாளிப்பதற்கு இது போதும்; விடிவதற்குள் அக்கரைப்பட்டுவிட வேண்டும்.

முன்நிலவுக் காலம் என்பதால் பிறை நிலவின் ஒளி அங்கே இருளைக் கஷ்டப்பட்டு விரட்டிக்கொண்டிருந்தது. இலேசாகக் காற்றும் வீசியது. கடல் இரைச்சலோடு கலந்த மக்களின் இரைச்சல் எங்கும் எதிரொலித்துக்கொண்டிருந்தது. மொத்தத்தில் குருசேத்திரம்போல கிளாலித்துறை விளங்கியது.

இராமநாதனும் யசோதாவும் சோர்ந்துபோனார்கள். ரமா தாயின் மடியில் தூங்கிவிட்டாள். கந்தசாமி அவர்களை உற்சாக

மூட்ட முயன்றான். அவனுடைய பகிடிகளை ரசிக்கக்கூடிய நிலையில் அவர்கள் இல்லை.

உலகக் கிண்ண கிரிக்கட் போட்டியில் இலங்கை அணியிடம் தோற்றுப்போன இந்திய அணியினரின் நிலையில் அவர்கள் இருந்தார்கள். இந்தியர்கள் இறுதிச் சுற்றில் விளையாடும் தகுதியை இழந்துவிட்டார்கள். தாங்களும் கிளிநொச்சிக்குப் போகமுடியாமல் ஆகிவிடுமோ என்று அவர்களுக்குப் பயம் பிடித்துக்கொண்டது.

நேற்றிரவும் கடலில் போய்க்கொண்டிருந்த வள்ளங்களுக்கு ஷெல் அடிச்சவர்களாம். பெருமான் புண்ணியத்திலை ஒரு சேதமும் இல்லை. ஊரடங்கு போட்டதே கிளாலியாலை போறவையளைத் தடுக்கத்தானாம். மக்களைக் குடாநாட்டினுள் வளைத்து அவர்களைச் சொந்த இடங்களுக்குத் திருப்பி விடுவதுதான் அரசின் திட்டமாம். இப்படி அங்குள்ள பலரும் பலவாறாகப் பேசிக்கொள்வது இவர்களது காதுகளில் ஷெல் துண்டுகள்போல் விழுந்தது.

நேரம் ஓடிக்கொண்டிருந்தது. மக்கள் கூட்டம் நகர்வதாய்த் தெரியவில்லை. அங்கேயுள்ள எல்லாமே இயக்கமற்று ஸ்தம்பித்துப்போய்விட்டனவா? அல்லது இந்தப் பூமியே இயங்காமல் நின்றுவிட்டதா? அல்லது உலகங்களை இயக்கும் பரம்பொருள் மீண்டுமொருமுறை மோனத்தவம் செய்யத்தொடங்கி விட்டானா? ஆண்டவனே இது என்ன சோதனை?

யசோதாவும் இராமநாதனும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்து முழித்தார்கள். இப்போது கந்தசாமி கீதோபதேசம் செய்யத்தொடங்கினான். "எதுக்கும் பயப்படப்படாது. வெளிக்கிட்டு வந்திட்டம் இனி ஒண்டுக்கும் யோசிக்கப்படாது. நீங்கள் புருசன், பெண்சாதி, பிள்ளை எல்லோரும் ஒண்டாய் இருக்கிறியள். என்ரை நிலையைப் பாருங்கோ. நான் இஞ்சை நிக்கிறன் மனிசி பிள்ளையள் என்னபாடோ எனக்குத் தெரியாது. ஆனாலும் நம்பிக்கையோடைதான் இருக்கிறன். நாங்கள் செய்யிறதைச் செய்துகொண்டு போவம்; முடிவு எங்கள் கையில் இல்லை; எல்லாத்தையும் பாரப்படுத்தி கடவுளிட்டை விட வேண்டியதுதான்."

பார்த்தால் ஒரு வேடிக்கைப் பேர்வழியாக இருக்கிறான். இவனிடம் இத்தனை உறுதியான உள்ளம் எங்கே மறைந்து கிடக்கிறது? இராமநாதன் அவனது முகத்தையே இமைகொட்

டாமல் பார்த்துக்கொண்டிருந்தான். கந்தசாமி அவனது முதுகில் தட்டினான். ''சனம் கொஞ்சம் முன்னுக்குப் போகுது போல கிடக்குது. நாங்களும் முடிந்தவரை போய்ப்பாப்பம்'' என்றான் கந்தசாமி.

இராமநாதன் சட்டென்று எழுந்தான். கடைசிவரை பார்த்துவிடுவோம் என்ற நம்பிக்கையுடன் எழுந்தான். பிள்ளையை வாங்கித் தோளில் போட்டுக்கொண்டான். பெட்டிகளைக் கந்தசாமியும் யசோதாவும் தூக்கிக்கொண்டார்கள். கூட்டத்தினிடையே புகுந்து முன்னேறினார்கள்.

'ஆண்டவன்ரை பூமியிலை ஏண்டவன்றை இராச்சியம்' என்பார்கள். வெகு பிரயத்தனத்துடன் கூட்டத்தை விலக்கிக் கொண்டு படகுகளில் ஏறுபவர்களைப் பதிவுசெய்யும் இடத்திற்கு வந்துவிட்டார்கள். இப்போது நிலவும் பட்டுவிட்டது. எங்கும் இருள் கவிந்து அந்த இடத்தையே ஒரு பயங்கரமான அந்தகாரமாக மாற்றிவிட்டது. அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில விளக்குகள் மின்னிக்கொண்டிருந்தன.

அந்த இடத்தில் எப்போதும் நிறைந்திருந்த இரைச்சல் மட்டும் ஓயாமல் அந்த இருள் மண்டிய இரவில் பயங்கரமாகக் கேட்டுக்கொண்டே இருந்தது. வானத்திலே ஒரு வெள்ளியைக் கூடக் காணவில்லை. எங்கோ அண்டவெளியில் அந்தரத்தில் மிதந்துகொண்டிருப்பதுபோல் இராமநாதனுக்குத் தோன்றியது.

தனது தோளில் கிடந்த பிள்ளையை இறுகப் பற்றிக் கொண்டு ஓரிடத்தில் நின்றுவிட்டான் இராமநாதன். அவனுடைய கண்கள் பயணிகள் பதிவுசெய்யப்படுகின்ற இடத்தில் எரிந்துகொண்டிருந்த அந்த விளக்கையே வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தன. யசோதாவால் பெட்டியை இனியும் வைத்திருக்க முடியாது. அவளும் களைத்துச் சோர்ந்துவிட்டாள். இராமநாதனுக்குப் பக்கத்தில் வந்து நின்ற அவளது கைகளிலிருந்த பெட்டி அவளிடம் சொல்லிக்கொள்ளாமல் நிலத்தில் விழுந்தது. அவளுக்குத் தலை சுற்றியது. விழுந்துவிடாமல் இருப்பதற்காக நட்ட கட்டைபோல் நின்றுகொண்டிருந்த இராமநாதனை அணைத்துப் பிடித்துக்கொண்டாள்.

பின்னால் வந்த கந்தசாமிக்கு இவர்களைப் பார்க்க உள்ளம் உருகியது. அவன் இவர்களுக்கு உறவுக்காரனும் இல்லை; நீண்ட நாட்கள் பழகியவனும் இல்லை. இருந்தாலும் அவனது உள்ளம் துடித்தது. மானுடம் மரணித்துவிட்டது என்று ஓலமிடுகிறார்

கள். மானுடம் இன்னும் சாகவில்லை. அங்கும் இங்குமாக சில நல்ல உள்ளங்களில் அது இன்னும் வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறது என்பதை கந்தசாமியின் கண்களிலிருந்து உதிர்ந்த இரண்டு கண்ணீர்த் துளிகள் அந்த கிளாலி மணற்பரப்பில் எழுதிக் கையொப்பமிட்டன.

தனது கையில் இருந்த பெட்டியைக் கீழே வைத்தான். மேசைக்குச் சென்று நான்கு பெயர்களையும் பதிவு செய்து கொண்டான். அங்கே நின்ற ஒருவன் கெதியாகப் படகில் போய் ஏறிக்கொள்ளுமாறு குரல்கொடுத்தான்.

கடல் அலைகள் கரையில் மோதி மீண்டும் கடலிலே சங்கமித்துக்கொண்டிருந்தது. அப்போது எழுந்த அந்தச் சல சலப்பு விரைவாக வந்து சொல்லுவதுபோல இருந்தது.

இராமநாதனிடமிருந்து பிள்ளையைப் பிடுங்கித் தனது தோளில் போட்டுக்கொண்டான். தனது பெட்டியை ஒரு கையில் தூக்கினான் இவன் பிடுங்கிய வேகத்தில் பிள்ளை நித்திரை குழம்பி 'அம்மா...' என்று முனகியது. இரண்டுதரம் தோள் களைக் குலுக்கி அவளைச் சாந்தப்படுத்தினான். பிள்ளையின் சிணுங்கல் ஓய்ந்தது. ''பெட்டியளைத் தூக்கிக்கொண்டு கெதியா வாருங்கோ'' என்று குரல்கொடுத்தான். ஏதோ மந்திரத்தில் கட்டுண்டவர்களைப்போல் இருவரும் பெட்டிகளுடன் அவனுக் குப் பினனால் போனார்கள்.

''அண்ணை இந்தப் பக்கமா வாருங்கோ; கெதியா ஏறுங்கோ... அடுத்த போட் கொண்டுவந்து விடவேணும்'' அங்கே நின்ற ஒருவன் அவசரப்படுத்தினான்.

''தம்பி, இவை ரெண்டுபேரையும் ஒருக்காப் பிடிச்சு ஏத்து; நல்லாய் களைச்சுப்போச்சினம்'' என்று கந்தசாமி பதில் கொடுத் தான். இருவரையும் படகில் ஏற்றியதும் அவன் சொன்னான்: ''அண்ணை, நீங்கள் அடுத்த போட்டிலைதான் ஏறவேணும். ஒண்டும் பிரச்சினையில்லை; எல்லாம் ஒண்டாத்தான் வெளிக் கிடும்.''

கந்தசாமி ஏதோ சொல்ல வாயெடுத்தான். அதற்குள் படகு கடலின் உள்ளே போக, அடுத்த படகு வந்துவிட்டது. கந்தசாமி அதில் ஏறிக்கொண்டான். பிள்ளை மீண்டுமொரு முறை சிணுங்கிவிட்டு அவனது கழுத்தை இறுகப் பற்றிக்கொண்டு படுத்துவிட்டது. அந்த நேரத்தில் வீசிய குளிர்ந்த காற்று

இதமாக இருந்தது. அவனுக்கும் இலேசாகக் கண்ணைச் சுழற்றியது. தான் தூங்கிவிடக்கூடாது என்பதால் இரண்டுதரம் தோள்களை உலுப்பி தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டான்.

முன்னால் நின்ற படகின் இயந்திரம் வேலைசெய்யத் தொடங்கியது. அது புறப்படத் தயாராகிவிட்டது. அந்தத் தாய்ப் படகுடன் ஏழு கட்டுப்படகுகள் பிணைக்கப்பட்டன. பின்னால் உள்ள படகுகளைத் தாய்ப் படகு இழுத்துச் செல்லும். இப்போது எல்லாப் படகுகளும் அசைந்தன. அவர்களது பயணம் தொடங்கிவிட்டது. அவர்கள் இப்போது சனக்கூட்டத்தின் இரைச்சலிலிருந்து விலகிச் சென்றுகொண்டிருக்கிறார்கள். படிப்படியாகக் குறைந்து அந்த இரைச்சல் அடங்கிப்போகிறது.

முன்னால் போய்க்கொண்டிருக்கும் ஒரு படகில் மௌனமாக இராமநாதன் அமர்ந்திருக்கிறான். யசோதா தனது கைகள் போட்டபடி அவன்மீது சாய்ந்திருக்கிறாள். அங்கே கடலில் வீசிய குளிர்ந்த காற்று அவளை ஆசுவாசப்படுத்தியது.

அவளது உணர்ச்சி நரம்புகள் இலேசாகப் புத்துயிர் பெற்றன. ரமாவைப் பற்றிய எண்ணம் உடனடியாக அவளது மூளையில் தோன்றியது. கணவனது தோள்களில் சாய்ந்தபடியே கேட்டாள், ''ரமா நித்திரையாப்பா? பிள்ளையை எங்கே வைச்சிருக்கிறியள்?'' ''ரமா ஓ... ஓ... அவளைக் கந்தசாமியிட்டைக் குடுத்திட்டன்; அவன் வைச்சிருக்கிறான்'' என்று பதில் சொன்னான் இராமநாதன்.

அப்போது படகுகள் தண்ணீரில் போவதால் எழுப்பிய சலசல ஓசையின் நடுவே ஒரு வெடிச்சத்தம் கேட்டது. தொடர்ந்து பல வெடிச்சத்தங்கள். இருட்டில் உறங்கிக்கொண்டிருந்த கடலை அதிரடித்தன. படகுகள் தொடர்பு அறுந்து இரண்டு பக்கமும் தள்ளப்பட்டன. படகில் இருந்தவர்கள் எழுப்பிய அவலக் குரல் கடலின் மேற்பரப்பில் எதிரொலித்து ஆகாயமெங்கும் பரவியது.

எத்தனை தெய்வங்களுக்கு இந்த மண்ணுலகில் கோயில் உண்டோ அத்தனை தெய்வங்களின் பெயர்களும் அங்கே கேட்டன. இந்த மனித அவலத்தைப் பொறுக்கமாட்டாமல் கடலன்னைதான் அத்தனை தெய்வங்களையும் வாய்விட்டுக் கூப்பிடுகிறாளா? இல்லை... மேலேயிருந்து பார்த்துக்கொண்டிருந்த அத்தனை விண்மீன்களும் ஒருமித்து அழைக்கின்றனவா?

அடுக்கடுக்காக நான்கு, ஐந்து ஷெல்கள் வெடித்து ஒய்ந்து விட்டன. ஆனால் அவலக் குரல்கள் மட்டும் ஓயவே இல்லை.

அங்கும் இங்குமாகத் தத்தளித்த படகுகளின் ஓட்டிகள் படகுகளை நெறிப்படுத்த முயன்றார்கள். ஆபத்தில் உதவுவதற்கென வைத்திருந்த பாய்களை விரித்துவைக்கத் தொடங்கினார்கள். அவர்களின் அநுபவம் அந்த இருளிலும் கடல்வழியைக் கண்டு படகுகளைச் செலுத்துவதற்கு உதவியாக இருந்தது.

எல்லாப் படகுகளும் சரியாக இருக்கின்றனவா என்பது யாருக்கும் தெரியவில்லை. மறுகரைக்குச் சென்று சேர்ந்தபிறகு தான் எதையும் சொல்லமுடியும். கந்தசாமியின் வள்ளம் தப்பிப் பிழைத்துவிட்டது. இதில் இருந்த எவருக்கும் சிறு காயம்கூட ஏற்படவில்லை. இந்த ரகளையில் முழித்துக்கொண்ட ரமா பயத்தால் வாயடைத்துப்போனாள். அவளுக்கு அழுவதற்குக் கூட நா எழவில்லை. கந்தசாமியின் கழுத்தை இறுக்கமாகப் பிடித்துக்கொண்டு அவனது தோளில் படுத்துக் கிடந்தாள். நட்டாற்றில் தத்தளிப்பவன் அங்கே மிதந்துவந்த மரக் கட்டையை ஆதங்கமாகப் பற்றிக்கொள்வதுபோல் அவள் கந்தசாமியைப் பற்றி இருந்தாள்.

கந்தசாமி மூன்று பிள்ளைகளைப் பெற்றவன். பிள்ளை தன்னை இறுகப் பற்றுதலில் இருந்து அவள் நன்றாகப் பயந்து விட்டாள் என்பது அவனுக்குத் தெரிந்தது. அவனது தந்தை உள்ளம் உருகியது. கண்கள் பனித்தன. பிள்ளையின் முதுகில் ஆதரவாகத் தட்டியும் கொடுத்தான்.

இப்போது அவனுக்கு இராமநாதனைப் பற்றிய நினைவு வந்தது. இராமநாதனுக்கும் யசோதாவுக்கும் என்ன ஆகியிருக்குமோ என்று அவனது மனம் துடித்துக்கொண்டது. "ஆண்டவனே, இந்தப் பிஞ்சை அநாதையாக்கிப்போடாதை. அவர்களுக்கு ஒன்றும் நடந்திருக்கக்கூடாது" என்று உள்ளம் உருகினான்.

அவன் கடவுளிடம் மன்றாட முயன்றான். ஆனால் அவனது மனத்தில் எழுந்த எத்தனையோ எண்ண அலைகள் ஒன்றன் பின் ஒன்றாக வந்து அவனது மன்றாட்டத்தைக் குழப்பிவிட்டன. அவனது மனம் ஒரு நிலையில் நிற்க மறுத்தது. அந்த இருளில் பாயின் உதவியுடன் படகு மெள்ள மெள்ள நகர்ந்து கொண்டிருந்தது.

கொஞ்ச நேரத்திற்கு முன்னர் அவலக் குரல்களால் கதி கலங்கிப்போயிருந்த கடல் இப்போது தன்னுடைய வழமையான சலசலப்பை மட்டும் எழுப்பிக்கொண்டு அமைதியாகக் கிடந்தது. படகில் இருந்தவர்கள் எதுவுமே பேசவில்லை. கந்தசாமி அந்த இருட்டில் ஒரே திசையில் கண்களைத் திறந்தபடியே பார்த்துக்கொண்டிருந்தான்.

சற்றுத் தூரத்தில் கடலின் மேற்பரப்பில் ஒரு தீபம் அவனது கண்களுக்குத் தோன்றியது. அது நீரின் மேற்பரப்பில் உயர்ந்து வளர்ந்துகொண்டு வந்தது. அந்த ஒளிப்பிரவாகத்தில் வெள்ளி பாதரசம்போலக் கடலின் மேற்பரப்பு மின்னியது. திரள் திரளாக வெள்ளி அலைகள் எழுந்து தாழ்வது அவனது கண்களுக்கு நன்றாகத் தெரிந்தது. அந்த மேற்பரப்பில் இரண்டு உருவங்கள் இப்போது தெரிகின்றன.

முழுவதும் வெள்ளை உடையில் ஒரு ஆண் உருவம் தெரிகிறது. அதற்குப் பக்கத்தில் வெள்ளைச் சேலையுடன் ஒரு பெண் உருவம். அதன் கருங்கூந்தல் காற்றில் அலை அலையாக அசைந்தாட காட்சி தருகிறது. இது வேறு யாருமல்ல. இராமநாதனும் யசோதாவும்தான். இருவரும் தமது கைகளை கந்தசாமி நோக்கி விரித்தபடி மெள்ள மெள்ள நீரின் மேல் நடந்து வருகிறார்கள்.

கடவுளே! இது என்ன? இவர்கள் என்ன கேட்கிறார்கள்? ஒருவேளை ரமாவை... தங்கள் பிள்ளையைக் கேட்கிறார்களா? அப்படியானால்.. அப்படியானால்.. அவர்களுக்கு ஏதோ நடக்கக் கூடாதது நடந்து விட்டதா? கந்தசாமியின் உணர்வுகள் ஸ்தம்பித்து விட்டன. அவனது தசைகள் இறுகி இரும்பாயின. பிள்ளையை மேலும் இறுக்கமாகப் பற்றிக் கொள்கிறான்.

அவனுடைய சப்த நாடிகளிலும் ஓடிக் கொண்டிருந்த குருதி ஒருகணம் உறைந்துவிட்டது. குளிர்ந்த காற்று வீசிக் கொண்டிருந்த அந்தக் கடலிலும் அவனுக்குத் தெப்பமாக வியர்த்தது. பயத்தால் உடல் இலேசாக நடுங்கியது. அந்தப் பயத்தின் வெளிப்பாடாக அவன் ''ஐயோ வேண்டாம் வேண்டாம்'' என்று கத்திவிட்டான்.

ஏற்கனவே பயத்தில் ஒடுங்கிப் போய் இருந்த மற்றவர்களுக்கு இவன் கத்தியதைக் கேட்டதும் என்னவோ ஏதோவென்று பரபரப்புடன் பார்த்தார்கள். படகு ஓட்டுபவன் என்ன நடந்ததென்று புரியாமல் கந்தசாமியைப் பார்த்தான்.

அவனுக்கு இது பழகிப்போன தொழில் என்பதால் தனது கடமையைச் செய்துகொண்டிருந்தானேயொழிய உண்மையில் அவனும் பயந்துகொண்டுதான் இருந்தான்.

அப்போதுதான் தூக்கத்தில் இருந்து முழிப்பவன் போல கந்தசாமி திகைப்புடன் சுற்றுமுற்றும் பார்த்தான். கடலின் மேற்பரப்பில் அவன் கண்ட காட்சியை படகிலுள்ள மற்றவர்கள் காணவில்லைப்போலும். அப்படி அவர்கள் கண்டிருந்தால் அவனிடம் இப்படி என்ன நடந்தது என்று கேட்டிருக்க மாட்டார்கள். அவன் ஒன்றும் பேசவில்லை. இவன் ஏதோ பயத்தில் கத்தியிருக்க வேண்டும் என்று மற்றவர்கள் கதைத்துக் கொண்டார்கள்.

இப்போது குழந்தையை தோளில் இருந்து இறக்கித் தனது மடியில் வளர்த்திக் கொண்டான்.

தான் சற்று முன்னர் கண்டது உண்மையான காட்சி தானா அல்லது வெறும் பிரமைதானா? என்பதை அறிய அவனது உள்ளம் அவாவியது. அந்த நேரத்தில் மற்றவர்கள் ''கனவு கண்டு பயந்தாயா'' என்று கேட்டது கந்தசாமிக்கு ரோசத்தைக் கிளப்பி விட்டது. பிள்ளையைத் தோளில் போட்டபடி எப்படி அவன் நித்திரை கொள்ள முடியும்? ஆம் நித்திரையும் கொள்ளவில்லை. கனவும் காணவில்லை. அப்படியானால் அவன் கண்டது...?

கடலின் மேல் தோன்றியது கானல் நீரா? அல்லது மனப் பிரமையின் வெளிப்பாடா? அவனால் எதையும் தீர்மானமாகச் சொல்ல முடியாமல் இருந்தது. அவன் விழித்தபடிதான் இருந்திருக்கிறான். கடலில் தோன்றிய தீபத்தைக் கண்டிருக்கிறான். இந்த நம்பிக்கையோடு அதே திசையில் மீண்டும் பார்த்தான். இப்போது ஒன்றையும் காணவில்லை. எங்கும் தன் மயமாய் பரவிக் கிடந்த இருளில் இப்போது எதையுமே அவனால் காண முடியவில்லை.

இது என்ன மாயவித்தை? கடவுளே, ஒரு வேளை அப்படி இருக்குமோ? உண்மையில் இராமநாதனுக்கும் யசோதாவுக்கும் ஏதாவது விபரீதம் நடந்திருக்குமோ? நடந்திருக்கக் கூடாது. அப்படி எதுவும் ஆகியிருக்கக் கூடாது. அவனது மனதுக்குள் குழப்பம் உண்டானது.

அப்போது மடியில் கிடந்த குழந்தை கண் விழித்து 'அம்மா' என்று அழைத்தது. அவன் என்ன செய்வான்? எதுவும் சொல்ல

வாய் வரவில்லை. அவளது பட்டுப் போன்ற தலை முடியைத் தடவிக் கொடுத்து ''அம்மா வருவா'' என்று சொன்னான். எல்லாம் விளங்கியவள் போலக் குழந்தையும் அடம் பிடிக்காமல் பேசாமல் இருந்து விட்டாள். அவனது மடியின் இளஞ் சூடு அங்கே வீசிய குளிர் காற்றுக்கு இதமாய் இருந்ததால் அவள் பேசாமல் இருந்து விட்டாள் போலும்.

இப்போது இலேசாகக் கடலின் மேற்பரப்பு வெளிக்கத் தொடங்கியது, தொலைவில் இருந்து பறவைகள் கத்துகின்ற சத்தம் இலேசாகக் கேட்டது. கரையை நெருங்குகிறோம் என்பதையும், விடிகாலைப் பொழுது வரப்போகிறது என்பதையும் அவன் புரிந்து கொண்டான்.

படகில் இருந்தவர்கள் பரபரப்படைந்தார்கள். படகு துறையை நெருங்கி விட்டது. 'நான் சொல்லுகிறவரை யாரும் இறங்க வேண்டாம்' என்று ஓட்டிகளில் ஒருவன் கத்தினான். சற்று நேரத்தில் படகு நிறுத்தப்பட்டு நங்கூரம் போடப்பட்டது. இப்போது எல்லோரும் இறங்கினார்கள்.

தனது பெட்டியையும் குழந்தையையும் தூக்கிக் கொண்டு கரையேறினான் கந்தசாமி. அநேகமாக மற்றப் படகுகளும் கரைக்கு வந்திருக்க வேண்டும். கூட்டம் கூட்டமாக முதற் படகுகளில் வந்து இறங்கிய மனிதர்கள் நின்றார்கள். ஒவ்வொரு கூட்டத்திலும் புகுந்து இராமநாதனையும் யசோதாவையும் தேடினான். எங்குமே அவர்களைக் காணவில்லை.

அவனுக்குப் பயம் பிடித்துக் கொண்டது பார்த்த கூட்டங்களிடையே மீண்டும் புகுந்து தேடினான். அவன் எத்தனை முறை தேடிய போதும் இராமநாதனையும் யசோதாவையும் கண்டு பிடிக்கவே முடியவில்லை. அவனது தேகம் நடுங்கியது. கால்கள் நடக்க மறுத்தன. இவன் மீண்டும் மீண்டும் வந்து யாரையோ தேடுகிறான் என்பதைக் கூட்டத்தில் இருந்த ஒருவர் அவதானித்தரர்.

இவனது படபடப்பைப் பார்க்க அவருக்குப் பாவமாக இருந்தது. அனுதாபம் கலந்த குரலில் அவர் கூறினார். ''ராத்திரிச் செல் அடியிலை இரண்டு படகுகள் தாண்டு போச்சாம், இது வரையில நாலு பொடிகள் கரை ஒதுங்கி எடுத்து வச்சிருக்கினையாம், அங்கை போய் விசாரித்துப்பாரும்''. சொன்னவர் கொஞ்சம் தொலைவில் தெரிந்த ஒரு இடத்தைச் சுட்டிக் காட்டினார்.

தளர்ந்து போய் இருந்த கந்தசாமிக்கு எங்கிருந்து அத்தனை சக்தி வந்ததோ தெரியவில்லை. சொன்னவருக்கு நன்றிகூடச் சொல்லாமல் பிள்ளையுடனும் பெட்டியுடனும் ஒரே ஓட்டமாக ஓடினான். மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்க அந்த இடத்திற்கு ஓடிவந்து நின்றான்.

யுத்தத்தின் அலங்கோலங்களை அந்தக் கடற்கரை நின்று புதுக்கவிதை எழுதிக் கொண்டிருந்தது. அந்த வீடு ஒரு பக்கம் முறிந்து தொங்கிக் கொண்டிருந்தது. அதன் கூரையின் மீது மிச்சமாக இருந்த ஓடுகள் கூட உடைந்து சிதறி என்னேரமும் கழன்று விடுவோம் என்று பயமுறுத்திக் கொண்டிருந்தது. அங்கே நின்ற இருவர் அவ்விடத்தில் கூடியிருந்த மக்களை ஒவ்வொருவராக உள்ளே சென்று பார்த்துவர அனுமதித்தார்கள். பிள்ளையுடன் போய்நின்ற கந்தசாமிக்கு உள்ளே சென்று பார்க்க அனுமதி கிடைத்து விட்டது.

அவனது இதயம் வேகமாக அடித்துக் கொண்டது. உள்ளே போவதற்கு அவனது கால்கள் மறுத்தன. மிகுந்த பிரயத்தனத்துடன் ஒவ்வோர் அடியாக எடுத்து வைத்தான். நிலத்திலே பரப்பப்பட்ட கிடுகுகளின் மேல் அருகருகாக ஐந்து ஆறு உடல்கள் வளர்த்தப்பட்டிருந்தன.

கந்தசாமி மிகவும் நெருங்கி விட்டான். வெள்ளைத் துணியால் அவை போர்த்தப்பட்டு முகங்கள் மட்டும் வெளியே தெரிந்தன. முதலாவது முகத்தைப் பார்த்தான். அது ஒரு ஆண். அவனுக்கு அந்த முகம் அறிமுகமானதல்ல. இரண்டாவதும் அப்படித்தான். மூன்றாவது ஒரு பெண்ணின் முகம். அவனுக்கு நன்கு பழக்கமான முகம். அவனது கண்கள் அந்த முகத்தைப் பார்க்க முயன்றன. அவனது கையில் இருந்த குழந்தை ''அம்மா'' என்று கத்தியது.

கந்தசாமியின் இதயம் வெடித்துச் சுக்கல் சுக்கலாகச் சிதறியது. எது நடக்கக் கூடாது என்று அவன் இவ்வளவு நேரமும் பயந்து கொண்டிருந்தானோ அது நடந்துவிட்டது. ஐயோ இந்தக் கொடுமையை அவன் எப்படித் தாங்கமுடியும்? அருகருகாக யசோதாவினதும் இராமநாதனினதும் உடல்களை அவன் இன்னமும் பார்த்துக் கொண்டு நிற்கிறானே!

கடவுளே, இந்தக் காட்சியைப் பார்ப்பதற்குத்தானா அவன் அவர்களோடு வந்தான்? குழந்தை ''அம்மா, அம்மா'' என்று மீண்டும் கத்தியது. குழந்தையை அணைத்துக் கொண்டு அவனும் கத்தினான்.

யுத்த அரக்கனே, உனது அசுரப்பசி இன்றோடு தீர்ந்து விடப் போகிறதா? இல்லை. இந்த மண்ணில் நீ இதுவரையில் எத்தனை உயிர்களை விழுங்கி விட்டாய்? இந்த உயிர்களைத் தின்னத்தின்ன உனது பசி மேலும் மேலும் அதிகமாகிக் கொண்டே போகிறது.

உனது பசியும் அடங்கப் போவதில்லை. இந்த யுத்தமும் முடியப் போவதில்லை. ஒவ்வொரு முறையும் இறுதிப் போர் என்று அறிவிக்கிறார்கள். அந்த ஒவ்வொரு தடவையும் அது தான் போரின் ஆரம்பமாக இருக்கிறது. ஆம், இது ஒரு முடி வில்லாத ஆரம்பம் தான்!

பிள்ளையை அணைத்தபடியே ஓவென்று அழவும் முடியா மல் இதயத்திலிருந்து பீறிட்டு வரும் அழுகையை அடக்கவும் முடியாமல் சிறு பிள்ளைபோல வெம்பி வெம்பி அழுது கொண்டு நிற்கிறான் கந்தசாமி. அவனது கையில் இருந்த "குழந்தை அப்பாவிடம் போவோம்" என்கிறது. அவன் அசை யாமல் நிற்கவே அவனது கன்னங்களை பிஞ்சுக் கையால் தடவி "அப்பாவிடம்..." என்கிறது.

இதுவரையில் அவனது கட்டுக்குள் நின்ற அழுகை இப்போது கட்டுக்கு அடங்காமல் அவனையும் மீறிக்கொண்டு வெளிவரு கிறது. ஓவென்று வாய்விட்டு அழுகிறான் கந்தசாமி.

அவனது வன்னிப் பயணமும் இத்துடன் முடிந்து விட வில்லை. அது இப்போதுதான் ஆரம்பமாகிறது! ஆம்! இங்கு எல்லாமே முடிவில்லாத ஆரம்பங்கள் தான்!

முற்றும்.

BOASCO ARTONE PRINTERS